# மனையுறை புறாக்கள்



புலவர் கா. கோவிந்தனார்

# மணையுறை புறாக்கள்

(நெடுநல்வாடை — விளக்கவுரை)

ஆசிரியர் :

புலவர். கா. கோவிந்தனார் எம்.ஏ.

எழிலகம்

46, செல்வ வினாயகர் கோயில் தெரு,

திருவத்திபுரம் (செய்யாறு)

604 407.

எழிலகம் வெளியீடு: எண் : 11
முதற்பதிப்பு: நவம்பர் 1991
உரிமை: பதிப்பகத்தாருக்கு.

விலை. ரூ. **15**

வெளியீடு :

***எழிலகம்***
46, செல்வ வினாயகர் கோயில் தெரு,
திருவத்திபுரம் (செய்யாறு)
திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம்,
604 407.

கிடைக்குமிடம் :

***17/12, பீட்டர்ஸ் சாலைக் குடியிருப்பு,***
இராயப்பேட்டை, சென்னை—600 014.

அச்சிட்டோர் :

**கமலம் பிரஸ்,**
காஞ்சிபுரம்—631 502.

# பதிப்புரை

இருபதாம் நூற்றாண்டு தமிழகத்தின் வரலாற்றில், தனக்கென ஒரு சிறப்பிடத்தைப் பெறத்தக்கவகையில், நல்ல தமிழ் அறிஞராக, வரலாற்றுத் திறனாய்வாளராக, செந்தமிழ்ப் பேச்சாளராக, இலக்கியப் படைப்பாளராக, பாதைமாறாத பகுத்தறிவுவாதியாக, அப்பழுக்கற்ற அரசியல் தலைவராக, சட்டமன்றப் பேரவைத் தலைவராக என பல்திறன்படைத்த நற்றமிழ்ப் புலவராய் விளங்கியவர் புலவர். கா. கோவிந்தனார் அவர்கள்.

''தமிழுக்கும், தமிழ்ப்புலவர்கட்கும், தமிழ் நாட்டுக்கும், தொண்டாற்றத் தன்னையே அர்ப்பணித்தவர்'' என்றும் பேரறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டப் பெற்ற பேறு பெற்றவர். பைந்தமிழ் வல்ல புலவராய் உயர்ந்து, சங்கத் தமிழ் ஏடுகளிலெல்லாம் திளைத்து, வரலாற்றுக்கண் கொண்டு ஆய்ந்து, தொல் காலத்தமிழர் வாழ்வை இக்காலத்தவரும் தெளிந்திடுமாறு தேன்தமிழ்ச்சுவடிகளாக வரைந்து வழங்கிய பெருமை உடையவர் புலவர் கோவிந்தனார் அவர்கள்.

புலவர்களுள் புலவராய் விளங்கி, திருவண்ணாமலை குன்றக்குடி ஆதினத்தாரின் ''புலவரேறு'' பட்டம், தமிழக அரசின் ''திரு. வி. க. விருது,'' மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் ''தமிழ்ப்பேரவைச் செம்மல்'' பட்டம், போன்ற சிறப்புகளைப் பெற்ற புலவர் அவர்களது தமிழ்ப்பணி பொன் விழா கண்டது சிறப்பினையுடையது.

''என் தமிழ்ப்பணி'' என்ற தலைப்பில் புலவர் அவர்கள் எழுதிய கட்டுரையில் ''என் எழுத்துப்பணி தொடரும். குறள்பற்றி, சங்க இலக்கியங்கள் பற்றி பல தலைப்புகளில் என் எழுத்துப்பணி ஓரளவேனும் முற்றுப் பெறும்'' ஒன்று தம் தமிழ்ப் பணியைத் தொடர வேண்டும் என்ற தணியா ஆவலை வெளியிட்டுள்ளார். ஆனால் காலம் இடம் தரத்தவறிவிட்டதனால் முற்றுப் பெறாத நிலையிலேயே அவருடைய எழுத்துப்பணி எச்சமாகவே நின்று போயிற்று காலம் செய்த கொடுமை அது!

தமிழால் உயர்ந்து, தம் தமிழ்ப் பணிமூலம் தமிழுக்கும் உயர்வு தேடித் தரும் வகையில், எழுத்துலகம் நினைவு கொள்ளும் வண்ணம் நூற்பணியாற்றிய புலவர் அவர்கள், 'செத்தும் பொருள் கொடுத்த சீதக்காதி வள்ளல்' போல, தம் மறைவிற்குப் பின்னும் தமிழுக்கு அணிசெய்யும் வகையில் பல இலக்கியப் படைப்புகளைத் தம் கையெழுத்து வடிவிலே அளித்துச் சென்றுள்ளார்.

அந்த எழுத்துச் சுவடிகளை யெல்லாம் அச்சுவடிவில் வெளியிடுவதைத் தன் தலையாய கடமையாக எழிலகம் ஏற்று அதன் முதற் கட்டமாக மனையுறை புறாக்கள் என்ற இந்தநூலை தமிழ்கூறு நல்லுலகத்தின் முன் படைக்கிறோம்.

''மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம் புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே''

என்ற புறநானூற்று மொழிகளுக்கேற்ப, புகழுடம்பு பெற்றுவிட்ட புலவர் பெருந்தகை இறவாத புகழுடைய இலக்கியங்கள் பலவற்றைத் தமிழன்னைக்கு அணி செய்ய அளித்து விட்டுச் சென்றுள்ளார். புலவர் அவர்களின் முன்னைய படைப்புகளுக்குத் தமிழகத்துப் பெரியோர் களாகிய தாங்கள் காட்டிய பேரன்பையும், பாராட்டையும், ஆதரவினையும் தொடர்ந்து அளித்திட வேண்டுகிறோம்.

''தமிழுக்குத் தொண்டு செய்வார் சாவதில்லை'' என்றார் பாவேந்தர். தம் வாழ்நாள் முழுவதும், காலம் கரம்பிடித்து அழைத்துப்போன அந்தக் கடைசி நொடிவரை, தமிழ்ப்பணி ஆற்றிய புலவர் வாழ்வார்! அவர் தமிழ் உலகிற்கு அளித்துள்ள இலக்கியச் செல்வங்கள் உள்ளவரை என்றென்றும் நிலைத்து வாழ்வார்! தமிழ் படிப்போர் நெஞ்சமெல்லாம் நிறைந்து வாழ்வார்! என்பது உறுதி.

எழிலகம் பதிப்பகத்தார்

# முன்னுரை

தமிழ்மொழி இனிமை வாய்ந்தது. ''இனிமையால் இயன்ற இளமகளிர்'' என்ற பொருள்படவந்த ''தமிழ் தழீஇய சாயலவர்'' என்ற தொடரில்வரும், ''தமிழ்'' என்ற சொல்லே, இனிமை எனும் பொருள் தருவதாகும் எனக் கூறித், தமிழ் மொழிக்குப் பெருந்தொண்டு புரிந்துள்ளார், சீவகசிந்தாமணி என்னும் பெருங்காப்பியப் பேராசிரியர் திருத்தக்கதேவர்.

இனிய சொற்களைத் தேர்ந்து, இனிமையாகச் சொல்லாட விரும்பிய தமிழர், தாம் கூற விரும்பும் ஒவ்வொரு கருத்தும் இனிமையுடையவாதல் வேண்டும்; இனிக்கும் வகையில் உரைக்கப் பெறுதல் வேண்டும் எனவும் விரும்பினார்கள். அவ்வாறே உரைத்தும் வந்தார்கள். செந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் இச்சிறப்புடையவாம்.

''உள்ளத்தில் உண்மையொழி உண்டாயின்வாக்கினிலே ஒளி உண்டாகும்'' என்றார் ஒரு பெரியார். தமிழர் வாக்கு இனிமை வாய்ந்தது என்றால், அவர் உள்ளமும், அவ்வுள்ளம் உந்த உளவாகும் அவர் செயல்பாடும் இனிமை வாய்ந்தனவே ஆகும். இது உண்மை என்பதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் காட்டும் படப்பிடிப்பினைக்காணும் வாய்ப்பினைப் பெற்றார் அனைவரும் உணர்வர்.

பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த நம் பழம் பெரும் மூதாதையர் தம் பண்பாட்டுப் பெருமையினை, இற்றைத் தமிழரும், பிறரும் அறிந்து கொள்ளுதல் வேண்டும் என்ற அவாவின் விளைவாக, அக்காலப் புலவர்

மக்கள், ஆயிரம் ஆயிரம் பாக்களைப் பாடிச்சென்றார்கள். ஆனால், அவர்கள் பாடிச்சென்ற அப்பாக்களின் களஞ்சியத்தைக் காக்கத் தவறிவிட்டார்கள், விழிப்புணர்வு இருந்தவர்கள், அழிந்தனபோக, அழியாதிருந்த அப்பழம் பாக்களையெல்லாம் அரிதின்முயன்று தேடிக்கொண்டார்கள்.

அவ்வாறு தேடிப்பெற்ற அப்பாக்களை ஊன்றிப் பயின்ற புலமைசால் பெரியார்கள் பலரும் ஒன்றுகூடி இருந்தும், அப் பாக்களில் பொதிந்துகிடக்கும் பொருள் வளம், அப்பாக்களின் அடிஅளவு ஆகியவற்றை அளவுகோலாகக் கொண்டு, அப்பாக்களையெல்லாம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, என்ற தலைப்புக்களில் தொகுத்து நமக்கு அளித்துச் சென்றனர். அவ்வாறு தொகுக்கப் பெற்ற தொகை நூல்களில், இரண்டாவது வரிசையில் நிற்பதான எட்டுத்தொகை நூல்களில், இடம் பெற்றிருக்கும் பாக்களின் நலங்களை, நம் காலமக்களும் உணர்ந்து மகிழவேண்டும் என்ற அவாவினால் உந்தப்பட்ட காரணத்தால், அவ்வரிசையுள் முதற்கண் வைத்துப் பெருமை செய்யப் பெற்றதான நற்றிணையினை, "நற்றிணை விருந்து" என்ற தலைப்பிலும், "நல்ல குறுந்தொகை" எனச் சிறப்பிக்கப்பெற்றதான குறுந்தொகை யினை, "குறுந்தொகைக் கோவை" என்ற தலைப்பிலும், ஆறாவதுஇடம் அளிக்கப்பற்றது ஆயினும், 'கற்றறிந்தார் போற்றும் கலி" என்ற சிறப்பினைப் பெற்றதான கலித் தொகையினைப் "பாலைச்செல்வி", "குறிஞ்சிக்குமரி", "மருதநில மங்கை", "முல்லைக்கொடி", நெய்தற்கன்னி", என்ற ஐந்து தலைப்புகளிலும் முப்பது ஆண்டுகளுக்கு முன்பே விளக்கி வெளியிட்டேன்.

பழந்தமிழர் தொகுத்தளித்த வரிசையிலேயே, அவ் எட்டுத்தொகை நூல் விளக்கங்களையும் அளிக்க வேண்டும் என, என் உள்ளம் விரும்பினாலும், சில பல காரணங்களால், அவ்வரிசை வழிச் செல்ல இயலாமல் போய்விட்டது. அண்மையில், அவ்வரிசையுள், நான்காவதாக நிற்பதும், ''ஒத்தபதிற்றுப்பத்து'' என்ற பாராட்டினைப் பெற்றதுமாகிய பதிற்றுப்பத்தின் விளக்கத்தினை அளிக்க முன் வந்து, முதலும் ஈறும் இல்லாமல் போக, இடையில் எஞ்சி நின்ற எட்டுப் பத்துக்களில் முதல் ஐந்து பத்துக்களை, முறையே, ''புண் உமிழ்குருதி'', ''அடுநெய் ஆவுதி'', ''கமழ்குரல் துழாய்'', ''சுடர்வீ வேங்கை'', ''வடுஅடும் நுண்அயிர்'' என்ற தலைப்புகளில் வெளியிட்டேன். எஞ்சிய பத்துக்களின் விளக்கங்கள் ஏட்டளவாய் உள்ளன, விரைவில் வெளிவரும்.

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடாகிய ''தமிழ்ப்பொழில்'' தென் இந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடாகிய, ''செந்தமிழ்ச் செல்வி'' ஆகிய திங்கள் வெளியீடுகளில் நான் எழுதி வந்த பதினேழு கட்டுரைகளை ஒரு நூலாகத் தொகுத்து, 1935இல் எழுதப்பட்ட முதல் கட்டுரைத் தலைப்பாகிய ''காவிரி'' என்ற பெயரில் ஒரு நூல் வெளியிட்டேன்.

''நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்'' என்ற பெருமைக்குரிய நூலை, வரலாற்றுக் கண்ணோடும், இலக்கியக் கண்ணோடும், பாட்டுடைத் தலைவர்களின் பெருமை சிறுமைகளின் கண்ணோடும் திறனாய்வு செய்தாரும், செய்வாரும் பலர். அத்தகைய திறனாய்வுகள் சிலவற்றைப் படிக்கும் வாய்ப்புக் கிடைக்க அவர்கள் எடுத்த முடிவுகளில் சில, இளங்கோ அடிகளின் படைப்போடு முரண்படுவதாகத் தெரிய வந்தமையால், அம் முரண்பாடுகளைத் தக்க காரணம் காட்டி விளக்கம் அளித்தேன். அவ்வாறு பதினொரு

தலைப்புகளில் அளிக்கப்பட்ட விளக்கங்களின் தொகுப்பை ஒரு நூலாக்கிச் ''சிலம்பொலி'' என்ற தலைப்பில் வெளியிட்டேன்.

திருவாளர் பி. டி. சீனிவாச அய்யங்கார் அவர்களின் ''தமிழர் வரலாறு'' என்ற ஆங்கில நூலைத் தமிழாக்கம் செய்தும், இடைஇடையே, அவர் கூறும் சில கருத்துக்கள் முரண்பட்டனவாகப் புலப்பட, அவற்றைத் திறனாய்வுசெய்து 'பின் இணைப்பாக' வைத்தும், ''தமிழர் வரலாறு. மொழி பெயர்ப்பும் திறனாய்வும்'' என்ற தலைப்பில், ''திருமாவளவன்'', ''புலவர் வரிசை'', ''அரசர் வரிசை'', என்ற 23 நூல்களை வெளியிட்டு, 1951-லேயே என்னையும் ஓர் எழுத்தாளனாகத், தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்துவைத்த பெருமைக்குரிய கழக வெளியீடாக'', என் ஐம்பதாவது படைப்பாக வெளியிட்டேன்.

சங்க இலக்கியப் பாக்களின் தொகுப்புகளாகிய, பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, வரிசையிலே, எட்டுத்தொகையில் சில நூல்களின் திறனாய்வு செய்து வெளியிட்ட எனக்கு அவ்வரிசையில் முதற்கண் வைத்து போற்றப்படும் பத்துப் பாட்டுப் பாக்களின் திறனாய்வு செய்ய வேண்டும் என்ற வேட்கை எழுந்தது இயல்பே, அவ்வேட்கையால் உந்தப்பட்ட நான் 782 அடி முதல் 103 அடிவரை உள்ள அவ்வரிசையுள், அடியளவால் சிறியதாய, ''முல்லைப் பாட்டினை'' முதற்கண் திறனாய்வு செய்து, ''முல்லை'' என்ற தலைப்பில், கழக வெளியீடாக வெளியிட்டேன், அடுத்து பத்துப்பாட்டுள் ஏழாவதாகத்திகழும் ,நெடுநல்வாடை' பாடல் வரிகளைத் திறனாய்வு செய்து ''மனையுறை புறாக்கள்'' என்ற தலைப்பில் எழிலகம் பதிப்பக வெளியீடாக வெளியிட முன் வந்துள்ளேன்.

என் முன்னைய படைப்புகளுக்கு நல்லாதரவு தந்த, தந்து வரும் தமிழ் கூறு நல்லுலகம் இதனையும் இதைத் தொடர்ந்து வரும் பத்துப்பாட்டு வரிசை விளக்கவுரை நூல்களையும் ஆதரித்து ஊக்கம் அளிக்க வேண்டுகிறேன்.

கா. கோவிந்தன்,

# பொருளடக்கம்

—O—


| | |
|---|---|
| பாடிய புலவர் | 1 |
| பாட்டுடைத்தலைவன் | 7 |
| பாடற்பண்பு | 10 |
| நெடுநல்வாடை | 11 |
| கானாற்றங்கரையும் கானற்சோலையும் | 20 |
| கடுங்குளிரையும் பொருட்படுத்தாக் கட்குடியர் | 26 |
| மனை விளக்கேற்றும் மகளிர் நலம் | 31 |
| மனையுறை புறாக்கள் | 36 |
| மங்கல மகளிர் | 38 |
| பகுவாய்த்தடவு | 43 |
| யாழ் இசைவல்ல எழிசை வல்லபி | 48 |
| அரசன்பெருங்கோயில்: அடிக்கல்நட்டுவிழா | 51 |
| அரசன்பெருங்கோயில் | 55 |
| கருவறை | 63 |
| பெரும்பெயர்ப் பாண்டில் | 67 |
| அரசமாதேவியார் | 72 |
| பாசறையில் பேரரசன் | 80 |
| தொகுப்புரை | 88 |

இணைப்பு:

| | |
|---|---|
| நெடுநல்வாடை: மூலம் | 98 |
| என்தமிழ்ப்பணி: புலவர், கா. கோவிந்தனார். | 105 |
| திரு. வி. க, விருது | 116 |
| தமிழ்ப் பேரவைச் செம்மல் பட்டம் | 118 |

# பாடிய புலவர்
## நக்கீரர்

உலக உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்று என்ற உறுபுகழ் பெற்ற பெருமொழி, நம் செந்தமிழ் மொழி. அது, அப்புகழ் பெறுவதற்குக் காரணமாய் விளங்குவன, எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு, ஐம்பெருங் காப்பியம் போலும் பேரிலக்கியங்களும், தொல்காப்பியம் போன்ற ஒல்காப்புகழ் கொண்ட இலக்கண நூல்களும் ஆம்.

இத்தகைய இலக்கிய இலக்கணப் பெருஞ்செல்வங்களைப் பெற்றுப் பேணித்தந்தவர், கடல்கொண்ட மதுரையிலும், கபாடபுரத்திலும், இப்போதைய மதுரையிலும் இருந்து தமிழாய்ந்த புலவர் பெருமக்களாவர். மதுரையில் அமைந்த கடைச்சங்கத்து இருந்து தமிழாய்ந்த புலவர்கள் நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவர்களுள் தலைமைக்கண் நின்றவர்கள், நக்கீரர், கபிலர், பரணர் என்ற முப்பெரும் புலவராவர். இவர்கள் மூவருள்ளும் முதற்கண் வைத்துப் போற்றப்பெறும் பெருமை உடையாரும், தமிழ்ச் சங்கத் தலைவர் என்ற தகுதிப்பாட்டினை பெற்றாரும் ஆய பெரும் புலவர் நக்கீரர் ஆவர்.

தமிழ் வளர்த்த புலவர்களுள், பலர், தம் வரலாறு அறியப் பெறுவதில்லை. இயற்பெயர் தாமும் அறியப் பெறாப் புலவர்களும் உளர். அத்தகைய குறைபாடு, நக்கீரர் பால் இல்லை. அவர் பெயர், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் என அழைக்கப்பெறுவதினாலேயே, அவர் மதுரையில் பிறந்தவர்; கணக்காயனார் என்பார் தம் அருமை மகனார்; நக்கீரனார் என்ற இயற்பெயர் உடையார் என்ற வரலாறுகள் உணர நிற்கும்பேறு நக்கீரர்க்கு உண்டு.

# பொருளடக்கம்

—O—


| | |
|---|---|
| பாடிய புலவர் | 1 |
| பாட்டுடைத்தலைவன் | 7 |
| பாடற்பண்பு | 10 |
| நெடுநல்வாடை | 11 |
| கானாற்றங்கரையும் கானற்சோலையும் | 20 |
| கடுங்குளிரையும் பொருட்படுத்தாக் கட்குடியர் | 26 |
| மனை விளக்கேற்றும் மகளிர் நலம் | 31 |
| மனையுறை புறாக்கள் | 36 |
| மங்கல மகளிர் | 38 |
| பகுவாய்த்தடவு | 43 |
| யாழ் இசைவல்ல ஏழிசை வல்லபி | 48 |
| அரசன்பெருங்கோயில்: அடிக்கல்நட்டுவிழா | 51 |
| அரசன்பெருங்கோயில் | 55 |
| கருவறை | 63 |
| பெரும்பெயர்ப் பாண்டில் | 67 |
| அரசமாதேவியார் | 72 |
| பாசறையில் பேரரசன் | 80 |
| தொகுப்புரை | 88 |

இணைப்பு:

| | |
|---|---|
| நெடுநல்வாடை: மூலம் | 98 |
| என்தமிழ்ப்பணி: புலவர், கா. கோவிந்தனார். | 105 |
| திரு. வி. க, விருது | 116 |
| தமிழ்ப் பேரவைச் செம்மல் பட்டம் | 118 |

இவ்வாறு, வழிவழித் தமிழ் வளர்த்த குடியிலே வந்த நக்கீரரைப் பெற்றெடுத்த தந்தை இன்னார், அவர் பிறந்து வாழ்ந்த பொன்னாடு இன்னது என்பதை அறியும் வாய்ப்பு கிடைத்தது- ஆனால், அவர் பிறந்த குலம் யாது? என்பதை அறியும் வாய்ப்பு கிடைத்திலது. கபிலர், அந்தணர் குலத்தவர் என்பதை, "யானே பரிசிலன்; மன்னும் அந்தணன்"; "அந்தணன் புலவன் கொண்டு வந்தனென்," என்ற அவர் பாடல்களும் (புறம்: 200; 201) "புலன் அழுக்கற்ற அந்தணாளன்" (புறம்: 126) என மாறோக்கத்து நப்பசலையார் பாட்டும் அறிவிப்பதுபோல, தன் குலம் யாது என்பதை நக்கீரரோ, அவர் குலம் யாது என்பதை பிற புலவர்களோ அறிவித்தார் அல்லர்.

இவ்வாறாகவும், நக்கீரர் வேள்வி இயற்றாது, சங்கறுக்கும் தொழில் மேற்கொண்ட பார்ப்பனர் குலத்தைச் சேர்ந்தவர் என்றும், விசுவப் பிராமணர் குலத்தினர் என்றும் கூறுவர் சிலர். அவ்வாறு கூறுவதற்கு ஆதாரமாய் நிற்பது, "கொங்கு தேர் வாழ்க்கை" என்ற குறுந்தொகைச் செய்யுள் பற்றி, இறையனார்க்கும், நக்கீரனார்க்கும் இடையில் நடைபெற்றதாகக் கூறப்படும் சொற்போர்க் கதையே ஆகும். அக்கதையே ஆதாரமற்றது. ஆகவே, குடமுடையான் வீழ்ந்தக்கால் குடமும் விழுந்தவாறுபோல, அக்கதையினை அடிப்படையாகக் கொண்டு கூறப்படும் நக்கீரர் கதையும் ஆதாரமற்றது எனத் தள்ளப் படுவதாம்.

தொல்காப்பியம், பொருளதிகாரத்திற்கு உரை கண்ட பேராசிரியர், "கடைச்சங்கத்தாருள் களவியல் பொருள் கண்ட கணக்காயனார் மகனார் நக்கீரர்" எனப் பெயர்கூறிப் போற்றி, அவர்கள் "புலவுத் துறந்து நோன்புடையராதலின் பொய்கூறார்" எனப் புகழ்வதும், "நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த, மறைமொழிதானே மந்திரம் என்ப"

என்ற தொல்காப்பியம் செய்யுளியல் நூற்பா(தொ.பொ.480) உரையில், பேராசிரியர் ''நக்கீரர், ஒன்னார்த்தெறலும், உவந்தாரை ஆக்கலும் வல்ல தவம் பெற்றவர்'' எனப் போற்றுவதும், இவர் பெருமைக்கு நல்ல எடுத்துக்காட்டு களாம்.

நக்கீரர் பாடல்களைப் படிப்பார்க்கு, அவர் அழுக்காறு இலாத இயல்பினை ஒழுங்காறாக் கொண்ட உயர் பேராளர் என்பது புலனாகும். நக்கீரர், தம்மையொத்த புலவர்களைப் போற்றும் பண்புடையவராவர். தம் காலத்தும், அதற்கு முன்னும் வாழ்ந்து பெரும்புகழ் பெற்ற புலவர் பெருமக்களை, நக்கீரர் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

பாரி, பறம்புமலை நாடாண்ட பெருவீரன். சிறந்த கொடையாளன்- அவன் புகழ் பரவுவது கண்டு, அழுக்காறு கொண்டு, அவனை அழிக்க எண்ணிய மூவேந்தர்கள், அவன் பறம்புக் கோட்டையை முற்றுகை இட்டனர். முற்றுகை பல நாள் நீடித்தது. உள்ளிருப்போர்க்கு உணவுக்குறை யொன்றும் உண்டாகவில்லை. எனினும், அரிசி இல்லாக் குறையொன்று மட்டும் இருந்தது. அதைப், பாரியின் நண்பரும், பெரும் புலவருமாகிய கபிலர் உணர்ந்தார். பறம்பிற்கு உள்ளே நெல்லரிசி கிடைத்தல் அரிது. அரிசி, அரணுக்கு வெளியிலிருந்தே வருதல் வேண்டும். அதற்கு ஓர் உபாயம் கண்டார். பறம்புமலைக் கிளிகளைப் பழக்கினார். கோட்டையைக் கடந்து வெகுதொலைவு சென்று, ஆங்குள்ள வயல்களின்றும் நெற்கதிர்களை வாயிற் கௌவிக் கொணருமாறு பணித்தார். அவையும் அவ்வாறே செய்தன. அரண்வாழ் வீரர் உணவு பெற்றனர். அதனால் ஆற்றல் மிகுந்து விளங்கிய அவர்கள் துணையால், பாரி, பறம்புக் கோட்டையைவிட்டு வெளிப்போந்து மூவேந்தர்களை யும் வென்று துரத்தினான். இவ்வாறு பாரி பெற்ற

வெற்றிக்குக் காரணமாய் கபிலரின் செயலைப் போற்றிப் புகழ்ந்ததோடு, அவரையும் ''உலகெலாம் பரவிய புகழ் உடையார்; பலரும் புகழும் பெரும் புகழுடையார்; வாய்மை வழுவாப் பெரும் புலவன்'' என்றெல்லாம் போற்றிப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபிலன் சூழச் சேய்நின்று
செழும் செய்நெல்லின் விளைகதிர் கொண்டு''
— அகம்: 78

ஊணூர் என்றோர் ஊர். அவ்வூர்க்கு உரியோன் தழும்பன் என்பவன். அவன் வழுதுணைத் தழும்பன் என்ற காரணப் பெயராலும் அழைக்கப் பெறுவான். அவனையும், அவன் ஊணூரையும், அவ்வூணூருக்கு அப்பால் உள்ள மருங்கூர்ப் பட்டினத்தையும் பாராட்டிய நக்கீரர், ''தழும்பன் வாட்போர் வல்லவன். தமிழ்நாடு முழுதும் வென்றவன் புகழ்ந்து நிற்பாருக்குப் பெரும்பொருள் கொடுக்கும் நாளோலக்கச் சிறப்பினன்'' என்றெல்லாம் பாராட்டினார். இவ்வாறு அவனைத் தாம் பாராட்டியதால், பாராட்ட வேண்டிய அளவு அவனைத் தாம் பாராட்டியதாக, அவர் உள்ளம் அமைதி கொள்ளவில்லை. அவனை மேலும் பாராட்ட விரும்பினார். உடனே ''தழும்பன் தூங்கல் ஓரியார் (என்ற புலவர் பெருமானின்) பாராட்டைப் பெற்ற உயர்ந்த பெரும்புகழ் உடையான்'' என்று பாராட்டினார். பின்னரே அவர் உள்ளம் அமைதியுற்றது.

''வாய்வாள்
தமிழகப் படுத்த, இமிழிசை முரசின்
வருநர்க்கு வரையாப் பெருநாள் இருக்கைத்
தூங்கல் பாடிய ஓங்குபெரு நல்லிசைப்
பிடிமிதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன்''
—அகம்: 227

தம்மொத்த புலவரை மதிக்கும் நக்கீரரின் பெருமைக்கு நல்ல எடுத்துக்காட்டு இவை இரண்டும்,

நக்கீரர், நெடுநல்வாடையின் பாட்டுடைத்தலைவனாகிய, தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனை மட்டுமே அல்லாமல், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறான்; கரிகாலன் கிள்ளிவளவன் ஆகிய பேரரசர்களையும், பிடவூர்க்கிழான் பெருஞ்சாத்தன், தித்தன், திதியன், எவ்வி, அன்னி, திரையன், பழையன், எருமை ஊரன், தழும்பன், முசுண்டைபோலும் குறுநில மன்னர்களை யும், தலைவர்களையும் பாராட்டி உள்ளார்.

ஆலத்தூர் கிழார், ஆலம்பேரி சாத்தனார், இடைக் குன்றூர்க்கிழார், எருக்காட்டூர்த் தாயங் கண்ணனார், ஔவையார், கல்லாடனார், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார், கூடபுலவியனார், குறுங்கோழியூர் கிழார், கூடலூர்கிழார், கோவூர்கிழார், பொதும்பில்கிழார், மகனார் மருதன் இளநாகனார், மாங்குடி மருதனார், வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார் முதலிய புலவர்கள், நக்கீரர் காலத்தில் வாழ்ந்தவராவர்.

பத்துப்பாட்டில், திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை ஆகிய இரு நெடும்பாக்களும், நற்றிணையில் ஏழும், குறுந் தொகையில் எட்டும், அகநானூற்றில் பதினேழும், புறநானூற்றில் மூன்றும், நக்கீரர் பாடிய பாக்களாம்.

இவையே அன்றி, 1) கைலை பாதி, காளத்தி பாதி அந்தாதி, 2) திருவீங்கோய்மலை எழுபது 3) திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, 4) திருவேழு கூற்றிருக்கை, 5) பெருந் தேவபாணி, 6) கோபப்பிரசாதம், 7) காரெட்டு 8) போற்றித்

திருக்கலிவெண்பா, 9) திருக்கண்ணப்பர் தேவர் திருமறம் ஆகிய ஒன்பது நூல்களும் நக்கீரர் பாடியவை என்ப. இது ஆய்வுக்கு உரியது. இறையனார் எழுதிய களவியலுக்கு, உரை எழுதியவர் நக்கீரரே.

திருவிளையாடற் புராணமும், காளத்திப் புராணமும், நக்கீரர் பற்றிய பலகதைகளைப் புனைந்துரைத்துள்ளன. திருவிளையாடற் புராணம் "கொங்கு தேர் வாழ்க்கை" என்ற குறுந்தொகைப் பாடல் (பாட்டு : 2) குறித்த கதையையும் காளத்தி புராணம், திருமுருகாற்றுப்படை பாடப்பட்டது. குறித்த கதையையும் கூறுகின்றன; அவை இரண்டுமே நம்ப இயலாதன; உண்மைக்கு மாறானவை எனச் சுருங்கக்கூறி முடிக்கின்றேன். விரிவான ஆராய்ச்சி மேற்கொள்ளின் ஏடு விரியும்.

# பாட்டுடைத் தலைவன்
# தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்

சேர வேந்தருள், செங்குட்டுவன் சிறந்து விளங்குவது போலவும், சோழ வேந்தருள், கரிகால் பெருவளத்தான் சிறந்து விளங்குவது போலவும், பாண்டியருள் சிறந்து விளங்கியவன், தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், செழியன் அரியணை ஏறுங்கால் நனிமிக இளையனாவன். ஆனால் அவன் ஆட்சிக்கீழ் வந்துற்ற பாண்டிய நாடு பொதிய மலைப் பல்வளமும், கொற்கைத் துறை முத்தும் பெற்றுப் பெருஞ் செல்வத்தால் பொலிவுற்றுத் திகழ்ந்தது. இதைக் கண்ணுற்றனர் அவன் பகை அரசர்கள். யானைக் கண்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையும், பெயர் அறியாச் சோழனும், திதியன், எழினி, எருமை யூரன், இருங்கோ வேண்மான், பொருநன் ஆகியோர் அவன் பகைவர். இவர்கள் எழுவரும் ஒன்று கூடி "நாமோ நாற்படையும் நனிமிகப் பெற்ற அவனை வென்றால் நாம் அடையும் பொருளோ மிகப் பலவாம்" என எண்ணி அவனை' அவனூர்க்கே சென்று எதிர்த்தனர்.

இளைஞனே எனினும் ஈடிலாத்திறன் உடையனாய் நெடுஞ்செழியன் பகைவர் செயல் அறிந்தான்; ஆற்றல் மறவரும் ஆன்றோரும் கூடிய அவையினரை நோக்கி, "யாமோ, யானையும், தேரும், மாவும், மறவரும் நிறைந்த பெரும் படை உடையேம். இவனோ இளையன்; இத்தகையான் நாட்டை நின்று புகழ்வார், நம்மால்

நகைக்கத் தக்கோராவர்''. என்பன போலும் பொருள் அற்ற புல்லிய சொற்களை என் உள்ளம் புண்படுமாறு கூறிய, என் ஆற்றல் அறியா அவ்வரசர்களைப் போர்க்களத்தில் வென்று, அவர்களையும், அவர் போர் முரசுகளையும் ஒருங்கே கைப்பற்றி மீளேனாயின், என் ஆட்சிக் கீழ்வாழும் என்நாட்டு மக்கள், தாங்கள் சென்று பிழைப்பதற்கு வழி காணாது கலங்கி நின்று ''எங்கள் நாட்டு அரசன் நனிமிகக் கொடுங் கோலனாயினன்; என் செய்வோம் நாங்கள்'' எனச் செயலற்றுக் கண்ணீர் விட்டுத் தூற்றும் பழி யொடு மிடைந்த ஆட்சி மேற்கொண்டான்போல் இழிவுடையேனாகுக! ஓங்கிய சிறப்பினையும், உயர்ந்த புகழினையும் உடைய மாங்குடி மருதன் முதலாம் புலவர் பெருமக்கள், என்னையும் என் நாட்டையும் பாடிப் போற்றார் ஆகுக! அவர் போற்றாமைக்கு உரிய பழிவந்து உறுக என்னை! பொருள் கொடுத்துப் புரக்கப்பட வேண்டியவர்களாய பாணன், பொருநன், கூத்தன் முதலாம் இரவல் மாக்கள், கண்ணீர் விட்டுக் கண்கலங்கி நிற்குமாறு, அவர்களுக்குப் பொருள் கொடுத்து உதவி புரியலாகா வறுமை வந்தடைக என்னை!'' என வஞ்சினம் கூறி நின்றான்.

வஞ்சினம் உரைத்து விரைந்து தேர் ஏறிப் போர்க்களம் நோக்கிப் புறப்பட்டு விட்டான். நெடுஞ்செழியன். போர்க்களத் தில், கடலிடையே செல்லும் கலம் ஒன்று, காற்று சுழன்றடிக்கச் செல்லும் இடம் இது; செல்லலாகா இடம் இது என்ற வரையறை இன்றிக் கடல் நீரைக் கிழித்துக் கொண்டு எங்கும் ஓடித்திரிவதே போல், களிறுகள், பகைவர் படை நடுவே புகுந்து பெரும் பாழ்செய்து களத்தை எளிதாக்க, அவற்றைத் தொடர்ந்து வீரர்கள் வேலேந்திச் சென்று, பகை வேந்தர் படைகளைப் பாழ்செய்து, வந்த பகைவருள், யானைக் கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையைச்

சிறை செயது விட்டனர். செழியன் படை வீரர்களின் போர்ச் சிறப்பு அறிந்த பகைவர் படை, அவரை எதிர்த்து நிற்க முடியாது புறங் காட்டி ஓடலாயிற்று. ஓடும் படையை விடாது துரத்திச் சென்றான் செழியன்.

கூடல் மாநகர்ப் போரில், சேரன் சிறைப்பட்டுப் போகவே பகைவர் படை சோழநாடு புகுந்து, தஞ்சை மாவட்டத்து ஆலங்கானம் என்னும் இடத்தில் பகைவர் படை அனைத்தையும் அழித்து, அவர்தம், முரசு, குடை, பொருள் முதலாம் வளம் அனைத்தையும் வாரிக் கொண்டு, வெற்றி வீரனாய் வீடு திரும்பினான். புலவர்கள், செழியனைத் ''தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்'' எனப் பெயர் சூட்டிப் பாராட்டினர்.

செழியனை, அவன் அவைக்களப் புலவர்களாகிய நக்கீரர், மாங்குடி மருதனார் மட்டுமல்லாமல், அள்ளூர் நன் முல்லையார், ஆலங்குடி வங்கனார், ஆலம் பேரி சாத்தனார், இடைக்குன்றூர் கிழார், ஈழத்துப் பூதன் தேவன் எருக்காட்டூர்த் தாயங் கண்ணனார், கல்லாடனார், குடபுல வியனார், குறுங் கோழியூர் கிழார், தத்தங்கண்ணனார், பரணர், போராலவாயர், பொதும் பில்கிழார் மகனார், மதுரைக் கணக்காயனார், மருதன் இளநாகனார், முது கூத்தனார், விற்றூற்று வண்ணக்கன் தத்தனார் ஆகிய புலவர்களும் பாராட்டி உள்ளனர்.

## பாடற் பண்பு

கூதிர் காலத்துக் குளிரின் கொடுமையைக் கண்டு கோவலர் கொள்ளும் வருத்தமும், குளிரின் கொடுமை கண்டு அஞ்சுவதினும், பிறந்த ஊரை விட்டு வேற்றூர் செல்ல வேண்டுமே என அஞ்சும் அவர்கள் உள்ளத்தின் ஊர்ப்பற்றும் உணர்த்தப்பட்டிருக்கும் திறனும், குளிர் மிகுதியால், கன்றுக்கும் பால் கொடாது கடிய உதைக்கும் கறவைகளின் இயல்பு உணர்த்தப் பட்டிருக்கும் திறனும் நயந்து பாராட்டற்கு உரியன.

கோடைக்கு ஆரம்: கூதிர்க்குக் கத்தூரி; கோடைக்கு விசிறி, கூதிர்க்கு அகிற்புகை; கோடைக்குத் தொகுவாய்த் தாகத்துக்குக் குளிர் நீர்; கூதிர்க்குப் பகுவாய் தடவில் செந்நெருப்பு; எனக் காலங்களின் தட்பவெப்பநிலைக் கேற்றவாறு வாழும் பழந்தமிழர் வாழ்க்கையின் சிறப்பினைப் படம் பிடித்துக் காட்டியிருக்கும் பாங்கு பாராட்டற்குரியன.

மாலையில் விளக்கேற்றி மலர் தூவி வணங்கல் மகளிர்க்கு அழகு; கணவனைப் பிரிந்த மகளிர் கோலங் கொள்ளுதல் கூடாது என்ற மகளிர்தம் மாண்புகள் உணர்த்தப் பட்டுள்ளன.

வென்றெழு கொடியொடு வேழம் சென்று புகும் குன்று குயின்றன்ன ஓங்கு நிலை வாயிலும்; நிலவுப் பயன் கொள்ளும் நெடு வெண் முற்றமும்; ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பும், ஆறு கிடந்தன்ன அகல் நெடுந் தெருவும், வானுற நிவந்த மேனிலை மருங்கின் வேனிற் பள்ளியும்; அதில் தென் வளி தரூஉம் நேர்வாய்க் கட்டளையும், அக்கால மக்களின் கட்டிடக்கலைச் சிறப்பை நன்கு உணர்த்துவனவாம்.

"புண்பட்ட வீரர்கள் போருக்குப் போக வேண்டாம்" என அன்புரை கூறி, அவர்களோடு நள்ளென் யாமத்தும் உறங்காது உறையும் பழந்தமிழ் அரசர்களின் பண்பு பாராட்டற்குரிய வகையில் கூறப்பட்டுள்ளது.

# 1. நெடுநல்வாடை

வடகிழக்குப் பருவத்துப் பெருமழை ; கார்த்திகைத் திங்கள் இறுதியில் ஒய்ந்துபோகத், தைத்திங்கள் தொடங்கி, ஆடித்திங்கள் வரையும்-நீண்ட கோடைப் பருவத்து ஞாயிற்றின் கொடுமை தாங்கமாட்டாது துயர் உற்றிருந்த மண்ணும் மக்களும், அக் கொடுமை தணிய மனங்குளிரச் செய்யும் சிறப்பு கார்காலத் தொடக்கத்தில், அதாவது ஆவணி தொடக்கத்தில் பெய்யும் முதல் மழைக்கே உரித்து.

வானுற உயர்ந்த பழுமரங்கள் செறிந்த மலை நாட்டகத்தே தான் மழை பெய்யும் வாய்ப்பு மிகுதி. அத்தகைய நிலப்பகுதி, குறிஞ்சியே ஆகும். ஆனால், கார்முகில் கொண்டல் கொண்டலாக, மலை முகடு நோக்கி எழும் காட்சி, அம் மலை நாட்டகத்தார் பார்வையில் படுவது அரிது. மாறாக, அம்மலை நிலத்தை அடுத்த குறுங் காட்டுப் பகுதியாகிய முல்லை நிலத்தார் கண்களுக்கே. கார்மேகம், மலையை வலம்வர எழுவது போல் விரையும் காட்சி புலப்படும். அவர்களே அக்காட்சி நலம் கண்டு களிப்புறுவர்.

நீர் வளம் மிக்க நன்செய் நிலத்தில் செந்நெல் விளைவிக்கும் உழவர் பெருமக்கள், ஆண்டிற்கு மூன்று முறை பயிர் செய்து பயன்காண வேண்டின், முதல் பயிர்க்குத் தொடக்க காலமாக ஆவணியையே தேர்ந்தெடுப்பர்

ஆவணியில் உழவு தொடங்கினால் தான் முப்போகம் காண இயலும். இது நன்செய் நில உழவுக்கு. புன்செய் நில உழவுக்கும் இது பொருந்தும்.

மூன்று அல்லது நான்கு திங்கள்களில் பயன் அளிக்கும் எள், கொள், போலும் கூலப்பயிர்கள் மழையை எதிர்நோக்கி விளைவன. அவற்றை ஆவணியில் விதைத்தால் தான், புரட்டாசி வரை அவ்வப்போது பெய்யும் மழையும், ஐப்பசி-கார்த்திகையில் பெய்யும் பெரு மழையும் பெற்று விளைந்து விடும். ஆகவே அவற்றிற்கும் உழவுத், தொடக்கம் ஆவணி தான்.

ஆவணியில் உழவு தொடங்க வேண்டின், அப்போது தப்பாது மழைபெய்தல் வேண்டும். நாடாளும் அரசன் நல்லவன்; அல்லன கடிந்து அறமே செய்யும் நல்லரசு உடையான். அதனால், அவன் நாட்டவரும் நல்லவரே; அரசும் நல்லரசாக, நாட்டவரும் நல்லவராகும் நிலையில், அந்நாட்டில்மழை பொய்த்துப்போவது இல்லை.

"இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு" (குறள் 545),

"வானம் பொய்யாது; வளம் பிழைப்பு அறியாது; நில
வேந்தன் கொற்றம் சிதையாது; பத்தினிப் பெண்டிர்
இருந்த நாடு"

(சிலம்பு : 15 : 145-147)- என்பர் ஆன்றோர். அதனால் அம்மக்கள் எதிர்பார்த்தவாறே மழை, 'பெய்' எனப் பெய்யும். பண்ணுக்குரிய மைந்தர்கள் எதிர்பார்த்தவாறே

திருண்டு கறுத்த மேகம், கொண்டல் கொண்டலாக எழுந்து, மலை முகடு நோக்கி விரைந்து, மண்ணையும், மக்கள் மனதையும் ஒருசேரக் குளிரச் செய்தது. வந்த புதுமழை, கோடையின் கொடும் வெப்பத்தினின்றும் விடுதலை பெற்றுத் தந்த, மிதமான குளிர்நிலையில் அல்லாமல், உடலையும், உள்ளத்தையும் நிலை குலையப் பண்ணும், கடுங்குளிர் நிலையினதாக, அடைமழையாய்ப், பெருமழையாய்ப் பெய்து ஓய்ந்தது.

பாரோர்: அனைவர்க்கும் பேருவகை அளித்த அப்புதுமழையால், இடர் உற்றார் சிலரும் இல்லாமல் இல்லை. இரவு பகல் எப்போதும், தம் ஆனிரைச் செல்வங்களோடும், ஆடுகளோடும், திறந்த வெளியிலேயே வாழ்க்கை நடத்தும் இயல்பினர் ஆயர். மேலும், பெரு வெள்ளம் பாயும் நிலப்பகுதியும், அந்நீர் குளமாகத் தேங்கி நிற்கும் நிலப்பகுதியும், மேய்ச்சலுக்கு உதவா. மேலும், அடைமழையால் ஆடுகள் இறந்து போகவும் செய்யும்.

"விசும்பின் துளி வீழின் அல்லால் பசும்புல் தலை காண்பு அரிது" என்பதை உணர்ந்தவர்கள் ஆயர். கோடையால்காய்ந்துபோன புல்லும் பூண்டும் கிடைக்காமை கண்டு வருந்தியவர் அவ்வாயர். அதனால், பசும்புல் தலை காட்ட வானம் பெய்யாதா என மழை வரவை விரும்பி எதிர்பார்த்தது உண்மையே. ஆனால் பெய்யத் தொடங்கிய மழை, மண் மேடுகளையும், கரைந்தோடச் செய்யும் பெருமழையாகி, மேலே கூறிய கேடுகளை யெல்லாம் விளைவித்து விட்டமையாலும், திறந்த வெளியில் திரிந்து தொழில் புரிந்து கொண்டிருந்த தம் மேனியைத், தம் நிரைகளைப் போலவே முழுக்க நனைத்து விட்டமையாலும், ஆயர்கள் அப் பெருமழையைச் சிறிதே வெறுக்கலாயினர்.

மக்களுக்கெல்லாம் மனம் நிறை மகிழ்ச்சியை அளித்த மழை, ஆயர்கட்கு மட்டும் துயர் விளைத்தது. அவ்வாயர்கள், தம் ஆனிரைகள் பால் அன்பு கொண்டு புல்லும் புனலும் காட்டி, ஓம்பி, "கோவலர் வாழ்க்கை கொடும்பாடு இல்லை" (சிலம்பு: 15: 121) எனப் பாராட்டப்படுவரேனும், ஒரோவொருகால், அடங்காத ஆனிரைகளை அடக்கு வான் வேண்டி, முள் உன்றிய கோலால் குத்திக் கொடுமை செய்வதும் உண்டு. அதற்குத்துணை செய்யும் கொடுங்கோலைக் குறிவைத்தே, மழை கொட்டு கொட்டு எனக்கொட்டும் என்றாலும், அக்கொடுமை அக்கொடுங் கோலைக் கைகளில் தாங்கிச் செல்லும் கோவலரையும் பாதிக்கலாயிற்று.

தம் வாழிடங்களை அடுத்துள்ள நிலப்பகுதியிலேயே தம் நிரைகளை மேய்த்து வந்து ஆயர், இனி, அவ்விடங்களில் வெள்ளம் சூழ்ந்து விட்டமையால், அவை மேய்ச்சலுக்கு உதவாது என்பதறிந்து, வெள்ளம் பாயாத, மழை நீர் தேங்காத மேட்டு நிலங்களைத் தேடித், தம் நிரைகளை ஓட்டிச் செல்வாராயினர். ஆட்டுக்கிடாய் இல்லாத ஆட்டு மந்தை, கொல்லேறு இல்லாத ஆனிரை, எருமைக்கிடாய் இல்லாத எருமை மந்தைகளுக்குப் பெருமையும் இல்லை; பயனும் இல்லை.

நிரை, ஒன்று பலவாகப் பெருகுவதே, ஆயர்தம் செல்வச் செழிப்பிற்கு வழி செய்யுமாதல் அறிந்த ஆயர் அதற்குத் துணை செய்ய ஆட்டுமந்தைகளோடு ஆட்டுக்கிடாய்களையும், ஆனிரைகளோடு கொல்லேறுகளையும், எருமை மந்தை களோடு எருமைக் கிடாய்களையும் உடன் கொண்டு செல்வர்.

கால்நடைச் செல்வங்களின் நல்வாழ்வே, தம் நல்வாழ்வு என்ற உள்ளுணர்வு உடைமையால், அவற்றைப்

பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு சென்று மேய விட்டனர். ஆனால், பெருமழை பெய்வதற்கு முன்னர்த், தம் வாழிடங்களை அடுத்தே மேய்த்து வந்தமையால் வேண்டும் போதெல்லாம், தம் மனைகளுக்குச் சென்று வந்தும், விரும்பும்போதெல்லாம், மனைவி மக்களைக்கண்டு வந்தும், இன்புற்றிருந்தவர்க்கு, இப்போது அவ்வாழிடங்களை விடுத்து மேட்டுநிலம் நோக்கி நெடுந்தொலைவு செல்ல நேர்ந்தமையால், அவ்வாய்ப்பு இல்லாது போகவே, தனித்து விடப்பட்டது, போன்ற உணர்வுக்கு ஆளாகி அல்லல் உற்றனர்.

தனிமையுணர்வு, உள்ளத்தை வருத்தும் அதே நிலையில் கோடைவெய்யிலின் கொடுமையும், கொட்டும் மழையின் கொடுமையும், முடியையும், முகத்தையும் தாக்காவாறு தடுத்து நிறுத்துவான் வேண்டி, கைபோல் அகன்று நீண்ட இதழ்களைக் கொண்ட பெரிய பெரிய காந்தள் மலர்களை, நெருங்கத் தொகுத்த கண்ணியைத், தலையில் சுற்றிக் கொள்ளும் ஆயர்தம் பழக்க வழக்கமும் அவர்களுக்கு இன்னல் தருவவாயிற்று.

துயர் தணிக்கச் சூடிக்கொண்ட அத்தலைமாலை, இப்போது மழையால் நனைந்து ஆயர் துயரை மேலும் பெருக்குவதாயிற்று. மழை நின்று விட்டது: மழைநீரால் நனைவது இப்போது இல்லை. ஆனால் மழை பெய்யும் போது, நீரை உள்ளங் கைபோலும் தம் இதழ்களில் தேக்கிக் கொண்ட காந்தள் மலர்க் கண்ணியிலிருந்து, நீர் சொட்டுச் சொட்டாக, ஆயர் முகத்திலும், தோளிலும் தொடர்ந்து விழுந்து துயர் விளைக்கலாயிற்று.

மழை நனைந்த மேனியைத், தலை மாலையிலிருந்து சொட்டும் துளிகளும் நனைக்கவே, உடல் குளிர் மிகுந்து

நடுங்கலாயிற்று. தாம் தனித்தனியாகப் பிரிந்து கிடப்பதால் வீசும் காற்று, தம் மேனியைத் தழுவி வீசுவதால் குளிர் நடுக்கம் மிகுதியாயிற்று என்பதை உணர்ந்து கொண்ட ஆயர்கள், ஒருவர் மெய், ஒருவர் மெய்யோடு இரண்டறக் கலந்து விட்டதோ எனக் கருதுமளவு நெருங்கி இருந்தால் குளிர் ஓரளவு குறையும் என எண்ணி, அவ்வாறே நெருக்கமாக இருந்தும் பார்த்தனர். ஆனல், அதனாலும் பெரும்பயன் விளையவில்லை. குளிர் அடங்க வில்லை. குளிர் மிகுதியால் மேல்வாய்ப்பற்களும் கீழ் வாய்ப்பற்களும் மோதிப் பறை கொட்டலாயின.

அதனால், குளிரின் கொடுமையிலிருந்து விடுதலைபெற வேறு வழிகாண முயன்றனர். தம் கையோடு எடுத்துச் செல்லும் தீக்கடை கோலால் தீ முட்டிப் பலரும், அந் நெருப்பைச் சூழ நெருங்க அமர்ந்து கொண்டு தம் இரு உள்ளங் கைகளையும் அந் நெருப்பிற்கு அணித்தாக வரித்துக் காட்டுவதும், சூடு ஏறிய உள்ளங்கைகளால் தம் இரு கன்னங்களையும் தடவிக் கொடுப்பதும் ஆகிய குளிர்காய் செயலை, 'மாறிமாறி மேற்கொண்டு தம் குளிரைத் தணித்துக் கொள்ளும் முயற்சி மேற் கொண்டிருந்தனர்.

ஆயர், தம் ஆனிரைகள், வயிறுஆர மேய்வான் வேண்டித் தம் துயரையும் மறந்து, அவற்றைப் புல் கிடைக்கும் மேட்டு நிலங்களுக்குக் கொண்டு சென்று விட்டனர். ஆனால், குளிர், அவ்வானிரைகளையும் கொடுமை செய்யாது விட்டிலது. குளிர் மிகுதியால், அவை, தம் பசியையும் உணராவாயின. பசி அறியாது போகவே, புல் மேய்வதே அவை அறவே மறந்து போயின. மேயும் தொழிலையும் மறக்கடிக்கப் பண்ணும் கொடுமையுடைய தாயிற்று குளிர்.

அம்மட்டோ! ஒரு சிறு பொழுதும் ஒய்ந்திராதுக ஓரிடத்தும் அடங்கியிராமல், ஓடுவதும், ஆடுவதும், உயர் மரம் ஏறித்தாவுவதுமாகத்திரியும் இயல்புடையன குரங்குகள். அக்குரங்குகளையும், அவற்றையெல்லாம் மறந்து உடல்குன்றி அடங்கிக்கிடக்குமாறு செய்து விட்டது குளிர், அம்மட்டோ! பறவைகள், தம் இறக்கைகளை விரித்து விட்டால் ஓயாது பறக்கும்; உயர உயரப் பறக்கும்; விரைந்து விண்நோக்கிப் பறக்கும். ஆனால் குளிரின் கொடுமை, அவை, தம் இறக்கைகளை விரிக்கவும் இயலாவாயின. அதனால் பறக்க எழும் அப்பறவைகள் பறக்க மாட்டாது மண்ணில் வீழ்ந்து மடியலாயின.

கறவைகள், கன்றின்மீது பேரன்பு கொண்டவை; கன்று களுக்குப் பால் தருவதற்காகவே மேய்புலத்திலிருந்து மனை நோக்கி விரையும் இயல்புடையவை. கன்றுகளைத் தம்மிடமிருந்து பிரிப்பதைப் பொறாதவை. அதேபோல் கன்றுகளும், தாய்ப்பசுக்களைக்கண்ட அளவே, துள்ளி ஓடி, முட்டிப் பால் குடிக்கத்துடிப்பவை, ஆனால் குளிர், கறவை, என்று ஆகியவற்றின் அவ்வியல்புகளை அழிக்கும் கொடுமையுடையதாகி விட்டது. அதனால், தாயைக் கண்டு பால் உண்ணும் நினைவே இல்லாமல் தாம் கிடந்த இடத்திலேயே கிடக்கலாயின கன்றுகள். ஒரே வழி கன்றுகள் பசிமிகுந்து பால் உண்ணத் தாயை அணுகினால், கன்றைக் காணமாட்டோமா? கன்று மடியில் வாய் வைத்துப்பாலை உண்ணாதா என ஏங்கும் பசுக்கள், கன்றுகளை அணுகவிடாது, தம் புறங்காலால் உதைத்து உதைத்துத் துரத்துவவாயின என்னே குளிரின் கொடுமை!

"மலை குலைந்தாலும் நிலை குலையாதவன்" என நிலை குலையாமைக்கு எடுத்துக் காட்டாக நிற்பது மலை கூதிர் காலத்துக்குளிர், அம்மலையையும் நடுங்கச்செய்யவல்ல கொடுமை மிகுந்திருந்தது.

"வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோற் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்
நீடிதழ்க் கண்ணி நீரலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க
மாமேயல் மறப்ப மந்தி கூரப்
பறவைகள் படிவன வீழக் கறவை
கன்றுகோ ளொழியக் கடிய வீசிக்
குன்றுகுளிர்ப் பன்ன கூதிர்ப் பானாள்" — 1-12.

உரை:

பொய்யா வானம் = பருவம் தவறாமல் பெய்யும் மேகம்.

வையகம் பனிப்ப = உலகெல்லாம் குளிரால் நடுங்கும் படியாக

வலன் ஏர்பு = வலமாக எழுந்து.

புதுப்பெயல் = கார் காலத்து முதல் மழையை.

பொழிந்தென = பெய்ததாக.

ஆர்கலி முனைஇய = அம் மழையால் பெருகிய பெரு வெள்ளத்தை வெறுத்த

கொடுங்கோல் கோவலர் = கொடிய கோலினை உடைய இடையர்

ஏறுடைய இனம் நிரை = ஏறுகளையுடைய ஆடுகளையும், ஆனிரைகளையும், எருமைகளையும்

வேறுபுலம் பரப்பி = வெள்ளக் கொடுமையில்லாத மேட்டு நிலங்களில் மேயவிட்டு.

புலம் பெயர் புலம்பொடு கலங்கி = தாம் பயின்ற நிலத்தைக் கைவிட்டுப் போன தனிமையினாலேயே வருந்தி

நீடு இதழ்க் கோடல் கண்ணி = நீண்ட இதழ்களையுடைய காந்தள் மலர்களால் தொடுக்கப் பட்டதலை மாலை,

நீர் அலைக் கலாவ = மழைநீர் அலைத்தலாலே கலக்கம் எய்த

மெய்க்கொள் பெரும்பனி நலிய = தம் உடல் கொண்ட கடுங்குளிர் வருத்துவதால்.

பலருடன் கைக்கொள் கொள்ளியர் = பலருடன் கூடியிருந்து கையிடத்தே கொண்ட நெருப்பினை உடையராய்.

கவுள்புடையூஉ நடுங்க = பற்கள் பறைகொட்டி நடுங்க.

மாமேயல் மறப்ப = விலங்குகள், இரை தேடுவதை மறந்து நடுங்க.

மந்தி கூர = குரங்கு குளிரால் நடுங்க.

பறவை படிவனவீழ = பறவைகள் மரங்களில் தங்குவதினின்றும் காற்று மிகுதியால் மண்ணில் வீழ

கறவை = தாய்ப் பசுக்கள்.

கடியவீசி = கடிவாய் உதைத்து.

கன்று கோள் ஒழிய = பால் உண்ண வரும் கன்றுகளை ஏற்றுக் கொள்வதைக் கைவிட

குன்று குளிர்ப்பு அன்ன = மலையையும் குளிரச்செய்வது போன்ற.

கூதிர்ப் பானாள் = கூதிர் பருவத்தின் நடுயாமத்தில்.

வரிவுரை — “கொடுங் கோற் கோவலர்” என்ற வர் முல்லை பாட்டிலும் இடம் பெற்றுள்ளது (முல்லை–15).

## 2. கானாற்றங்கரையும் கானற் சோலையும்

கூதிர் காலம் மெல்ல மெல்ல கழியத் தொடங்கிற்று. கார்த்திகையும் பிறந்து விட்டது. கார்காலத் தொடக்கத்து மழையில் முளைவிடத் தொடங்கிய செடிகொடிகள் மலர் களும் அளவிற்கு வளர்ந்து விட்டன. ஆங்காங்கே காணப் படும் சிறுசிறு தூறுகள் தோறும் முசுண்டையும் பீர்க்கும் பூத்துக் குலுங்கலாயின. மெல்லிய சிறுசிறு செடிகளாகப் படர்ந்திருக்கும் முசுண்டையில் புறத்தே சிறுசிறு புள்ளிகளை யுடையவராய தூய வெண்ணிற மலர்களும், பீர்க்கில் பசும்பொன்போலும் நிறம் வாய்ந்த மஞ்சள் வண்ணமலர் களும் மலர்ந்து மயங்கி மனமகிழ் காட்சி அளிக்கலாயின.

புரண்டோடும் பெருவெள்ளத்தால், வெள்ளக்கால்களில் பண்டு படிந்திருந்த கரியசேறு எல்லாம் அகன்றுபோக— அற்றுப்போகத், தூய வெண்மணல் அடியிட்டு விட்டன. அவ்வாற்றுப் படுகைகளில், தெளிந்த நீர், சின்னஞ்சிறு ஓடையாக ஓடத் தலைப்பட்டுவிட்டது. வெள்ளநீரை எதிரிட்டு ஏறிப்பாயும் இயல்புடைய கயல்மீன் கூட்டம், அச் சின்னஞ்சிறு ஓடைகளில் காணப்படவே, வெளிர்நிறப்பச்சைக் கால்களையும், மென்மையான சிறகுகளையும் உடைய கொக்குகளும், செவ்வரி படர்ந்த, நெடிய கால்களையுடைய நாரைகளும், ஓடி ஓடி, அக்கயல்மீன்களைக் கவர்ந்து உண்ண, அவ்வோடையின் இருமருங்கிலும் பெருங்கூட்டமாய்க் கூடி விட்டன.

பெருவெள்ளம் புரண்டோடுமாறு பெருமழையாய்ப், பருவமெல்லாம் ஓயாது பெய்து பெய்து ஓய்ந்துபோன மேகம்

தன்னிடம் இருந்த நீரெல்லாம் வறண்டுபோகவே, கார்முகில் எனும்பெயர் இழந்து வெண்முகில் எனும் பெயர் உடையதாகி அறியாமைப் பட்டுப்போனதோடு, நீர்கொண்டு, கார்முகிலாகிய காலத்தில், பொறை தாங்கமாட்டாது வானில் தாழப்படிந்திருந்த நிலைமாறிப், பருகிய நீரையெல்லாம் பெருமழையாகக் கொட்டித் தீர்த்துப் பொறையும், குறைந்து விடவே, வானத்தின் உச்சிக்கே சென்று உலாவியவாறே சிறுசிறு துவலைகளைத்தூவும், தன் இயல்புக்கு மாறான (அதாவது பெருமழையாகக் கொட்டும் தன் இயல்புக்கு மாறான) தொழிலைக் கற்கவும் தொடங்கிவிட்டது.

முல்லை நிலத்தின் ஒருகோடியில் உள்ள குறிஞ்சி மலைக்காட்டில் பெய்த பெருமழை, முல்லை நிலத்தை வெள்ளக் காடாக ஆக்கி விட்டதோடு, அந்நிலத்து ஆயர்க்கும் அவர்தம் நிரைகளுக்கும் சொல்லொணாத் தொல்லை விளைவித்துவிட்டு, அம்முல்லையின் மறுகோடியில்உள்ளதான மருதநிலத்தவர்க்கு, வளம்பெருக்கும் துணையாய் அமைந்து, "கொடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை'' எனும் புகழுக்கும் உரியதாகி விட்டது.

மழை பொய்க்காது என்ற உறுதிப்பாட்டில், கார்காலத் தொடக்கமாகிய ஆவணியில், நன்செய் வயல்களில், நெல் விதைகளைத்தூவி வைத்தனர். உழவர் பெருமக்கள். குறிஞ்சி போல் காணுமிடமெல்லாம் குன்றுகள் நிறைத்தே, முல்லை நிலம் போல், காணுமிடமெல்லாம் புதர்களே நிறைந்தோ, இல்லாமல் சமன் செய்து, வரப்பு அமைத்து, வாய்க்கால் வெட்டி வயலாக்கி இருக்கும் காட்சி கண்ணுக்கு விருந்து அளிக்கும். நிரை மழை பெய்யும் ஆகவே, நீர்த்தட்டுப்பாடு இல்லை என்பதால், வயல்களையும்

பெருவயல்களாகவே அமைத்திருந்தனர். வரப்புகளும் உயர்ந்திருந்தன. அதனால் வயல்களில் நீர் மிகுந்து நிற்கவே, விதைத்த நெல், ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய இந்நான்கு மாதங்களில் நன்கு களைத்துச் செழித்து வளர்ந்து நிற்க வெளிப்பட்ட பருத்தகதிர், பால் ஏறி முற்றிப், பொறை தாங்கமாட்டாது, தலை வணங்கிக் கிடந்து நிறைபயன் தந்தது.

அதுபோலவே மண்தரும் வளச்செழிப்பால் பருத்த அடியை உடையவாகிய பாக்கு மரங்களின் உச்சியில், பச்சோலை சலசலக்கும் மடல்களுக்கு அணித்தாக நீலமணி போலும் நிறம் வாய்க்கப்பெற்று மரத்தின் கழுத்து எனக் கூறப்படும் பகுதியில், அம்மடல்களுக்கு இடையில் வெளிப்பட்ட பாளை விரிந்து வெளிப்பட்ட கழுகத்தாறுகளில், இனியநீர் கொண்டிருப்பதால் திரட்சி உடையவாகக் காய்த்திருக்கும் பச்சைப்பாக்குகள், சிறிது சிறிதாக நீர் வற்றிக் களிப்புக் கூடிமுற்றலாயின.

இவ்வாறு நீர் வளமும், நிலவளமும் நிறைபெருள் வளமும் உடையவாகப் பெருமைபெற்ற அப்பகுதி, கண்ணுக்கும் கருத்துக்கும் மகிழ்வளிக்கவும் தவறவில்லை. கழுகஞ் சோலைகளை அடுத்துள்ள நிலப்பகுதியில், ஆங்காங்கே காணலாம் மணற்மேடுகள் தோறும், மணத்தாலும், நிறத்தாலும் பல்வேறு வகைப்பட்ட மலர்கள் மலர்ந்துகிடக்க, அம்மலர்களைத்தாங்கி நிற்கும் தண்டுகள் ஒடுங்கும் நிலையில், அம்மலர்களில் படிந்து கிடக்கும் நீர்த்துளிகள், அம்மலர்களின் நிறத்திற்கு ஏற்பவும், அவற்றின்மீது ஞாயிற்றின் ஒளிவிழும் கோணத்திற்கு ஏற்பவும் பல்வேறு நிறங்காட்டி மின்னி அழகு காட்டும்.

" புன்கொடி முசுண்டைப் பொறிப்புற வான்பூப்
பொன்போற் பீரமொடு புதற்புதல் மலரப்
பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி
இருங்களி பரந்த ஈர வெண்மணற்
செவ்வரி நாரையொ டெவ்வாயுங் கவரக்
கயல் அறல் எதிரக் கடும்புனல் சாஅய்ப்
பெயல் உலந்து எழுந்த பொங்கல் வெண்மழை
அகல் இரு விசும்பில் துவலை கற்ப,
அங்கண் அகல் வயல் ஆர் பெயல் கலித்த
வண் தோட்டு நெல்லின் வருகதிர் வணங்க
முழுமுதல் கமுகின் மணியுறழ் எருத்தின்
கொழுமடல் அவிழ்த்த குழூஉக்கொள் பெருங்குலை
நுண்ணீர் தெவிள வீங்கிப் புடைதிரண்டு
தெண்ணீர்ப் பசுங்காய் சேறுகொள முற்ற
நளிகொள் சிமைய விரவுமலர் வியன்காக்
குளிர்கொள் சினைய குரூஉத்துளி தூங்க "
(13-28).

**உரை:**

**புண்கொடி முசுண்டை** = மெல்லிய கொடியினையுடைய முசுட்டையில் மலர்ந்த.

**பொறிப்புற வான்பூ** = புள்ளிகளைப் புறத்தே கொண்ட வெள்ளியபூக்கள்.

**பொன்போல் பீரமொடு** = பொன் போன்ற நிறத்தினையுடைய பூர்க்கம் பூக்களோடு.

**புதல்புதல் மலர்** = புதர்கள் தோறும்புதர்கள் தோறும் மலர.

**பைங்கால் கொக்கின் மென்பறை** = பசிய கால்களையுடைய கொக்கின் மென்மையான சிறகுகளையுடைய கூட்டம்.

இருங்களி பரந்த = கரியவண்டல் படிந்த
ஈரவெண்மணல் = ஈரம் பட்டவெள்ளிய மணற்பரப்புகளில்
செவ்வரி நாரையொடு = சிவந்த வரிகள்பொருந்திய நாரைக் கூட்டங்களோடு இருந்து.
எவ்வாயும் கவர = எவ்விடங்களிலும் கவர்ந்து கொள்வதற்கு வாய்ப்பாக.
கயல் = கயல் மீன்கள்
அறல் எதிர = அறல் இட்டு ஓடும் தெளிந்த நீர் ஓட்டத்தை எதிர்த்து ஏறுமாறு.
கடும் புனல் சாஅய் = மிக்க நீரைப் பொழிந்து விட்டமையால்
பெயல் உலந்து = பெய்யும் தன்மை வறண்டு.
எழுந்த பொங்கல் வெண்மழை = எழுந்த பொங்கும் வெண்மேகங்கள்.
அகல் இரு விசும்பில் = அகன்ற பெரிய வானில்.
துவலை கற்ப = சிறுசிறுதுவலைகளாகத் தூவும் தொழிலைக் கல்லா நிற்க.
அங்கண் அகல் வயல் = அழகிய, பரந்து அகன்ற வயல்களில்.
ஆர் பெயல் கலித்த = மிக்க மழை நீரால் செழித்து வளர்ந்த.
வண் தோட்டு நெல்லின் = வளமான இலையை யுடைய நெல்லிலிருந்து.
வருகதிர் வணங்க = வெளிப்படும் கதிர்கள் பாரமிகுதியால் தலை வணங்க
முழுமுதல் கமுகின் = பருத்த அடியினையுடைய பாக்கு மரத்தின்.
மணி உறழ் எருத்தில் = நீல மணியை ஒத்த நிறம் காட்டும் கழுத்தில்
கொழுமடல் அவிழ்த்த = பருத்த மடலிலிருந்து பாளையாக விரிந்த.
குழுஉக்கொள் பெருங்குலை = திரட்சியைக்கொண்ட பெரிய தாறுகளில்

நுண்ணீர் தெவிள=நுண்ணிய நீர்திரளும் படியாக.
வீங்கி=பருத்து
புடை திரண்டு=பக்கங்கள் திரண்டு
தெண்ணீர்ப் பசுங்காய்=தெளிந்த நீரையுடைய பச்சிளங் காய்கள்.
சேறுகொளமுற்ற=இனிமை கொள்ளும் படிமுற்ற.
நளிகொள் சிமைய=செறிவுண்டுருத்தலைத்த தன்னிடத்தே கொண்ட மலைக்குவடுகளிடத்தவாய.
விரவுமலர் வியன்கா=பல்வேறு மணமும் நிறமும் கலந்த மலர்களைக் கொண்ட, இடம்அகன்ற, பெரிய மலர்ச் சோலைகளில்.
குளிர் கொள்சினைய=குளிர்ச்சியையும், தளர்ச்சியையும் உடைய கொம்புகளிடத்தனவாகிய.
குருஉத்துளி=பன்னிறம் காட்டும் நீர்த்துளிகள்
தூங்க=இடைவிடாமல் வீழ்ந்து கொண்டிருக்க.

## 3. கடுங்குளிரையும் பொருட்படுத்தாக் கட்குடியர்

கார்காலத்துப் பெருமழை பெய்து ஓய்ந்துபோக, வந்துற்ற கூதிர்ப்பருவத்துக் குளிரால் நடுங்கும் முல்லை நிலத்து ஆயர், ஆனிரை, அந்நிலத்துப் பறப்பன, நடப்பன, ஆகிய உயிரினங்களின் துயர்நிலையைக் கண்டு கலங்கிய வாறே, அம்முல்லை நிலத்தை அடுத்துள்ளதான மருத நிலத்தில் அடியிட்ட புலவர்க்கு, ஓர் உண்மை புலனாயிற்று.

கால்நடைகளே நம்செல்வம். அவற்றிற்குச் சிறுகேடும் உறாவாறு காப்பது மட்டுமல்லாமல், அவை வயிறார உண்டு வளங்கொழிப்பதற்குப் பசும்புல் பெருகக் கிடைக்கும் இடங் களுக்குக் கொண்டு சென்று மேய்ப்பதும் வேண்டும். ஆனிரை ஓம்பும் அப்பணியில், மனையகத்தே இருந்து மகிழும் வாழ்க்கை நலத்தை இழந்து நம் உடல்நலக்கேடுற நேரினும் கவலை இல்லை என எண்ணும், தன்னலம் கருதாப் பிறர் நலம்பேணும் பெரியோர்களையே, அக்குளிர் வாட்டும். அத்தகைய வாழ்க்கைக் குறிக்கோள் எதுவும் இன்றி, உண்டு உடலை உரம்பெற வளர்ப்பதும், கள்ளுண்டு களிப்பதும் தவிர்த்து வேறுவாழ்க்கை என்பது இல்லை எனக்கொண்டு திரியும் கயவர்களை, அது கொடுமை செய்வது இல்லை.

தாம் மேற்கொண்டிருக்கும் தொழில்முறையால், சிறு குடிலே ஆயினும், குளிர் உள்புகாவாறு காக்கவல்லதான மனைகளில் இருக்கவிடாது, குளிரொடு கலந்த காற்று வீசும் மேய்புலங்களுக்குத் துரத்தப்படும் ஆயர் போன்றாரை மட்டும் அதுகொடுமைபடுத்தும். குளிர்காற்று நுழைந்து

விடாவாறு கட்டப்பட்ட ஏழடுக்கு மாளிகை வாழ் செல்வர்களையும், பருவ நிலைக்கொடுமைகளை மாற்றி இன்பம் பயக்கவல்ல வழிமுறைகளை வகுத்துக்கொண்ட வல்லார்களையும், அக்குளிர் அணுகுவதும் செய்யாது.

கடமை மேற்கொண்டு, கணவன்மார்கள் பிரிந்து போயிருக்க, மனையகத்தே, துணை இல்லாது தனித்திருக்கும் நிலைபெற்று எளியராகிவிட்ட மனைவியரை மட்டுமே அது கொடுமை செய்யும்.

இந்த உண்மைகளை உணர்ந்த புலவர், உணர்ந்த உண்மைகளை உரைப்பான் தொடங்கி, முதற்கண் கள்ளுண்டு திரியும் காளை ஒருவனைக் காட்டுகின்றார்.

பெய்த பெருமழையெல்லாம், குறிஞ்சியில் மலையினின்றும் உருண்டுபாயும் அருவிகளாகவும், முல்லைக் கானாறுகளாகவும் வடிவெடுத்து, மேடுபள்ளம் அற்றதான மருதநிலத்துள் புகுந்ததும், ஆறு எனும் பெயர்கொண்டு அமைதியாக ஓடிக்கொண்டிருந்தது. ஆற்று வெள்ளநீரை அதன்போக்கில் போவதைத் தடுத்து இருகரைகளுக்கு இடையில் ஒழுங்காகக்கொண்டு சென்று, விளைநிலங்களுக்குப் பயன்கொள்ளும் நிலையைத், தமிழகம் பண்டே அடைந்து விட்டிருந்தது.

அதனால், மருத நிலத்து மாநகர்கள் எல்லாம், அத்தகு பேராற்றங் கரைகளிலேயே தோன்றலாயின. மருத நிலத்து மாநகர் நோக்கி வழி நடைப் பயணம் மேற்கொண்ட புலவர், மருதநிலத்து எல்லையை அடைவதற்கு முன்பே, அம்மாநகரத்தில் வானளாவ கட்டப்பட்டிருந்த ஏழடுக்கு மாளிகைகள், அவர்க்குக் காட்சி அளித்துத், தொடக்க காலத்தில் சுற்றுராய்த் தோன்றிப் பையப்பைய மாட

மாளிகைகளைக் கொண்ட மாநகராய் வளர்ந்து நிற்கும், அம் மாநகரத்துப் பழம் பெருமையினையும், அத்தகு மாட மாளிகைகள் தோன்றுவதற்குக் காரணமாம் செல்வச் செழுமையினையும், புலவர் நினைவில் புகுத்தி நிழலாடச் செய்து விட்டது.

தொலைவில் தோன்றும் அம்மாநகரத்துப் பழமைச் சிறப்பையும் செல்வச் செழுமையினையும் எண்ணி, எண்ணி இறும்பூதெய்தியவாறே நடைமேற்கொண்ட புலவர், பேராற்றங்கரை அடைந்ததும் இருமருங்கிலும் நிற்கும் கரைகளின் ஊடை ஒழுங்காக ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றின் இன்பக் காட்சியை சிறிது நின்று கண்டுகளித்து விட்டு, மறுகரைஏறி மாநகர்த் தெருக்களில் அடியிட்டார். தெருவுகள், தாம் கண்டு வந்த ஆற்றுப் படுகைபோல் அகன்றிருக்க, அதன் இருபக்கத்தும் மாடமாளிகைகள், ஒன்று உள்ளே; ஒன்று புறத்தே; ஒன்று நெடியது; ஒன்று குறியது; என இல்லாமல், ஆற்றின் இருபக்கத்தும் அமையப்பெற்ற இருகரைகளைப் போல், ஒரே சீராகக்கட்டப் பெற்றிருக்கும் காட்சியைக் கண்டு கழிபேருவகை எய்தினார். அந்நிலையில், அவரைக் கடந்து சென்றார் சிலர். செயல், அளவிறந்து பெருகிவிட்டால், செல்வமும் மக்களை எப்படி யெல்லாம் மாக்களாக்கி விடுகிறது என்பதை உணர்த்தி, அவர் உணர்வினைச் சிறிதே கலங்கச் செய்துவிட்டது.

பகல் கழிந்து அந்திப்போது ஆகிவிட்டது. கடமை யுணர்வு மக்களெல்லாம், மனைப்புறத்துக் கடமைகளை முடித்துக் கொண்டு, மனைக்கண் சென்று சேர்ந்திருக்க வேண்டிய நேரம். மேலும் பெருமழை பெய்து ஓய்ந்துவிட்ட வெண்மேகம் சிறுசிறு தூரல்களைத் தூவிக்கொண்டே இருந்தது. அந்நிலையில், மனைப்புறத்தே கடமை

இருப்பினும், குளிருக்கும் தூவலுக்கும் அஞ்சி மனையை விடுத்து வெளிப்பட்ட எவரும் நினையார். அத்தகு நேரத்திலும், அத்தகு சூழ்நிலையிலும், அச்சிலர், தம் மனம்போன போக்கில் திரிந்து கொண்டிருந்தனர். அவர்களை நோக்கினார் புலவர். செல்வச் செழுமையில் சீராட்டி வளர்க்கப்பட்டவர்கள் அவர்கள் என்பதை அவர்தம் கட்டுடல் காண்பித்தது பருத்த தோள். அப்பருமையே அவர் தோள்களுக்கு அழகூட்டுவதாய் இருந்தது. எத்தகைய திண்ணிய பொருள்களே ஆயினும், மோதி அழிக்கவல்ல உரத்தையும் அத்தோள்கள் பெற்றிருந்தன. தோள்போலவே பிற உறுப்புகளும் உரம்பெற அமைந்திருந் தமையால், அவர் உடல் முறுக்கேறி முழுவலி கொண்டிருந்தது.

உண்டு உடல்உரத்தைப் பெற்றிருந்ததற்கேற்ப உணர்ந்து உள்உரம் பெற்றவர் அல்லர் அவர்கள். சிறுசிறு துவலைகளாக மழை பெய்துகொண்டிருக்கும்போது, நனைந்த ஆடையினைக் களைந்தெறிந்துவிட்டு, உடலேற்கும் ஆடைகளை, மெய்மறையப் போர்த்திக் கொள்வதையே, அறிந்தோர் விரும்புவர். ஆனால் இவர்களோ, கழுநீர், குவளை, தாமரைபோலும், மேனியில் பட்டால், தண் எனக் களியூட்டும் மலர்களால் ஆன மாலையைத் தலையில் சுற்றிக் கொண்டு, விரித்துப் போர்த்துக்கொள்ள வேண்டிய மேலாடையை, ஒன்றாகச் சுருட்டி, ஒருமுனை முன்பக்கமும் மறுமுனை பின்பக்கமும் தொங்கும் வண்ணம், தோள்மீது போட்டுக்கொண்டிருந்தனர். இத்தகு கோலத்தோடு, உணர்வு அற்ற கட்டைகளாய்த் திரிந்து கொண்டிருக்கும் அவர்கள் அந்த அளவோடு நில்லாமல், பேரூர்த் தெருவில் இடம் பெற்றிருக்கும் மதுக்கடைகளைக் கண்டபோதெல்லாம் அக்கடைகளுள் நுழைந்து, வண்டுக் கூட்டங்கள் மொய்த்துக் கிடக்கும் கள்ளைத் தம் ஆசை தீரும்வரை உண்டு தீர்த்து விட்டே அப்பால் செல்வாராயினர்.

''மாடம் ஓங்கிய மல்லல் மூதூர்
ஆறுகிடந் தன்ன அகல்நெடுந் தெருவில்
படலைக் கண்ணிப்பரேர் எறுழ்த் திணிதோள்
முடலை யாக்கை முழுவலி மாக்கள்
வண்டுமூசு தேறல் மாந்தி மகிழ்சிறந்து
துவலைத் தண்துளி பேணார்,பகல் இறந்து
இருகோட்டு அறுவையர் வேண்டுவயின் திரிதர''
(29—35)

உரை :

மாடம் ஓங்கிய=மாட மாளிகைகள் உயர்ந்த.

மல்லல் மூதூர்=பல்வேறு வளங்களையும் கொண்ட பழைய ஊரின்கண்.

ஆறுகிடந்தன்ன = ஆறுகிடந்தாற் போன்ற.

அகல் நெடும் தெருவில்=அகன்ற நெடிய தெருக்களில்.

படலைக் கண்ணி=தாமரை, குவளை, கழுநீர் முதலிய மலர்களோடு தழை விரவித் தொடுத்த மாலையையும்.

பரேர்=பருத்த அழகினையும் உடையவராகிய.

ஏறும்=வலியினையுடைய.

திணி தோள்=இறுகின தோளினையும்.

முழுவலி மாக்கள்=நிரம்பிய மெய் வலியினையும் உடைய கீழ்மக்கள்.

வண்டுமூசு=வண்டுகள் மொய்க்கும்.

தேறல் மாந்தி=கள்ளை உண்டு

மகிழ் சிறந்து=மகிழ்ச்சி மிக்கு.

துவலைத் தண் துளி=தம் மேல்விழும் துவலையாகிய சிறுசிறு நீர்த்துளிகளை.

பேணார்=பொருட்படுத்தாமல்.

இருகோட்டு அறுவையர்=முன்னும் பின்னும் தொங்கவிட்ட மேலாடை உடையராய்.

பகல் இறந்து=பகல் கடந்துபோன அந்திப்போதிலும்.

வேண்டுவயின் திரிதர=தம் மனம்போன இடமெல்லாம் திரிதலைச்செய்ய.

# 4. மனை விளக்கேற்றும் மகளிர் நலம்

மாநகர் எல்லைக்குள் அடியிட்ட புலவர் உள்ளத்தைக், குளிரையும் பொருட்படுத்தாது கள்ளுண்டு திரியும் கட்டிளங்காளையர் காட்சி வருத்திவிட்டது என்றாலும், அம்மாநகர் வீதிகளில் அடுத்தடுத்துக்காண நேர்ந்த காட்சிகள் சில, அவரைக் களிப்புக் கடலில் ஆழ்த்தி விட்டன.

மாநகர் எல்லைக்கண் கண்ட காட்சியால் கலக்கமெய்திய கண்களை, நீண்டுகிடக்கும் வீதிகளில் ஓடவிட்ட அளவில், அவ்வீதியின் இருமருங்கிலும் உள்ள மனைகள் தோறும் விளக்குகள் எரியத் தொடங்கலாயின. வானம் வெண்முகிலால் மூடப்பட்டிருந்தது. அதானல், பகற் பொழுதில் கழிந்தகாலம் எவ்வளவு? கழிய வேண்டியகாலம் எவ்வளவு என்பதைக் கணித்து அறிவது இயலாததாயிருந்தது. அவ்வாறாகவும், மனைகளில், மாலை விளக்குகள் ஏற்றப்பட்டு விட்டனவே! மாலைப்போது வந்து விட்டது என்பதை எவ்வாறு அறிந்து விளக்கேற்றியுள்ளனர் என வியந்து நின்ற புலவர் உணர்வைப் பிச்சிப்பூவின் நறுமணம் ஈர்த்தது.

கார் காலத்து மாலைப்போதில் மலரும் இயல்புடையது. பிச்சி மெல்லிய காம்புகளைக் கொண்டது. அழகிய இதழ்களைக் கொண்டது. இன்பம் ஊட்டும் நறுமணம் கொண்டது. மலர்ந்தபின் பறித்துத் தொடுப்பது இயலாது என்பதால், மகளிர், அன்று மலரக்கூடிய பேரரும்புகளைப் பறித்து மாலையாகத் தொடுத்து, மலர்ப்பிடாவில் இட்டு வைப்பர். அவ்வாறு இடப்பட்டிருக்கும் அது, மாலைப்போது வந்துற்றதும் மலர்ந்து மணம் வீசத் தொடங்கி விடும்.

பித்திகை மலர்ந்து விட்டது என்றதும், மாலைப்போது வந்து விட்டது என்பதை, மகளிர் உணர்ந்து கொள்வர். இவ்வாறு, மணிகாட்டியாம் மாண்புடையது, பித்தியின் மலரும் பருவத்துப் பேரரும்புகள்.

பித்திப் பேரரும்புகளுக்கும், மாலைப் பருவத்துக்கும் உள்ள இவ்வுறவறிந்து. மாலை வந்துற்றது என்பதை உணர்ந்து, மாலைக்கடனாற்றும் மகளிர் மாண்பினை எண்ணி இறும்பூது எய்திய புலவர், அம்மகளிர் விளக்கேற்றி, மாலைக் கடனாற்றும் காட்சி நலத்தைக்கண்டு மகிழ விரும்பினார். மனைகளுக்கு அணித்தாக நடைபோடத் தொடங்கினார்.

புலவர் கண்களுக்கு முதற்கண் தோற்றம் அளித்தது, அம்மகளிர் ஏற்றிய விளக்கின் சுடர். நெய் தீர்ந்து, எரிந்து, அணைந்து போகாது, நெடும் பொழுது நின்று எரிவதற்கேற்ப திரி எப்போதும் நெய்யில் ஆழ்ந்து கிடக்கும் வண்ணம், நெய் நிறையப் பெய்யப்பட்டிருந்தது. நெய்யைக் கண்ட புலவர், நெய் தேங்கிக்கிடக்கும் விளக்கைக் கண்ணுற்றார். கைநழுவி விடப்படினும் உடைந்து போகாமைகருதி, விளக்கு இரும்பால் செய்யப்பட்டிருந்தது. விளக்கை கண்ணுற்ற புலவர் கண் களுக்கு, அடுத்து அவ்விளக்கை ஏற்றிவைக்கும் மகளிரின் மூட்டு வளைந்த முன்கைகளும், அடுத்து, அக்கைகளில் இறுகக்கிடந்த (வெள்ளியும்,) பேரொளி வீசும் தந்தத்தால் ஆன வளையல்களும், அவற்றை அடுத்து, வளமுற வளர்ந்த மூங்கிலின் மென்மையும் பருமையும் வாய்ந்த தோள்களும் காட்சி அளித்தன.

மூங்கிலினுக்கு நிகராகும் இயற்கை அழகு, வளையல் அணிந்து பெறும் செயற்கை அழகு, ஆகிய இருவகையாலும் அழகு பெற்றுப் பெருமையுற்றதோடு நில்லாமல், விளக்கேற்றி வைப்பதைக்காலம் அறிந்து செயல் படுத்தும் கடமையாற்றுவதாலும் சிறப்புக் கொண்டவை அம்மகளிர்

கைகள் என்றால், அத்தகு கைகளைக் கொண்ட அம்மகளிர் முழு உருவம் எத்தகு பெருமையுடையதோ என்ற வியப்பு உந்த, அம் மகளிரை விழித்து நோக்கினார். ஒருமுறை காண நேர்ந்தாரை, மறுமுறையும் காண வேண்டும், மறு முறையும் காண வேண்டும் எனத் தூண்டத்தக்க இனிய சாயல் வாய்க்கப் பெற்றிருந்தனர் அம்மகளிர்.

அம்மட்டோ, முத்துப் போன்ற வெண்பற்கள் வெளிப்பட, இனிய புன்னகை மலர்த்தும் மாண்புடையது அவர் வாய். காதுகளில் பொன்னாலான மகரக் குழைகள் ஒளிவீசிக் கொண்டிருந்தன. உற்றார், உறவினர் பால் அன்பையும், ஏனையோர் பால் அருளையும் வாரி வழங்கும் அவர் கண்கள் வீசும் ஒளியால், மகரக் குழைகளின் ஒளி மங்குவது கண்டார். இவ்வளவு சிறப்பையும் ஒருங்கே பெற்றிருந்தும், அம் மகளிர், மகளிர்பால் அமைய வேண்டிய இயற்கைப்பண்பாம் மடப்பத்தை-அடக்கத்தைக் குறைவறப் பெற்றிருந்த சிறப்பினையும் கண்டார்.

அம்மகளிர் நலம் பலவும் கண்டு வியந்த புலவர், மனை யகத்தே, அவர்கள் ஆற்றும் மனையற மாண்பினைக் காண விரும்பி, அவர்களின் மனைக்குள் புகுந்தார். தெருவில் விளக்கேற்றி வைத்த மகளிர், மனைபுகுந்ததும், மனையின் கருவறைப் பகுதியில் எழுந்தருளப் பண்ணியிருக்கும் இல்லுறை தெய்வங்களின் முன் நின்று, நெல்லும் மலரும் தூவிக் கைகூப்பி வணங்கி வழிபாடாற்றும், விழுமிய செயல் கண்டு விம்மிதம் உற்றார்.

மனையுறை மகளிர் மாண்புகண்டு மனம் குளிர்ந்த புலவர் அடுத்து மாநகர்க் கடைவீதிகளை நோக்கி நடந்தார்.

பல்வேறு வளங்களும் குவிந்துகிடக்கும் அந்தி அங்காடிகளில், உரிமையாளர்கள், மாலைக்கடனை, விழாவாகவே கொண்டாடி மகிழும் நலம்கண்டு மனம் நிறைவுற்ற அவர் வாயினின்றும் வெளிப்போந்த சில வரிகள் அவை இவை :

''வெள்ளி வள்ளி வீங்கிறைப் பணைத்தோள்;
மெத்தென் சாயல்; முத்துறழ் முறுவல்;
பூங்குழைக்கு அமர்ந்த ஏந்து எழில் மழைக்கண்;
மடவரல் மகளிர் பிடகைப் பெய்த
செவ்வி அரும்பின் பைங்கால் பித்திகத்து
அவ்விதழ் அவிழ்பதம் கமழப் பொழுது அறிந்து
இரும்புசெய் விளக்கின் ஈர்ந்திரிக் கொளீஇ
நெல்லும் மலரும் தூஉய்க் கைதொழுது
மல்லல் ஆவணம் மாலை அயர:

(36-44)

**உரை:**

வெள்ளி வள்ளி = வெள்ளிய சங்கு வளைகள்

வீங்கு இறை = இறுக அணியப் பெற்றிருக்கும் முன் கையினையும்.

பணைத்தோள் = மூங்கில்போலும் தோளினையும்

மெத்தென் சாயல் = மென்மைத் தன்மை வாய்ந்த சாயலினையும்.

முத்து உறல் முறுவல் = முத்தை ஒத்து முறுவலிக்கும் பல்லினையும்.

பூங் குழைக்கு = அழகிய மகரக் குழையின் அழகிற்கு.

அமர்ந்த = பொருந்தின.

ஏந்து எழில் = மிகச்சிறந்த அழகினையும்.

மழைக்கண் = அருள் உணர்வாம் குளிர்ச்சினையும் உடைய கண்களையும்.

மடவரல் மகளிர் = மடப்பத்தையும் கொண்ட மகளிர்.
பிடகைப் பெய்த=மலர்த்தட்டிலே இட்டு வைத்த.
செவ்வி அரும்பின்=மலரும் பருவத்துப் பேரரும்பாகிய.
பைங்கால் பித்திகத்து=மெல்லிய காம்பினையுடைய வாகிய பிச்சியின்.
அவ்விதழ் அவிழ் பதம் கமழ=அழகிய இதழ்கள் மலரும் பருவம் பெற்று மலர்ந்து மணம் வீச.
பொழுது அறிந்து=மாலைப் பொழுது வந்துற்றது என அறிந்து.
இரும்பு செய் விளக்கின்=இரும்பால் செய்த விளக்கில்.
ஈர்ந்திரிக்கொளீஇ=நெய் தோய்ந்த திரியைக் கொளுத்தி.
நெல்லும் மலரும் தூஉய்=நெல்லையும் மலரையும் தூவி.
கைதொழுது=இல்லுறை தெய்வங்களைக் கை கூப்பி வணங்கி.
மல்லல் ஆவணம்=வளங் கொழிக்கும் வணிக வீதியெல்லாம்.
மாலை அயர=மாலைக் காலத்லை விழாவாகக் கொண்டாட.

மகளிர், மாலையில் விளக்கேற்றி மனையுறை தெய்வங்களைவழிபடும் நிகழ்ச்சியைக், "கயலேர் உண் கண் கனங்குழை மகளிர், கைபுனையாக நெய்செய்து மாட்டிய சுடர்துயர் எழுப்பும் புன்கண் மாலை" (குறுந்: 398), "எல்வளை மகளிர் மணிவிளக்கு எடுப்ப, மல்லல்மூதுர் மாலை வந்து. இறுத்தென"
(சிலம்பு:4:19-20).

"அகனகரெல்லால் அரும்பு அவிழ் முல்லை
நிகர் மலர் நெல் லொடு தூஉய்ப் பகல்மாய்ந்த
மாலை மணி விளக்கம் காட்டி இரவிற்கோர்
கோலம் கொடியிடையார் தாம் கொள்ள"
(சிலம்பு 1:1-6).

என்றவரிகளும் விளக்குவது காண்க.

# 5. மனையுறை புறாக்கள்

இல்லுறை தெய்வங்களை மகளிர் வழிபடுவதை, மனைக்குட்சென்று கண்டு வெளியேறும்போது, புறாக்கள், இடையறவுபடாது எழுப்பும் ஒலி கேட்கவே, நிமிர்ந்து நோக்கினார் புலவர். மாளிகையின் கொடுங்கையைத் தாங்கி நிற்கும் பலகைகளில், சேவலும் பேடையும் இணை இணையாக அமர்ந்திருக்கும் புறாக்கூட்டத்தைக் கண்டார். இருள்தூங்கும் இரவுப்போது தவிர்த்துப் பகற்போது முழுதும், ஊர்மன்று அடைந்து இரைதேர்ந்து உண்ணும் இயல்புடையவை புறாக்கள். கூதிர்ப் பருவத்து வானம், மேகத்தால் மூடுண்டுகிடக்கவே, இது பகலா, அல்லது இரவா எனத் துணியக்கூடாத அளவு இருள் மயக்கியிருக்கவே, அப் புறாக்கள், இரைதேட, மன்று நோக்கிப் பறந்து செல்லாமல், மனைக்குள்ளாகவே அடங்கியிருப்பதையும், பறப்பது ஒழிந்து பகலெல்லாம் இருந்த இடத்திலேயே நின்றுகிடப்பதால், அவற்றின் செங்கால்கள், கடுப்பெடுக்கவே, அதுதவிர்க்க, மாறிமாறி அமரும் அவல நிலையையும், அந்த அவல நிலையிலும், ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்துபோய்விடாமல், சேவலும் பேடையுமாகப், பிரிவறியாது இணைந்தே இருக்கும் இன்பநிலையையும் கண்டு கழிபேருவகை கொண்டார்.

"மனையுறை புறவின் செங்கால் சேவல்
இன்புறு பெடையொடு மன்றுதேர்ந்து உண்ணாது
இரவும் பகலும் மயங்கிக் கையற்று
மதலைப் பள்ளி மாறுவன இருப்ப" (45—48)

உரை :

மனையுறை புறவின்=மனையில் வாழும் புறவின்,

செங்கால் சேவல்=சிவந்த காலினையுடைய சேவல்.

இன்புறு பெடையொடு=தாம் இன்பம் நுகருதற்குறிய பெடைகளோடு.

மன்று தேர்ந்து உண்ணாது=ஊர் மன்றம்சென்று இரைதேடி உண்ணாமல்.

இரவும் பகலும் மயங்கி=இரவு பகல் தெரியாமல் மயங்குகை யினாலே,

கையற்று=செயல் இழந்து.

மதலைப்பள்ளி=கொடுங்கையைத் தாங்கும் பலகைகளில்

மாறுவன இருப்ப=கடுத்தகால்கள் ஆறும்படி மாறிமாறி இருக்க.

# 6. மங்கல மகளிர்

புறாக்களின் கூதிர்ப் பருவத்து வாழ்க்கைநிலை, கருத்தில் நிற்க, அம்மனையைவிட்டு வெளிப்பட்ட புலவர், அவ்வீதிமனைகளுக்குள்ளாகவே, மிகப்பெரியது என்ற பாராட்டினுக்குரிய ஒரு மாளிகையின் வாயிற்கண் சென்றார். கோட்டை மதில் போலும் சுற்றுச்சுவர் அமையப் பெற்றிருந்ததோடு, மனைக்குள் செல்வாரையும், மனையை விட்டு வெளியேறுவாரையும், கண்காணித்தே அனுப்பும் விழிப்போடு கடமையாற்றும் காவலரையும் கொண்டிருந்தது அம்மாளிகையின் பெருவாயில். புலமை தந்த உரிமையால், அவர்க்கு மட்டும் அவ்வாயில் எப்போதும் திறந்தேயிருக்கும். அதனால் அம்மாளிகையுள் உரிமையோடு நுழைந்து, அம்மனை வாழ்க்கை மாண்புகளைப் புலவர் உணர்ந்தார்.

செல்வ வாழ்க்கையில் சிறக்க வாழ்பவர் அம்மனைக் குரியார். கோடைக்கொடு வெப்பமும், கூதிர்க் கடுங்குளிரும், தம்மைப்பீடிக்காவாறு வாழக்கற்ற வளமார் வாழ்வினர் அவர். கோடைவெப்பம் தம்மேனியைத்தாக்காமை வேண்டின், சந்தனக்குழம்பை மேனியெங்கும் பூசிக்கோடல் வேண்டும் என்பதை உணர்ந்து, சந்தனக் கட்டையையும், சந்தனக் கல்லையும் வாங்கிவைக்க அவர்கள் தவறுவது இல்லை. சந்தனக்கட்டையும் கல்லும் எங்கும் கிடைக்குமாயினும், சந்தனக்கட்டைகளில், பொதியமலைச் சந்தனக்கட்டையே சிறந்தது என்பதால் அதையேதேடி வாங்கி வைத்திருந்தனர். அதுபோலவே வடபேரிமயத்துக்கிடைக்கும் தூயவெண்ணிறம் வாய்ந்தகல்லே சந்தனக்கற்களிலெல்லாம் தலையாய

சிறப்புடையது எனஅறிந்து, அரிதின் முயன்று அதையே வாங்கி வைத்திருந்தனர். கோடையில் வெப்பம் தணிக்கும் சந்தனக்குழம்பு, கூதிர்ப் பருவத்தில் குளிரின் கொடுமையை மேலும் கொடுமையுடையதாக்கும் என்பதையும் அவர்கள் உணர்ந்திருந்தமையால், அரிதின் முயன்று வாங்கிய அவற்றை,அப்போது பயன்படுத்துவது விடுத்து, மாளிகையின் ஒருபால்வறிதேபோட்டு வைத்திருந்தனர். அதைக்கண்ணுற்ற புலவர், மாளிகையின் மற்றொரு பக்கத்தை நோக்கினார்.

கருங்கொள்ளின் நிறம்வாய்ந்த கருங்கல்லால் ஆன அம்மியின்முன் குற்றேவல் மகளிர் சிலர் அமர்ந்து, பூசிக்கொண்டால், மேனியின் தட்பத்தைத் தணித்து, மேனிக்கு வெப்பம் ஊட்டவல்லதான கஸ்தூரி போலும் மணப்பொருட்களை வைத்து, சாந்தென அரைத்துக் கொடுக்க அம்மனைக்குரிய மங்கை நல்லாள், மேனியில் பூசிக்கொள்வான் வேண்டி வாங்கிச் செல்வது கண்டார்.

காலம் சிறிது கடந்தது. சென்றவள், குளித்து முடித்து, ஈரம் பட்ட கூந்தலோடே வெளிப்பட்டாள். அதற்குள்ளாகக், குற்றேவல் மகளிர், எரிக்கப்பட்டவழி இனிய நறுமணம் நாறும், தகரம் எனஅழைக்கப்படும் மயிர்ச்சந்தன விறகை எரித்துக்கொண்ட நெருப்பைக் கணப்பில் வாரிக்கொணர்ந்து, அதில் கருநிறம் கொள்ளுமாறு முதிர்ந்து வயிரம் ஏறிய அகில் கட்டையையும், வெள்ளிய கண்டசருக்கரையையும் இட்டுப் புகை எழுப்பலாயினர், மனைக்குரியாள், அக்கணப்பருகே அமர்ந்து, ஈரம்பட்டதன் கூந்தலுக்குப் புகை ஊட்டலாயினள்.

கூந்தல் மெல்லமெல்ல ஈரம்அற்று மணம் பெற்று விட்டது. அவ்வகையால் பக்குவப்பட்ட கூந்தலை வாரிமுடித்தாள் அவள். அதற்குள் ஏவல் மகளிர் மலர்ப் பீடாவைக்கொணர்ந்து அவள் முன் வைத்தனர். அதில்

தொடுத்த பெரியமாலை இருக்கவும், குளிர்வாட்டும் கூதிர்ப் பருவத்தில் குளிர்ந்த மலர்களை மாலையளவு சூடிக்கொள்வது நலமாகாது என்பதால், மாலையைச் சூடிக்கொள்வதுவிடுத்து, அதே நிலையில், மகளிர்க்கு மங்கல நலந்தரும் மலர் சூடாதிருப்பதும் முறையாகாது என்பதால், அதுகருதி, பிடாவில் தொடுக்கப்படாமல் இருந்த ஒரு சில மலர்களை எடுத்துக் கூந்தலில் சூடிக்கொண்டாள். மனைமாட்சியின் மங்கலமாம் அம்மனைக்குரியாள் மாண்புகண்டு மனம் குளிர்ந்தார் புலவர்.

''கடியுடை வியன்நகர்ச் சிறுகுறுந் தொழுவர்
கொள்உறழ் நறுங்கல் பலகூட்டு மறுக
வடவர்தந்த வான்கேழ் வட்டம்,
தென்புல மருங்கின் சாந்தொடு துறப்பக்
கூந்தல் மகளிர் கோதை புனையார்
பல்லிருங் கூந்தல் சின்மலர் பெய்ம்மார்,
தண்நறும் தகரம்முளரி நெருப்பு அமைத்து
இருங்காழ் அகிலொடு வெள்ளயிர் புகைப்ப''
(49—56)

உரை :

கடியுடை வியன்நகர்=காவலை உடைய அகன்ற மாளிகையில்.

சிறுகுறுந்தொழுவர்=சிறிய குற்றேவல்களைச் செய்வார்.

கொள் உறழ் நறுங்கல்=கருங்கொள்ளின் நிறத்தை ஒத்த நிறம்வாய்ந்த, நறுமணப் பொருள்களே அரைத்து, அரைத்து நறுமணம் நாறும் அம்மியில்.

பல்கூட்டு மறுக=கத்தூரி முதலிய நறுமணப் பொருள்களால் ஆன சாந்து அரைக்க.

வடவர்தந்த வான்கேழ் வட்டம்=வடநாட்டார்கொண்டுவந்து கொடுத்த வெண்ணிறம் வாய்ந்த சிலாவட்டம் அதாவது, சந்தனக் கல்.

தென்புல மருங்கின்=தென்திசை இடத்தான

சாந்தொடு துறப்ப=சந்தனக் கட்டையோடு பயன்படாமல் கிடக்க.

மகளிர் கூந்தல் கோதைபுனையார்= மகளிர் தம்கூந்தலில் மாலையிட்டு முடியாது.

பல் இருங்கூந்தல்=பலவாக பின்னி விடப்பட்ட தம்கூந்தலில்

சின்மலர் மெய்ம்மார்=சிலமலரே இட்டுமுடிப்பான் வேண்டி

தண்நறும் தகரம் முளரி நெருப்பு அமைத்து=குளிர்ந்த நறுமணம் வாய்ந்தமயிர்ச்சந்தன விறகில் நெருப்பை உண்டாக்கி

இருங்காழ் அகிலொடு=கரியவயிரம் வாய்ந்த அகிற் கட்டையோடு.

வெண் அயிர் புகைப்ப=வெள்ளிய கண்டசருக்கரையையும் கூட்டிப்புகைஎழுப்ப

செல்வவாழ்வினர், தம்மனைகளில் குற்றேவல் மகளிரைக் கொண்டு பணிகளை முடித்துக் கொண்டனர் என்பதற்கு இலக்கண இலக்கியச் சான்றுகளும் உள. ''ஏவல் மரபின் ஏனோர்'' என்பது தொல்காப்பியம் (பொருள்:26). சிலப்பதிகாரத்தில் அவர்கள் ''சிலதியர்'' என்றும் சிந்தரி நெடுங்கண் சிலதியர்'' (14:132,) ''ஏவற்சிலதியர்'' என்றும் ''ஏவற்சிலதியர் (5:51), ''குற்றிளையார்'' என்றும் (''நம் கோவலன் என்றாள் ஓர் குற்றிளையாள் ''9:663) ''சிறுகுறுந்தொழிலியர்'' என்றும் (சிறுகுறுந்தொழிலியர் மறுமொழி உய்ப்ப'' (8:97) அழைக்கப் பெற்றிருப்பது காண்க.

வடக்கிலிருந்து வரும் சந்தனக்கல்லில், தென்மலைப் பிறந்த சந்தனக்கட்டையை அரைப்பது வழக்கம் என்பதற்கும் இலக்கியச் சான்றுகள் உள. "வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்துத் தென்மலைப்பிறந்த சந்தனம் மறுக"

(சிலம்பு: 4: 37—37)

"வடவரை தந்த வான்கேழ் வட்டம்" (அகம்: 340)

அகிலும், கண்ட சருக்கரையும், கூந்தலுக்குப் புகையூட்டப்பயன் கொள்ளப்பட்டன என்பதற்கும் இலக்கியச் சான்றுகள் உள. "குடதிசை மருங்கின் வெள் அயிர் தன்னொடு, குணதிசை மருங்கின் கார்அகில் துறந்து, (சிலம்பு:4:35-36).

மகளிர், தம்கூந்தலில் மாலை சூடிக்கொள்வதினும் ஒரு சில மலர்களை சூடிக்கொள்ளவே விரும்புவர் என்பதும்' சின்மலர் மங்கலம் குறிக்கும் என்பதும் சிலப்பதிகார மூலத்தாலும் அதன் உரையாலும் தெரிய வருகின்றன. "பல்லிருங் கூந்தல் சின்மலர்" (2:65), "தேமென் கூந்தல் சின்மலர்" (15: 133) என்ற மூலவரிகளையும், "சின்மலர்= மங்கலமலர்; கற்பு முதலியவை அருச்சனை மலருமாம்" என்ற அடியார்க்கு நல்லார் உரையினையும் காண்க. (2; 65)

# 7. பருவாய்த் தடவு

மகளிர் தம் மங்கலமாண்பு நலம் கண்டு மகிழ்ந்த மன நிறைவோடு மாளிகையின் மேல்மாடி நோக்கிப் படியேறத் தொடங்கினார் புலவர். இடையில் ஒரு தளம், கையாளப் படாமல் இருக்கும் பொருள்களைப் போட்டுவைக்கும் இடம், அப்பொருள்களுள் ஒன்று புலவர் கருத்தை ஈர்த்துவிட்டது, ஆலவட்டம் என அழைக்கப்படும் விசிறி உடல் வியர்க்குமளவு வெப்பம் மிகும் வேனிற்பருவத்தில் அவ்வெப்பத்தைத் தணிக்கும் காற்றின் அசைவினை உருவாக்கப் பயன்படுவது. அதன் பயனும் பெருமையும் அறிந்தவர் அம்மனைவாழ் மக்கள். அதனால் பனையோலையால் ஆனதுபோலும் எளிய ஒன்றாக இல்லாமல், விசிறி வகைகளுள் சாலவும் சிறந்ததான ஒன்றை வாங்கி வைத்திருந்தனர். விசிறிவனை வதில் கைதேர்ந்த தொழில்வல்லான் ஒருவனால் வேண்டும் போது விரிவாக்கவும் வேண்டாதபோது மடக்கவும் கூடிய தாய்ச், செந்திறம் ஊட்டப் பெற்று வனப்புற வனையப் பட்டிருந்தது, அந்த ஆலவட்டம். ஆனால், புலவர் அதைக் காண்பதோ, கூதிர்ப்பருவத்தில் அது, அப்போது தேவை இல்லை. அதனால், அது, கையாளப்படும் பொருட்கள் வரிசையில் இடம் பெறவில்லை. ஆனால்; அப்போது தேவையில்லை எனினும், அடுத்துவரும் வேனிற்பருவத்துக்கு அது நனிமிகத் தேவை. அதுவுமல்லாமல், அரிதின் வனையப்பட்ட அரும்பொருள் அது. ஆகவே, அதை வறிதே வீசி எறிந்துவிடாமல், உள்ளிடு பொருட்களை வெளிக் காட்டவல்ல மெல்லிய துணியிலான உறையினுள் இட்டு, சுவற்றில் அடித்திருக்கும் முளைக் கோலில் மாட்டி நால விடப்பட்டிருந்தது. அது, அவ்வாறு நால விடப்பட்டு

நாள்பல கடந்து விட்டது. பலநாளாக, அதைக் கையால் தொடுவதும் இலர். இதை, அந்த உறை சுற்றிச் சிலந்தி, தன் வாய் நூலால் பின்னிவிட்டிருக்கும் வலை அறுபடாமல் இருப்பதுகொண்டு உணர்ந்துகொண்டார் புலவர்.

பயனளிக்கும் பொருள்களை, அவை பயன்படாக் காலத்தும் பேணிக்காக்கும், அம்மனைவாழ்வாரின் பொறுப் புணர்ச்சியை உள்ளுக்குள் வியந்தவாறே படியேறினார் புலவர். ஏற ஏறப், படி வளர்ந்துகொண்டே போயிற்று. வானத்தைத் தொட்டுவிட்டதோ என ஐயுறுமளவு உயர்ந் திருந்தது அம்மாளிகையின் மேல் மாடம். அம்மாடத்தின் நான்கு பக்கங்களிலும், வாழ்வார்க்குக் காற்று குறைபாடு நேராமை குறித்துப் பலகணிகள் பொருத்தப்பட்டிருந்தன. அம்மாடத்தில், மனைவாழ்வார் பள்ளிகொள்ளும் அறையுள் சென்று நின்றார் புலவர். வேனிற்பருவத்தில் வெப்பம் போக்கி, மேனியைக் குளிர்விக்கும் தென்றல் காற்று வந்து புகும் பலகணிகளை நோக்கினார். சிறுகாற்றும் நுழைந்து விடாதவாறு, இடைவெளி சிறிதும் இல்லாமல் பொருத்தப் பட்டிருக்கும் பலகணி கதவுகள் அனைத்தும் அடைக்கப்பட்டுத் தாழிடப்பட்டிருந்தன. கூதிர்ப்பருவத்தில் திறந்து வைக்கப் பட்டிருந்ததால், பனிக்காற்று உள்புகுந்து பள்ளி கொள்வாரைக் குளிரால் நடுங்கச் செய்துவிடும் என்பது உணர்ந்து, அவற்றை எப்போதும் அடைத்து வைத்திருக்கும், மனைவாழ்வோரின் அறிவு நலம்கண்டு அளப்பிலா மகிழ்வு எய்தினார்.

மாளிகையின் மற்றொரு அறையுள் புகுந்தார். கோடையில், உண்பார்தம் நீர்வேட்கையைத் தணிப்பதோடு உடலின் அகப்புற வெப்பங்களை, அறவே இல்லாமல் ஆக்கும் பொருட்டு, அம்மனைவாழ் மக்கள், குளிர் ஊட்டப் பட்ட நீரே உண்பவர். அதற்காகத் தன்கண் உள்ள நீர்,

வெப்பம் அடைந்துவிடாமல், குளிர்ந்தே இருக்கச் செய்வதான, வயிறு அகன்று, வாய் குறுகியிருக்கும் மட்கலங்களில் உண்ணு நீரைமுகுந்து வைப்பர். அத்தகு உண்ணு நீர்க்கலங்கள் சிலவற்றை, அவ்வறையுள் கண்டார். ஆனால், அவையெல்லாம், பயன்கொள்வது விடுத்து, வறிதே அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பனிக்கட்டியின் தன்மை ஊட்டப் பெற்ற தண்ணீர் கோடைக்குத்தான் பொருந்தும். பல்பறை கொட்டுமளவு குளிர்மிகும் கூதிர்ப்பருவத்தில், அக்குளிர் நீர் உட்கொள்ள நாக்கும் இடம் தராது. உண்டால் உடலும் நலம் இழந்து நலிவுற்றுப்போகும். இத்தகு மருத்துவ அறிவு வாய்க்கப் பெற்றவர் அம்மனைவாழ் மக்கள். அதனால், கோடையில் உயிர் ஓம்பும் உயர்ந்த பொருளாக மதிக்கப்படும் அக்காலங்களை, மனையின் ஒருபால் வறிதே அடுக்கி வைத்திருக்கும் நிலையைக் கண்ணுற்றவாறே, மற்றொரு அறையினுள் நுழைந்தார்.

ஆங்கு, அம்மனையில் உள்ள இளையரும் முதியருமாகிய எல்லோரும் வட்டமாய் அமர்ந்திருக்க, அவர் நடுவே வாய் அகன்ற இத்தளம் அல்லது தடவு என்றெல்லாம் வழங்கப் பெறும் இறும்புச்சட்டி கிடக்க, அதில் செந்நிறம் காலும் நெருப்பு கணத்துக் கொண்டிருந்தது. அதைச் சுற்றிருந்த அவர்கள், அந்நெருப்பு காலும் வெப்பம், தம்மேனியெல்லாம் படர்ந்து, குளிர்போக்கி, வேண்டும் வெப்பத்தை வேண்டு மளவே ஊட்ட மனம்நிறை மகிழ்வெய்தி இருந்தனர்.

நிலைகுலையாகக் குன்றையும் நிலைகுலையச் செய்யும் கடுங்குளிர் காலம். ஆகவே, அறையின் பலகணிகளை அடைத்து விடுவதாலோ, குளிர்நீர் குடியாமையாலோ,

குளிரின் கொடுமையிலிருந்து காத்துக்கொள்வது இயலாது. செந்நெருப்பின் சூடுகொண்டால் அல்லது, குளிர்போகாது என்பது உணர்ந்து, கணப்பில் குளிர்காயும் அவர்கள் அறிவு நலம் கண்டு அகமகிழ்ந்தார் புலவர்.

''கைவல் கம்மியன் கவின்பெறப் புனைந்த
செங்கேழ் வட்டம் சுருக்கிச் கொடுந்தறிச்
சிலம்பி வான்நூல் வலந்தன தூங்க,
வானுற நிவந்த மேனிலை மருங்கின்
வேனிற் பள்ளித் தென்வளி தரூஉம்
நேர்வாய்க் கட்டளைதிரியாது, திண்ணிலைப்
போர்வாய்க் கதவம் தாழொடு துறப்பக்
கல்லென் துவலை தூவலின் யாவரும்
தொகுவாய்க் கன்னல் தண்ணீர் உண்ணார்,
பகுவாய்த் தடவில் செந்நெருப்பு ஆர''

(57-66).

உரை:

கைவல் கம்மியன்=தொழில்வல்ல தட்டான்.
கவின் பெறப் புனைந்த=அழகுபெறப் பண்ணிய.
செங்கேழ் வட்டம்=சிவந்த நிறத்தையுடைய ஆலவட்டம்
சுருக்கி=உறையிடப்பட்டு.
கொடுந்தறி=வளைந்த முளைக்கோலில்.
சிலம்பி வான்நூல் வலந்தன=சிலந்தியின் வெள்ளிய நூலால் சூழப்பட்ட வாய்.
தூங்க=தொங்கவிடப்பட்டிருக்க.
வானுற உயர்ந்த=வானளவு உயர்ந்த.
மேனிலை மருங்கின்=மேல்மாடத்தில்
வேனில்=வேனிற்பருவத்தில்.
பள்ளி=பள்ளி கொள்வார்க்கு
தென்வளி தரூஉம்=தென்றல் காற்றைத் தரும்.

நேர்வாய்க் கட்டளை திரியாது=பலகணி முன்நின்று உலவாது.

திண்ணிலைப் போர்வாய்க் கதவம்=இடைவெளி இடம் பெறாது, இணைக்கப் பெற்ற, பொருந்தும் வாயினைக் கொண்ட கதவுகள்.

தாழொடு துறப்ப=தாழிடப்பட்டுக்கிடக்க.

கல்லென் துவலை தூவலின்=கல் என்னும் ஓசையினை எழுப்பும் சிறுதூரல் எங்கும் தூவிக்கொண்டிருப்பதால்.

யாவரும் = இளையரும், முதியரும் ஆகிய எல்லோரும்.

தொகுவாய்க் கன்னல் = குறுகிய வாயையுடைய குடத்தின்கண் உள்ள.

தண்ணீர் உண்ணார் = குளிர்ந்த நீரைக் குடியாமல்.

பகுவாய்த் தடவில் – வாய் அகன்ற இத்தளத்தில் இட்டிருக்கும்.

செந்நெருப்பு ஆர = சிவந்த நெருப்புதரும் வெம்மையை விரும்பி ஏற்றுக்கொள்ள.

வேனிற்காலத்தில், வெம்மை தணித்து குளிர் ஊட்டும் தென்றல் காற்று, புகுதற்கேற்பச் சாளரங்களைத்திறந்து வைக்கவும், கூதிர்க் காலத்தில், குளிர்காற்று உள்நுழைந்து விடாதவாறு அடைத்து வைக்கவும், கூதிர்ப்பருவந்தில் செந் நெருப்பில் குளிர்காயவும் கற்ற நாகரிக வாழ்வினர் பண்டைத் தமிழர் என்பதை இளங்கோ அடிகளாரின் சிலப்பதிகார வரிகள் சிலவும் உறுதி செய்கின்றன. ''கோலச்சாளரக் குறுங்கண் நுழைந்து, வண்டோடுபுக்க மணவாய்த் தென்றல்'' '' (2:23:24) '' முகில்தோய்மாடத்து அகில் தரு விறகின், மடவரல் மகளிர் தடவு நெருப்பு அமர்ந்து, நறுஞ்சாந்து அகலத்து நம்பியர் தம்மொடு, குறுங்கண் அடைக்கும் கூதிர்க்காலை '' (14:98-101).

—oo—

# 8. யாழ் இசை வல்ல ஏழிசை வல்லபி

செழுங்குடிச் செல்வர்குடிவாழும் தெருவினை விடுத்து, அரசன் பெருங்கோயில் நோக்கிச் சென்று கொண்டிருந்த புலவர், இடைவழியில், அவர் செவியுள் புகுந்த குரல் இசையும் யாழ் இசையும் கலந்து வந்து இன்ப ஓசை, அவர் நடையைத் தடுத்து நிறுத்திவிட்டது. குரல் இனிய குரல்; இசை, மரபு கெடாமல் ஒலிக்கிறது. ஆனால் உடன் ஒலிக்கும் யாழ் ஓசை, இசை இயல்புக்கு மாறானதாக, இசையொடு பொருந்தாதாக இருப்பது உணர்ந்தார்.

அனைத்துக் கலைகளிலும் துறைபோனவர் வாழும் இடம், இம்மாநகர் ஈங்கு யாழ் இசையினைக் குறைபட இசைப்பாரும் இருக்கின்றனரே! அக்குறையுடையாவர்? என்ற சினத்தோடு கலந்த ஐயம் எழவே அவ்விசை எழுந்த இல்லத்துள் நுழைந்தார். அது ஓர்ஆடல் மகள்மனை. அவர் நுழைந்தபோது, அவள் இசைக்கருவிக்கு ஏற்புடையது எனத்தேர்ந்து கொண்ட, கரியமரத்துண்டு கொண்டு பண்ணிய சிறிய யாழைத், தன் இடது கையால் மார்புறத் தழுவிக் கொண்டிருக்க, அவள் வாய் இனிய பாடல் ஒன்றைப்பாடிக் கொண்டிருந்தது.

குரல் ஒலியொடு, யாழ் ஒலி ஒத்து ஒலிக்கவில்லை என்பதறிந்து, அது சரிசெய்ய, நரம்பினை ஏற்றுவதும், இறக்குவதும், முடுக்குவதும், தளர்த்துவதுமாக ஏதேதோ செய்து பார்த்தாள். ஆனால் ஏது செய்தும், அது சரி செய்யப்படவில்லை, இசை மரபு, யாழ் இயல்புகளை

உணர்ந்தவள் அவள். அதனால், குற்றம், யாழ் வடிவில் இல்லை. அது காலம் செய்த குற்றம். காலம் கூதிர்க்காலம். அக்காலத்துக் குளிர்ச்சிக் கொடுமை, அந்த யாழையும் விட்டுவிடவில்லை. பனியால், நரம்பு ஈரம்பட்டுக் கிடக்கிறது. நரம்பு ஈரம்பட்டுவிடவே தான், அதிலிருந்து இயல்பான இனிய ஒலி எழ மறுக்கிறது என்பதை உணர்ந்தாள். உடனே நரம்பின் குளிர்ச்சி போக்கி, அதற்கு வெப்பம் ஊட்ட எண்ணினாள்.

கணப்பு அருகே கொண்டு சென்று காட்டினால், நரம்பு இளகிப் பாழுற்றுப் போய் விடும் என்பதையும் அவள் அறிவாள். மேலும் நரம்பின் குளிர்ச்சி போக்கவல்ல வெப்பம், தன் மேனியிலேயே இருப்பதையும் உணர்ந்தவள் அவள். மகளிர் மார்பகம் கோடையில் குளிர்ந்தும், கூதிர்ப் பருவத்தில் வெப்பம் உற்றும் இருக்கும். இதை உணர்ந்தவள், அதனால், யாழ் நரம்பினைத், தன் மார்பில் மேலும் கீழுமாகத்தடவிக் கொடுத்தாள். சிறிது பொழுது அது நடந்தது. பிறகு நரம்பினை மீட்டி பார்த்தாள். இயல்பான இனிய ஓசை எழுந்துவிட்டது. தன்னை மறந்து அவள் பாடினாள். புலவரும் இசை வெள்ளத்தில் ஆழ்ந்து தம்மை மறந்து விட்டார் சில நாழிகை.

மாநகர் வீதியுள் நுழைந்தது முதல், அம்மனையை விட்டு வெளியேறும்வரை, சிறுசிறு தூறல்களைத் தூவிக் கொண்டிருந்த வானம், திடுமெனக் கனமழையாகப் பெய்யத் தொடங்கிவிட்டது. அதுகேட்டு விழிப்படைந்த புலவர், காதலன் உடன் இருக்க, தம்மார்பு வெப்பத்தால், அவன் மார்புக்கு இன்பம். ஊட்டித், தாமும் இன்புற்றிருக்க வேண்டிய மகளிர், கூதிர்ப்பருவம் வந்துழி காதலர் வாராமையால், தனித்திருக்கும் நிலையில் தம்மார்பு வெப்பத்தைத்,

தம்மை யாழ் நரம்புகளுக்குச் சூடேற்ற மட்டுமே பயன் கொள்ளவேண்டிய அவலநிலைக்கு அவர் வருந்த, அவர் வருந்தும் நிலைக்குத்தாமும் வருந்தினார் புலவர்.

''ஆடல்மகளிர் பாடல் கொளப் புணர்மார்
தண்மையில் திரிந்த இன்குரல் தீந்தொடை
கொம்மை வருமுலை வெம்மையில் தடைஇக்
கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை நிறுப்பக்
காதலர் பிரிந்தோர் புலம்பப்பெயல் கனைந்து
கூதிர் நின்றன்றால் போதே -67-72.

உரை :

ஆடல் மகளிர் = ஆடல் தொழிலை உடைய மகளிர்.
தண்மையில் திரிந்த = பனி தரும் குளிர்ச்சியால் தன் நிலை குலைந்த.
இன்குரல் தீந்தொடை = இனிய குரலை இயல்பாக எழுப்பும் நரம்பை,
பாடல் கொள = தாம்பாடும் வாய்ப்பாட்டினை, யாழ் தன்னிடத்தே கொள்ளும்படி.
புணர்மார் = நரம்பைக் கூட்டுவதற்கு.
கொம்மை வருமுலை வெம்மையில் தடைஇ = பருத்து வருகின்ற முலையின் வெப்பத்தே தடவி.
கருங்கோட்டுச் சீறியாழ் = கரிய தண்டினையுடைய சிறிய யாழை,
பண்ணுமுறை நிறுப்ப = பண்நிற்க வேண்டிய முறையில் நிறுத்த.
காதலர்ப் பிரிந்தோர் புலம்ப = கணவரைப் பிரிந்த மகளிர் வருந்தாநிற்க,
கூதிர் நின்றன்றால் = கூதிர்ப் பருவமாய் நிலைபெற்றது,
போது = அக்காலம்.

# 9. அரசன் பெருங் கோயில்: அடிக்கல் நாட்டு விழா

தம் மண் காக்கவும், பிறர் மண் கொள்ளவும், நாடாள்வான் மேற்கொள்ளும் போரில் பங்குகொண்டு, புகழ் ஈட்டவும் பொருள் ஈட்டவும் கணவன்மார் பிரிந்து போயிருக்கத் தனித்துவிடப்பட்டிருக்கும் மாநகரத்து மகளிர், கூதிர்ப்பருவத்தின் கொடுமையால், இவ்வாறெல்லாம் வருந்துகின்றனர் என்றால், வேந்தன், பகைநாட்டு பாசறைக்கண் பாடிகொண்டிருக்க, அரண்மனைக்கண் தனித் திருக்கும் அரசமாதேவியின் நிலையாதோ என்ற எண்ணம் எழவே, அரண்மனை நோக்கிப் புறப்பட்டார் புலவர்.

கட்டிடக்கலையின் கரைகண்ட வல்லார்களான கொத்தன், கொல்லன், தச்சன், தட்டான் ஆகிய அனைவரும் ஒன்று கூடியிருந்து, ஒன்று கலந்துபேசி, நல்ல நாளும் நாழிகையும் பார்த்து, நால்வேறு திசைகளிலும் உள்ள தெய்வங்களை யெல்லாம் வழிபட்டு, அகழியும், மதிலும், வாயிலும், மாளிகையும், மன்றமும், மணிமாடமும், நாளோலக்கப் பேரவையும், நாற்படைக் கொட்டிலும், எங்கெங்கு எந்தெந்த அளவில் அமையவேண்டும் என்பதை அறுதியிட்டு வரைபடம் வரைந்துகொண்டு அறுதியிட்ட அந்த அளவில் சிறிதும் பிழை படாவண்ணம், கயிறு கொண்டு நுண்ணியதாக அளந்து கண்டு கட்டிமுடிக்கப்பட்டது அரசன் பெருங்கோயில்.

அரண்மனை, ஒரு குறுநில மன்னன் இருந்து கோலோச்சும் சிறுமையுடையதன்று. பெரும்பெயர் மன்னர் எனப்புகழ் விளங்க நாடாளும் முடியுடை வேந்தர் மூவர் உள்ளும், அக்காலச் சிறந்து விளங்கிய பாண்டிய மன்னன்,

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் இருந்து நாடாளும், பெருங்கோட்டை ஆகவே, அப்பெருநிலைக்கு ஏற்ப உருவாக்கப்பெற்றது. அக்கோட்டையின் அடிக்கல் நாட்டுவிழாவிற்கு வந்திருந்தவர்களுள் புலவரும் ஒருவர்.

அரசன் பெருங்கோயில் அமைக்க, சித்திரை திங்களில், ஞாயிறு நிலத்தின் நடுப்பகுதியில் நிற்கும் அந்தச் சிறு நாழிகையே ஏற்புடையது என்பதை உணர்ந்து அந்த நேரத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது, அந்த நாழிகையை, நுண்ணியதாக அறுதியிட்டு அறிவது அத்துணை எளிய செயல் அன்று. சித்திரைத் திங்கள், பத்தாம்நாள் தொடங்கி, இருபதுநாள் முடிய உள்ள நாட்களில் ஏதேனும் ஒருநாளில் தான், ஞாயிறு நிலத்தின் நடுப்பகுதியில் வந்து நிற்பான். அது எந்த நாள்? எந்த நாழிகை என்பதைக் கணிப்பது அத்துணை எளிய செயல் அன்று. வளைதல் இல்லாத செவ்விய இரண்டு கோல்களை, நிலத்தில் அடுத்தடுத்து இருக்க, ஒவ்வொன்றும், நான்கு பக்கங்களில் எப்பக்கத்திலும் சாய்ந்து விடாவாறு செங்குத்தாக நிறுத்தி வைத்து, சித்திரைத் திங்கள் பத்தாம்நாள் தொடங்கி, இருபதாம்நாள் வரையும் அக்கோலின் அணித்தாகவே விழிப்போடு அமர்ந்து இருந்து, அக்கோலின் நிழல், கோலைக் கடந்து வீழ்ந்து விடாது, அக்கோலிலேயே அடங்கி விடுகிறதா என்பதை ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நாழிகையும் நுணுகி நோக்கியிருந்து, என்று, எந்நாழிகையில் அவ்வாறு அடங்கி நிற்கிறதோ, அந்த நாழிகையே, ஞாயிறு நிலத்தின் நடுப்பகுதியில் நிற்கும் நாழிகையாம் என்பது அறிந்து அந்நாழிகையில், அடிக்கல் நாட்டப்பட்டது.

''மாதிரம்
விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்
இரு கோல் குறிநிலை விழுக்காது குடக்கேர்பு
ஒருதிறம் சாரா அரைநாள் அமையத்து
நூலறி புலவர் நுண்ணிதின் கயிறிட்டு
தேஎங் கொண்டு தெய்வ நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனை வகுத்து
ஒருங்குடன் வளைஇ ஓங்கு நிலை வரைப்பு
(72—79)

உரை:

மாதிரம் = திசைகளில்

விரிகதிர் பரப்பிய = விரிந்த கதிர்களைப் பரப்பிய.

வியல்வாய் = அகன்ற இடத்தை உடைய

மண்டிலம் = ஞாயிற்று மண்டிலம்

இருகோல் = அணித்து அணித்தாக இரண்டு இடங்களில் நாட்டிய இரண்டுகோல்கள் இடத்தும்

குறிநிலை = சாயாநிழலாய் தாரைபோக ஒடுகின்ற நிலையை.

வழுக்காது = குறித்துக் கொள்ளும் தன்மை தப்பாதபடி.

குடக்கு ஏர்பு = மேற்றிசைக்கண் சேரற்கு எழுந்து,

ஒருதிறம் சாரா அமையத்து = ஒரு பக்கத்தைச் சாராப்போகாத சித்திரைத்திங்களின் நடுவில் பத்தி தின்றயாதொரு நாளில்

அரைநாள் = பதினைந்தாம் நாழிகையில்

நூலறி புலவர் = சிற்ப நூல் அறிந்த தச்சர்.

நுண்ணிய தின் கயிறிட்டு = நூலைக் கூரிதாக நேரே பிடித்து.

தேஎம் கொண்டு = திசைகளைக் குறித்துக்கொண்டு

தெய்வம் நோக்கி = அத்திசைகளில் நிற்கும் தெய்வங்களை வணங்கி.

பெரும்பெயர் மன்னர்க்கு ஒப்ப = பெரும்புகழ் வாய்ந்த பேரரசர்க்கு ஏற்புடைய.

மனைவகுத்து = மனைகளையும், வாயில்களையும், மண்டபங்களையும் வகைப் படுத்தி.

ஒருங்குடன் வளைஇ = இவ்விடங்களையெல்லாம் ஒருசேர வளைத்து.

ஓங்கு நிலை வரைப்பு = உயர்ந்த நிலையினையுடைய மதில் அகத்தே.

—o—

# 10. அரசன் பெருங் கோயில்

அரசன் பெருங் கோயில் அடிக்கல் நாட்டு விழாவுக்கு வந்த புலவர், அவ்விழா முடிந்ததும் போய்விடவில்லை. அரணுக்கு உள்ளே அமையவேண்டிய, அத்தனை மாடமாளிகைகளும் கட்டப்பட்டு, சுற்று மதிலும் கட்டிமுடிக்கப் பட்டு அரணகத்தே நுழையும் வாயில் அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு விட்டது, அது வரையும், புலவர் அவ்விடம் விட்டுச் சென்றார் அல்லர். வாயில் அமைக்கும் பணியை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தார்.

வாயில் வீட்டு வாயில் அன்று. கோட்டை வாயில். மதிற் சுவருக்குமேல், கோபுரம் உயர்ந்துநிற்க, இடையே, இத்தகு பெரிய வாயில் அமைந்திருந்தது, காண்பவர் எவரும் குன்றைத் துளைத்து உருவாக்கியதோ என வியந்து நிற்பர். பகை வென்று மீளும் வேழப் படைகள், தம் மீது வீற்றிருக்கும் வீரர்கள், உயர்த்திப் பிடித்திருக்கும் வெற்றிக்கொடி வானளாவ பறக்கும் வண்ணம், நுழைதற் கேற்ற உயரம் உடையதாக அமையவேண்டும் என எண்ணி அமைக்கப்படுவது மேற்கொள்ளப்பட்டது.

வாயில் பெரிய வாயில். அதற்கு ஏற்ற கதவு வேண்டாமா? வெற்றிக்கொடி பறக்கும் கோட்டைதான்! ஆனால் அதுவும் ஒரோவழி. பகைவரால் முற்றுகைக்கு உள்ளாக்கப்படவும் கூடும். அதை எதிர் நோக்கிப், பகைப்படையின் மோதலால், நிலைகுலைந்து போகாத் திண்மை வாய்த்ததாக இருத்தல் இன்றியமையாதது வாயிற்கதவுகளும் என உணர்ந்து இருந்தனர் கோட்டை அமைப்பாளர்கள்.

இரட்டைக் கதவுகள்தான். ஆனாலும், அவ்வளவு பெரிய கதவினை ஒரே பலகையால் செய்வது இயலாது. பலகைகள் சிலவற்றை இணைத்தே செய்ய வேண்டும். ஆனால் செய்தவனோ தச்சுக்கலையில் வித்தகன். அவன் பல பலகைகளால் ஆனாது அன்று, ஒரே பலகையால் ஆனது-என எண்ணுமாறு, இணைப்பு தெரியாமல், கிட்டியிட்டு இணைத்து, இருபத்தேழு நாண்மீன்களில், உத்தரம் என்னும் நாள் மீனின்பெயர் பெற்ற உத்தர மரத்தில் செருகியிருந்தான். எவ்வளவு தான் கிடுக்கி இணைத்திருந்தாலும் மரம் மரந்தான். பகைப்படை யானைகளால் தாக்குறின் முறிந்து போகவும் கூடும்.

அது நிகழா வண்ணம், இரும்பால் ஆன பட்டங்களைப் பெரிய பெரிய ஆணிகள் அடித்துப் பொறுத்தியிருந்தான். கதவுகளை வலுவுடையவாக ஆக்கி விட்டனர். பட்டம்கட்டி ஆணி அடித்து விட்டால் மட்டும் போதுமா? மரமாயிற்றே; மழையில் நனைந்தால் நாளாவட்டத்தில் சாக்காடு பட்டு விடும் என்பதால், தண்ணீர் பட்டாலும் மரத்தைப் பாழுறச் செய்யாமை கருதி, மரத்தைச் சாதிலிங்கம் கொண்டு பூசுவதும் செய்து வைத்தனர். புறத்தே மலரும் பருவத்துப் பேரரும்பாய் இருந்து மலர்ந்த குவளை மலர் போலும் வடிவம் உடைய கைப்பிடியையும், அகத்தே தாழ்ப்பாளையும் பொறுத்தி வலுவான வாயிற்கதவுகளை மாட்டி விட்டனர்.

கதவுகளை வலுவுடையவாக ஆக்கிவிட்ட அவர்கள் உள்ளத்தில், அவற்றை வனப்புடையவாகவும் ஆக்க வேண்டும் என்ற ஆசை எழுந்தது. அவ்வளவே; தாமரை மலரில் திருமகள் வீற்றிருந்து தன் இருபக்கமும் தூக்கிய அவள் இருகைகளும் குவளைமலரைத் தாங்கி நிற்க, இரண்டு பக்கமும் இரண்டு யானைகள் நின்று தம் துதிக்கையால்

முகந்து வந்த நீரை, அம்மலர்கள் மீது சொரிந்து வழி படுவது போலும் வனப்பு மிகு வடிவத்தைச் செதுக்கிவிட்டனர்; அவ்வாறு செதுக்கிக் கண்ட திருமகளின் தெய்வத் திரு மேனிக்கு வெண்சிறுகடுகைச் சாந்தாக அரைத்து நெய்யில் கலந்து அப்பிப் பேணி வைத்தனர்.

திருமகள் தெய்வத்திருமேனியை வழிபட்டுத் திரும்பினார் புலவர். எதிரே முற்றம் தோற்றமளித்தது. நாடாள்வான் அருள்நாடி வருவோர் சிலநேரம், அம் முற்றத்தே காத்திருக்க நேரவும் கூடும். ஆங்கு இருக்கும் அவர் இனிதே இருக்கும் வகையில் அம் முற்றமும் அழகு செய்யப் பெற்றிருந்தது. புதுமணல் பரப்பப்பட்டிருந்தது. ஒருபால் செயற்கையாக உருவாக்கிய நீர்நிலை; அதில் அன்னப்பறவைகள் தவழ்ந்து கொண்டிருந்தன. மற்றொரு பால் ஒருசிறுபூங்கா. கவரிமான் சில துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன. அவற்றின் தாவலைக் காணும் அன்னப் பறவைகளும், தம் சிறகுகளை விரித்துத் தாழத் தாவலாயின'

முற்றத்தின் அழகைக் கண்ணுற்ற களிப்போடு, கோட்டை அகத்தே உள்ள அரசன் பெருங்கோயிலை நோக்கி நடைபோட்டார் புலவர். செல்லும் அவரை ஓர் ஒலி கவர்ந்தது. உற்று கேட்டார். அது, குதிரைகள் புல்லை வாயில் கொண்டு குதுப்புங்கால் எழுப்பும் ஒலி. உடனே அவ்வொலி வந்த திசை நோக்கிச் சென்றார். ஆங்கு ஒரு குதிரைக் கொட்டில்; தலையாட்டம் அணிந்து அழகு செய்யப் பெற்ற குதிரைகள் வரிசை வரிசையாகக் கட்டப்பட்டிருந்தன. அவையெல்லாம் போர்ப்பயிற்சி பெற்றவை. எப்போதும் போரில் ஈடுபடுவதையே விரும்புவதல்லது வறிதே கட்டிப் போட்டிருப்பதை விரும்பாதவை. அதனால்தான் நிலை

கொள்ளாது, உணவாகப் போடப்பட்ட புல்லையும் உண்பது வெறுத்து குதப்பிக் கொண்டிருந்தன. அவற்றின் போர் வேட்கை கண்டு அவற்றைப் பாராட்டினார் புலவர்

அவற்றைப் பாராட்டிக் கொண்டிருக்கும் போதே, மலையருவி போலும் ஒலி கேட்கவே, ஏது இங்கு மலை என ஒருபால் அண்ணாந்து நோக்கினார். மலைபோல் உயர்ந்த மாளிகை காணப்பட்டது. மாளிகையின் மேல் மாடிக்குச் சென்றார். அது, அரண்மனை வாழ்வார், நிலாவின் அழகைக்காண விரும்பும் போதெல்லாம் வந்து கூடும் நிலா முற்றம். முற்றத்துக் கூரையின் கூடுவாய் மகரமீன் வடிவில் அமைந்திருந்தது. அதன் வழியே மழைநீர் வந்து கொட்டுவது போல், அம்மாடத்து மேனிலைத் தொட்டியினின்றும் நீர்வந்து வீழ்ந்து கொண்டிருந்தது. அந்நீர் எழுப்பும் ஒலியே தாம் கேட்ட ஒலி என்பதறிந்த புலவர், மழையில்லாக் காலத்தும், மழைநீர் தரும் ஒலிகேட்டுமகிழும், அம்மனை வாழ்வாரின் மாண்புமிகு வாழ்வு நலம் பெருக வாழ்த்தினர்.

அவர் வாழ்த்தொலி அடங்கக்கேட்டது மற்றும் ஒரு பேரொலி. அவ்வொலி வந்த திசை நோக்கிச் சென்றார். அது ஒரு சோலை. மயிற்கூட்டம் நிறைந்து விளையாடும் சோலை. தோகைகளை விரித்து, அத்தோகைகள் அளித்த அழகால் செருக்குற்று நடமாடும் அம்மயிற் கூட்டம், மகிழ்ச்சி மிகுதியால் ஆரவாரித்துக் கொண்டிருந்தன. அந்த ஆரவார ஒலியே அவர் கேட்டது. அது கேட்ட அவர் மனக்கண்முன், பல்வேறு விலங்குகள் ஒருசேர ஒலிக்கும் ஒலியும், அருவிகள் பல எழுப்பும் ஒலியும், மயில் முதலாம் பல்வேறு பறவைகள் எழுப்பும் ஒலியும் கலந்து ஒலிக்கும் ஒரு மலையே வந்து காட்சி அளித்தது. அக்காட்சி நலத்தால் மெய்ம்மறந்து நின்று விட்டார் புலவர் சில நாழிகை.

"பரு இரும்பு பிணித்துச் செவ்வரக்கு உரீஇத்
துணைமாண் கதவம் பொருத்தி, இணைமாண்டு
நாளொடு பெயரிய கோள் அமை விழுமரத்துப்
போதவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத்துத்
தாளொடு குயின்ற போரமை புணர்ப்பிற்
கைவல் கம்மியன் முடுக்கலின் புரைதீர்ந்து
ஐயவி அப்பிய நெய்யணி நெடு நிலை
வென்று எழு கொடியொடு வேழம் சென்று புகக்
குன்றுகுயின்றன்ன ஓங்கு நிலை வாயில்
திருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பின்,
தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றத்து
நெடுமயிர் எகினத் தூநிற ஏற்றை
குறுங்கால் அன்னமொடு உகளும் முன்கடைப்
பணைநிலை முனைஇய பல்லுளைப் புரவி
புல்லுணாத் தெவிட்டும் புலம்புவிடு குரலொடு
நிலவுப்பயன் கொள்ளும் நெடுவெண் முற்றத்துக்
கிம்புரிப் பகுவாய் அம்பணம் நிறையக்
கலிழ்துவீழ் அருவிப் பாடுவிறந்து அயல
ஒலிநெடும் பீலி ஒல்க மெல்லியல்
கலிமயில் அகவும் வயிர்மருள் இன்னிசை
நளிமலைச் சிலம்பில் சிலம்பும் கோயில்"

—(80—100)

**உரை:**

பரு இருப்பு பிணித்து = ஆணிகளும், பட்டங்களுமாகிய பெரிய இரும்பாலே கட்டி,

செவ்வரக்கு உரீஇ=சாதிலிங்கம் வழித்து

தாளொடு குயின்ற=தாழ்ப்பாளோடு சேரப் பண்ணின

துணை மாண் கதவம் பொருத்தி=இரண்டாய் மாட்சிமைப் பட்ட கதவுகளைச் சேர்த்து,

இணைமாண்டு = இணைதல் மாட்சிமைப்பட்டு
புதுபோது அவழ் குவளை பிடிகால் அமைத்து = நடுவே
திருமகளும் இரண்டுபக்கமும் இரண்டு
செங்கழுநீர் மலர்களும், இரண்டு பிடிகளுமாக
தன்னிடத்தே பண்ணி.

நாளொடு பெயரிய=உத்தரம் என்னும் நாளின் பெயர்பெற்ற
விழுமரத்து=சிறந்த மரமாகிய உத்தரத்தில்
கோள் அமை=செருகப்பெற்ற-
கைவல் கம்மியன் = கைத்தொழில் வல்ல தச்சன்.
முடுக்கலின்=கடாவுகையினாலே.
புரை தீர்ந்து=இணைப்பு எனும் குறை தீர்ந்து. (அதாவது இணைப்பே தெரியாமல் பொருந்தி)
போர் அமை புணர்ப்பின்=பல மரங்களும் தம்மில் கிட்டுதல் அமைந்த.
ஐயவி அப்பிய=வெண்சிறு கடுகு அப்பி வைத்த.
நெய்யணி=நெய்ய அணிந்த.
நெடுநிலை=நெடிது உயர்ந்த நிலையினை உடைய.
வென்று எழு கொடியொடு = வெற்றி கொண்டு ஏந்திய கொடிகளோடே.
வேழம் சென்று புக=யானைகள் சென்று புகும்படி உயர்ந்த.
குன்று குயின்றன்ன = மலையைக் குடைந்து திறந்தால் போன்ற.
ஓங்கு நிலை வாயில் = உயர்ந்த கோபுரங்களையும்.
திருநிலை பெற்ற = திருமகள் நிலையாகத் தங்கிவிட்ட.
தீதுதீர் சிறப்பின்=குற்றம் இல்லாத் தலைமையினையும்.
தருமணல் ஞெமிரிய=புதுமணல் பரப்பிய.
திருநகர் முற்றத்து=அழகிய முற்றத்தினையும்.

நெடுமயிர் எகினத் தூநிற ஏற்றை=நீண்ட மயிரினை உடைய கவரிமான்களில் தூயநிறம் வாய்ந்த ஆண் கவரிமான்கள்.

குறுங்கால் அன்னமொடு=குறுகிய கால்களை உடைய அன்னப்பறவைகளோடு தாவித்திரியும்,

முன் கடை=வாசல் முன் இடத்தையும்.

பணைநிலை முனை இய=பந்தியிலே நிற்றலை வெறுத்த.

பல் உளைப் புரவி=பற்பல தலையாட்டங்களை உடைய குதிரைகள்.

புல் உணாத் தெவிட்டும்=புல்லாகிய உணவைக் குதப்பும்.

புலம்பு விடு குரலொடு=தனிமையை வெளிப்படுத்தும் குரலொடு

நிலவும் பயன் கொள்ளும்= அரண்மனை வாழ்வார் நிலவொளியின் பயன் கொள்ளும்.

நெடு வெண் முற்றத்து=நெடிய வெள்ளிய நிலா முற்றத்தில் உள்ள.

கிம்புரி பகுவாய்=மகரமீன் வடிவில் உள்ள பருத்த வாயினைக்கொண்ட.

அம்பணம் நிறை=கூடல் வாய் நிறைய.

கலிந்து வீழ் அருவி=கலங்கி விழுகின்ற அருவியின் ஓசை கலந்து.

அயல்=அதற்கு அயல் இடத்தில்.

ஒலி நெடும் பீலி ஒல்க=தழைத்த நெடிய தோகை அசைய

மெல் இயல்=மெல்லிய இயல்பினை உடைய.

கலி மயில் அகவும்=செருக்குற்ற மயில்கள் ஆரவாரிக்கும்

வயிர் மருள் இன்னிசை=கொம்பு என்னும் இசைக்கருவி எழுப்பும் இசையோஎன மயங்குதற் கேற்ற இனிய இசை.

நளி மலைச் சிலம்பில் சிலம்பும்=பெரிய அடர்ந்த மலையின்
ஆரவாரம்போல் ஆரவாரிக்கும்
அரசன் பெருங்கோயில்.

**விளக்கவுரை:** இரண்டு யானைகளுக்கிடையே திருமகள் வீற்றிருத்தல்,

"வரி நுதல் எழில் வேழம் பூநிர்மேல் சொரிதரப்,
புரி நெகிழ் தாமரை மலரங்கண் வீறுஎய்தித்திருநயந்
திருந்தன்ன"—

என்ற கலித்தொகை (44:5-7) வரிகளாலும் அறிவுறுத்தப்படும்.

வாயில் முற்றத்தில், கவரியும், அன்னமும்போலும் விலங்கினங்களும், பறவை இனங்களும் உலாவரவிடுதல் வழக்கம் என்பது, "ஏழகத் தகரும் அகினக் கவரியும், தூமயிர் அன்னமும் துணைஎனத் திரியும்....நீள்நெடுவாயில் நெடுங்கடை" என்ற சிலப்பதிகார வரிகளாலும் (10:5-8) தெளிவாகும்.

—oo—

# 11. கருவறை

அரசன் பெருங்கோயில் அமைப்பின் அருமை பெருமைகளை அறிந்து அகமகிழ்ந்த புலவர், அத்தகு பெருமை வாய்ந்த அரண்மனைக்குரியோராகிய அரசனையும் அரசமாதேவியையும் காணவிரும்பினார், கோட்டைக் காவலர் பால் தம் விருப்பத்தைத் தெரிவித்தார். காவலர், "அரசன் இப்போது அரண்மனையில் இல்லை. நாடு காவல் மேற்கொண்டு கூதிர்ப் பாசறைக் கண் உள்ளான். பாண்டிமாதேவியார் மட்டுமே இங்கு உள்ளார்" என்றனர். அவர் வாழும் இடத்தையும் சுட்டிக்காட்டினர். அத்திசை நோக்கி நடைபோட்டார் புலவர்.

அரசமாதேவியார் வாழும் இடம். ஆங்குப் பீடும் பெருமையும் வாய்ந்த பாண்டியன் அல்லது, குற்றேவல் புரியும் ஆடவரும் அணுகுதல் இயலாது. அத்துணைக்காவல் உடையது. ஆனால் செல்பவர் புலவர் ஆயிற்றே புலமை தந்த உரிமையோடு உள்ளே நுழைந்து விட்டார். அரசமாதேவி வாழும் கருவறை, கருப்பக்கிருகம். அதாவது உள்ளறை: ஆங்குயவன நாட்டிலிருந்து வாங்கி வந்த அழகிய வேலைப்பாட்டால் மாண்புற்ற மிகப் பெரிய பாவை விளக்கு, நெய்நிறைய வார்க்கப்பட்டு, பெரியதிரி கொளுத்தப்பட்டு எரிந்து கொண்டிருந்தது. அவ்வாறு பெரியதிரி எரிவதால், நெய்வற்றி விடாவண்ணம், ஏவல் மகளிர், அவ்வப்போது நெய்வார்த்துக் கொண்டே இருந்தனர். பாவை விளக்கு இவ்வாறு இடையறவுபடாது பேரொளி வீசிக் கொண்டிருப்பதால், அகன்ற பெரிய அக்கருவறை முழுதும் பகலேபோல் காட்சி அளித்தது.

கருவறையின் உள் தோற்றம் இது. அதன்வெளி அழகையும் காணவிரும்பினார் புலவர். மலைபோன்ற உயரம். மலையைச் சுற்றி, ஏழுநிறம் காட்டும் இந்திரவில் எனப்படும் வானவில் வட்டமிட்டு இருப்பதுபோல், பல் வண்ணக்கொடிகள் வானளாவ பறந்து கொண்டிருந்தன. எல்லா இடங்களிலும் உருக்கிய வெள்ளியை வாரி இறைத்து வைத்தாற்போல், வெண்சுண்ணம் பூசப்பட்டிருந்தது. நனி மிகப்பெரிய நீலமணியைக் கடைந்து வைத்தாற்போன்ற கருவண்ணத்தூண்கள். செம்பை உருக்கி வார்த்துக்கட்டியது போலும் திண்ணிய நெடியசுவர். அச்சுவர் எங்கும், அழகிய வடிவினை உடைய மலர்ககளால் நிறைந்த வல்லிக் கொடியின் ஓவியம். கருவறையின் புற அழகு இது:

''யவனர் இயற்றிய வினைமான் பாவை
கையேந்து ஐயகல் நிறைய நெய்சொரிந்து,
பருஉத்திரி கொளீஇய குருஉத்தலை நிமிர்எரி,
அறுவறு காலைதோறமைவரப் பண்ணிப்
பல்வேறு பள்ளிதொறும் பாயிருள் நீங்கப்
பீடுகெழு சிறப்பின் பெருந்தகை அல்லது
ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பின்
வரைகண்டன்ன தோன்றல் வரைசேர்பு
வில்கிடந்தன்ன கொடிய பல்வயின்
வெள்ளி அன்ன விளங்கும் சுதைஉரீஇ
மணிகண்டன்ன மாத்திரள் திண்காழ்ச்
செம்பு இயன்றன்ன செய்வுறு நெடும்சுவர்
உருவப் பல்பூ ஒருகொடி வளைஇக்
கருவொடு பெயரிய காண்பு இன் நல் இல்''

(101—114)

உரை:

யவனர் இயற்றிய = யவன நாட்டவர் செய்த.

வினைமாண் பாவை = தொழிலால் மாட்சிமைப்பட்ட பாவை.

கை ஏந்து ஐ அகல் = தன் கையில் ஏந்தி இருக்கின்ற அழகிய அகல்.

நிறைய நெய் சொரிந்து = நிறையும்படி நெய் வார்க்கப்பட்டு.

பரூஉத்திரி கொளீஇய = பெரிய திரிகளைப் பந்தமாகக் கொளுத்தி வைத்து.

குரூஉத் தலை நிமிர் எரி = செந்நிறம் வாய்ந்த தலையினை யுடைய மேல்நோக்கி எழுந்து எரியும் விளக்கை.

அறுவறு காலைதோறு = நெய்வற்றின காலந்தோறும்.

அமைவரப் பண்ணி = நெய்வார்த்துத் தூண்டி.

பல்வேறு பள்ளி தொறும் = பலவாய் வேறுபட்ட இடங்கள் தோறும்.

பாய் இருள்நீங்க = பரந்த இருள்நீங்கும்படி.

பீடுகெழு சிறப்பின் பெருந்தகை அல்லது = பெருமை பொருந்தின தலைமையினையுடைய பாண்டியன் அல்லது.

ஆடவர் குறுகா = குற்றேவல் செய்யும் ஆடவரும் அணுக முடியாது.

அருங்கடி வரைப்பின் = அரிய காவலை உடைய கட்டுக்கள்.

வரை கண்டன்ன தோன்றல் = மலைகளைச் கண்டாற்போலும் உயர்ச்சியை உடையவை.

வரை சேர்பு = மலைகளைச் சேர்த்து.

வில்கிடந்தன்ன கொடிய = வானவில் கிடந்தாற் போன்ற பல வண்ணக் கொடிகளை உடையவை

பல் வயின்=பல இடங்கள் தோறும்.

வெள்ளி அன்ன=வெள்ளியை ஒத்து.

விளங்கு சுதை உரீஇ=விளங்கும் வெண்சாந்தை வாரி இறைத்து.

மணிகண்டன்ன=நீலமணியைக் கண்டாற் போன்ற.

மாதிரள் திண்காழ் = கருமையினையும் பருமையினையும் உடைய திண்ணிய தூண்களை உடைய

செம்பு இயன்றன்ன=செம்பினால் செய்யப்பட்டது போன்ற

செய்வுறு நெடும் சுவர்=செய்யப்பட்ட நெடிய சுவர்களையும் உடைய.

உருவப் பல்பூ=வடிவழகினையும், பல பூக்களையும் உடைய

ஒரு கொடி வளைஇ=வல்லி என்ற ஒரு கொடியை ஓவியமாக எழுதப்பட்ட.

கருவொடு பெயரிய=கருப்பக்கிரகம் எனப்பெயர் பெற்ற.

காண்பு இன் நல் இல்=காட்சிக்கு இனிய நல்ல இன்பம்.

# 12. பெரும் பெயர்ப் பாண்டில்

பாண்டிமாதேவியார் உறையும் கருவறைக்குச் சென்று விட்ட புலவர், தேவியாரைக் காணவேண்டும் என்ற தன் விருப்பத்தை, ஆங்குள்ள ஏவல் மகளிர்பால் கூற, அவர்கள் சென்று, தேவியாரிடம் கூற, அவர் புலவரை வரவேற்க ஆர்வமோடு இசைய, அவ்விசைவினை ஏவல் மகளிர் அறிவித்து, ''தேவியார் பள்ளியறைக்கண் உள்ளார்; சென்று காண்பீராக'' என வழிவிட, புலவர் பள்ளியறைக்குள் சென்றார்.

ஆங்கு அவர் கண்ணில் பட்ட முதல் பொருள் வெண்ணிறக்கட்டில். தந்தத்தால் ஆனது. முதிரா இளம் யானையைக் கொன்று கொண்டு வந்த தந்தம் அன்று. யானைகளின் வாழ்நாள் நாற்பத்தெட்டு ஆண்டுகள் என்ப. அந்த முழுநாளும் வாழ்ந்து இறந்துபோன யானையின் தந்தம். காட்டில் வறிதே அலைந்து திரிந்து மாண்டுபோன யானையின் தந்தம் அன்று. உரம் ஏறி உடல் நலம் வாயா யானையின் தந்தமும் அன்று. போர்முரசோ எனக் காண்பவர் கருதுதற்கேற்றகால்களையும். அதற்கு ஏற்ப வலுவேறிய பருஉடலையும் உடைய யானையின் தந்தம். புள்ளிகள் நிறைந்த மத்தகம் உடைமையால் அழகு பெற்ற யானையின் தந்தம். போரில் வெற்றியல்லது தோல்விகாணா வீறுடைமையால் களம்புகுந்து வேலேறுண்டு இறந்துபோன யானையின் தந்தம். அதன் உடலிலிருந்துதானே இற்று வீழ்ந்து விட்ட தந்தம்.

தந்தத்தில் தொழில் செய்ய வல்லதச்சன், கூறிய சிற்றுளி கொண்டு இரண்டு பக்கமும் ஒரே பருமன் உடையதாக ஆக்கிக் கொண்டு, பின்னர், அவற்றில் இலையும் பூவும் கூடிய கொடி படந்தாற் போலும் சித்திரத்தைச் செதுக்கி வைத்திருந்தான். கட்டிலின் நாற்புறச் சட்டங்களின் இவ்வழகைக் கண்ணுற்ற புலவர், கட்டிலின் கால்களை நோக்கினார். அவற்றின் அடிப்பகுதிகள், சூல்முற்றிய மகளிரின் பால்கட்டி வீங்கிய முலைகள் போல்உருண்டு திரண்டு குடமாகக் கடையப்பட்டிருந்தன. குடத்திற்கும் கட்டிலுக்கும் இடைப்பட்ட பகுதி, மெல்லியதாக உள்ளி புட்டில் என்ற பெட்டி போல் மெத்தெனக் கடையப் பட்டிருந்தது. அக்கால்கள் மீது பொருத்தப்பட்டிருந்தது, பெரிய அளவிலான பாண்டில் என அழைக்கப்படும் வட்டக் கட்டில். மூட்டு வாய்கள் எல்லம் மாட்சிமைபெற அமையப் பெற்றிருந்தன.

நுண்ணிய இழையில் கோர்க்கப்பட்ட முத்துச்சரங்கள், அக்கட்டிலைச் சூழச் சாலேகம்போல, மேல்தட்டில் ஆணி அடித்துத் தொங்கவிடப்பட்டிருந்தன. அது, அக்கட்டிலை மேலும் மாட்சிமைப்பெறச் செய்தது. கட்டிலின் தகடு, புலியின் உடல் வரிகள்போலும் வரிகளும், சிங்கவேட்டையைச் சித்தரிக்கும் ஓவியமும் தீட்டப்பட்ட, கச்சு எனும் உறையுள் மயிர்களை நிறைத்துத்தைத்த விரிப்பால் மூடப்பட்டிருந்தது. அதனால் அக்கட்டில் மேலும் அழகுபெற்றது. வேண்டும் தலையணைகளும் ஆங்கு போடப்பட்டிருந்தன. அம்மட்டோ! அம்மெத்தைக்கு மேலாகத் தம் பெடையைப்புணர்ந்து மகிழ்ந்த தனால் மேலும் மென்மையுற்றதான, அன்னச் சேவலின் இறகு மயிர்களைப் பரப்பிவைத்தனர். இறுதியாக அன்னத் தூவிக்கு மேலாக, மாசுபோக, அடித்துத் துவைத்துக் கஞ்சி யிட்ட நூலாடையாம் போர்வையை விரித்துப்போட்டு வைத்தனர். கட்டிலின் மாண்புகண்டு களிகூர்ந்தார் புலவர்.

"தசம்நான்கு எய்திய பணைமருள் நோன்தாள்
இகல்மீக் கூறும் ஏந்தொழில் வரிநுதல்
பொருதுஒழி நாகம்ஒழி எயிறு அருகு எறிந்து
சீரும் செம்மையும் ஒப்ப வல்லோன்
கூருளிக் குயின்ற ஈரிலை இடைஇடுபு,
தூங்கியல் மகளிர் வீங்கு முலை கடுப்பப்
புடைதிரண்டு இருந்த குடத்த, இடைதிரண்டு
உள்ளி நோன்முதல் பொருத்திஅடி அமைத்துப்
பேரளவு எய்திய பெரும்பெயர்ப் பாண்டில்
மடைமாண் நுண்ணிழை பொலியத் தொடைமாண்டு
முத்துடைச் சாலேகம் நாற்றிக்குத் துறுத்துப்
புலிப்பொறிக் கொண்ட பூங்கேழ் தட்டத்துத்
தகடுகண் புதையக் கொளீஇத் துகள்தீர்ந்து
ஊட்டுறு பன்மயிர் விரைஇ வயமான்
வேட்டம் பொறித்து வியன்கண் கானத்து
முல்லைப் பல்போது உறழப் பூநிரைத்து
மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்படத்
துணைபுணர் அன்னத் தூநிறத் தூவி
இணையணை மேம்படப் பாயணை இட்டுக்
காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத்
தோடமை தூமடி விரித்த சேக்கை".

(115—135)

**உரை:**

நான்கு தசம் எய்திய = நாற்பற்றியாண்டு கடந்த
பணைமருள் நோன்தாள் = முரசோ என மயங்குதற்கேற்ற. வலிய கால்களையும்
இகல்மீக் கூறும் = போரில் வெற்றிமேல் வெற்றி கொள்ளும்.
ஏந்து எழில் வரிநுதல் = உயர்ந்த அழகினையும், புள்ளிகள் நிறைந்த மத்தகத்தினையும் உடைய
பொருது ஒழி நாகம் = போரிட்டு இறந்த யானையின்.

ஒழி எயிறு=தானே இற்று வீழ்ந்த தந்தத்தை.

அருகு எறிந்து சீரும்செம்மையும் ஒப்ப=கனமும் செம்மையும் ஒன்றாக இருக்கும் வண்ணம் இரண்டு புறத்தையும் செதுக்கி.

வல்லோன் கூருளி குயின்ற=தொழில் வல்ல தச்சன் கூரிய சிற்றுளியாலே பண்ணின.

ஈரிலை இடை இடுபு=பெரிய இலைத்தொழிலை இடையிலே இட்டு.

தூங்கு இயல் மகளிர்=சூல் முற்றி, மெல்ல நடைபோடும் மகளிரின்.

வீங்கு முலை கடுப்ப=பால் கட்டி வீங்கின முலையை ஒப்ப.

புடை திரண்டு இருந்த குடத்து=பக்கம் உருண்டிருந்த குடத்தை உடைய.

இடைதிரண்டு=குடத்திற்கும் கட்டிலுக்கும் இடைப்பட்ட இடம் மெல்லியதாய்த் திரண்டு.

உள்ளி நோன் முதல் அடி பொருத்தி=உள்ளிப்புட்டில் எனும் பெட்டி வடிவாகிய வலியகால்களைப் பொருத்தி.

அமைத்து=அமைத்து.

பேரளவு எய்திய பெரும் பெயர்ப் பாண்டில்=பெரிய அளவினதாகப்பண்ணிய பெரியபுகழ் வாய்ந்த கட்டிலில்

மடைமாண்=மூட்டுவாய் மாட்சிமைப்பட்ட.

நுண் இழை பொலிய=மெல்லிய நூல் அழகு பெறும்படி.

தொடை மாண்டு=தொடுத்தல் மாட்சிமைப்பட்டு.

முத்துடைச் சாலேகம் நாற்றி=முத்துச்சரங்களை சாலேகமாக நாலவிட்டு.

குத்துறுத்து=ஆணிகளில் மாட்டி.

புலிப்பொறி கொண்ட=புலியினது வரியைத் தன்னிடத்தே கொண்ட

பூங்கேழ் தட்டத்து=பொலிவுபெற்ற நிறத்தை உடைய நடுப்பகுதியான தகடுகள்.

புதைய=தகடு இடம் மறையும்படி.

கொளீஇ=கொண்டு.

துகள் தீர்த்து=குற்றம் அற்று.

ஊட்டுறு பன்மயிர்=உறையுள் புகுத்திய பல்வேறு மயிர்களைக் கொண்ட விரிப்பை.

விரைஇ=பரப்பி.

வயமான் வேட்டம் பொறித்து=அவ்விரிப்பின்மீது வலிய காட்டுவிலங்காகிய சிங்கத்தை வேட்டை ஆடுவது போலும் ஓவியத்தைத் தீட்டி.

வியன்கண் கானத்து=பரந்து அகன்ற இடத்தை உடைய காட்டில் மலர்ந்த

முல்லைப் பல்போது உறழ்ப்பூ நிரைத்து=முல்லை முதலாம் பல்வேறு மலர்கள் ஒன்றிற்கொன்று மாறுபடும் வகையில் மலர்களைத் தூவி.

மெல்லிதின் விரிந்தசேக்கை=மென்மையுடையதாக விரிந்த படுக்கை.

மேம்பட=மேலும் மேன்மைபெற.

துணைபுணர் அன்னத்தூவி=தம் பெடையைப் புணர்ந்த அன்னச் சேவலின் தூவியை.

தூவி=பரப்பி

இணை அணை=இரண்டாகப் போடப்பட்ட தலையணைகள்

மேம்பட பாயணை இட்டு=மேன்மை உறும்படி பாயணைமீது போட்டு அவற்றின் மீது.

காடிகொண்ட=கஞ்சியைத் தன்னிடத்தே கொண்ட.

கழுவுறு கலிங்கத்து=அழுக்கேறினால் அடித்து அழுக்கைப் போக்கிக்கொள்ள வல்லதான நூல் ஆடையின்

தோடமை தூமடி விரித்த=தூய மடிக்கப்பெற்ற போர்வை விரிக்கப்பெற்ற. பல்வேறு மலர் இதழ்களும் தூவப்பெற்ற.

சேக்கை=படுக்கை.

## 13. அரச மாதேவியார்

புலவர், அரசமாதேவியின் கட்டிலை மட்டும் காண வில்லை, அக்கட்டில்மீது கவலையே உருவாய் வீழ்ந்து கிடக்கும் அரசமாதேவியாரையும் கண்டார். அரசன் போர்க் கடமை மேற்கொண்டு பிரிந்துபோய் விடவே தனியே வீழ்ந்து கிடந்தார் தேவியார். தேவியாரின் அப்போதைய கோலம், புலவரைக் கண்கலங்கச் செய்துவிட்டது. தேவியாரைப் புலவர் இப்போதுதான் புதிதாகக் காண்பவர் அல்லர். அரசனொடு அரசவையில் அரியணைமீது அமர்ந்திருந்த அழகுக் கோலத்தையும் கண்டவர். தேவியாரின் அன்றைய கோலத்தையும், இப்போதைய கோலத்தையும் காணவே அவர் கண் கலங்கிவிட்டது.

அப்போது தாங்கமாட்டாத அளவு முத்துவடங்கள் கிடந்த அவர் மார்பில், இப்போது, சிறுகயிற்றில் கோக்கப்பட்ட தாலி ஒன்றுமட்டுமே தொங்கிக் கொண் டிருந்தது. அழகிய நெற்றி, ஒப்பனை செய்யப்படாமையால். கலைந்துகிடக்கும் கூந்தலால் மூடப்பட்டிருந்தது. பேரொளி வீசும் மகரக்குழை அழகுசெய்த காதுகளில், சிறிய கடுக்கண் மட்டுமே அழுந்திக்கிடந்தது. கனத்த பொற்றொடி இறுகிச் செறிக்கப்பெற்றுத் தழும்பேறியிருந்த முன்கைகளில், இப்போது வலம்புரிச் சங்கை அறுத்துப்பண்ணிய வளையும், தெய்வத் தீதுபோகக் கட்டும் மந்திரக்கயிறும் மட்டுமே கிடந்தன. வாளைமீனின் பிளந்த வாய்போன்ற மோதிரம் கிடந்து சிவப்பேறிய விரல்களில், இப்போது மங்கள மகளிர் அணியவேண்டிய நெளி என்னும் சிறு மோதிரமே செறிக்கப் பட்டிருந்தது. முன்பு பூந்தொழில் அமைந்த அழகிய உயர்ந்த

ஆடை கிடந்து அழகு செய்த இடையில், இப்போது மாசேறிய ஆடையே கிடந்தது. இத்தகு கோலத்தோடு புனையா ஓவியம்போல, உறக்கம் இழந்து வீழ்ந்து கிடந்தார் தேவியார்.

அப்போது அழகிய சேடியர் சிலர் ஆங்கு வந்தனர். மாந்தளிர் நிறம் காட்டும்மேனி. அம்மேனியெங்கும் வேங்கைமலர் நிறம்காட்டும் மஞ்சள் நிறச் சுணங்கி. அழகிய மூங்கில்போல் திரண்ட மெல்லிய தோள்கள். கச்சால் இறுகக் கட்டப்பெற்ற வளர்ந்து வரும்முலை. வளைந்து மெலிந்த இடை. இத்தகு மெல்லியல் மகளிர் அவர்கள். வந்த மகளிர் தேவியார் சிறிதே துயில் கொள்ள மாட்டாரா? அவ்வாறு துயில் கொள்வதால் பிரிவுத் துயரைச் சிறிதே மறக்க மாட்டாரா என்று ஆசையால், தேவியாரின் பூண்கள் அணியப்பெறாத நல்லடிகளை மெல்ல வருடிக் கொடுத்தனர்.

சேடியர் வருடிக் கொடுக்கவும், தேவியார்க்கு உறக்கம் வந்திலது. பிரிவுத்துயர் அத்துணைக் கொடுமை உடைய தாயிற்று. அஃதறிந்தனர், தேவியார்க்கு உணவோடு, அறிவும் ஒழுக்கமும் ஊட்டிவளர்த்த செவிலித்தாயர். ஆண்டாலும்அறிவாலும் முதிர்ந்தவர்கள் அச்செவிலித்தாயர். அதை அவர்களின் நரைதிரை கலந்த கூந்தலே அறிவுறுத்தியது. அவர்கள் தேவியார் அருகே அமர்ந்து, பொய்யும் மெய்யும் கலந்த காரணங்களை அடுக்கடுக்காகக் கூறி, ''வேந்தர் வினைமுடித்து இப்போதே விரைந்து வந்து சேர்வர், நின்துயர் ஒழிய'' எனக் கூறித் தேற்றினர்.

ஆனால், அவர்கள் கூறியனவற்றில் எதுவும் தேவியார் காதுள் புகுந்ததாகவே தெரியவில்லை. அவை கேட்டு, அவர் உள்ளம் தேறியதாகவும் தெரியவில்லை. மாறாக அவர்கள்

தேற்றத்தேற்ற, அவள் துயர்தான் பெருகிற்று. மௌனமாகி விட்டாள். அண்ணாந்து படுத்துக் கொண்டாள். அவ்வாறு படுத்துக் கொண்டவள், கண்முன் ஒருகாட்சி.

கட்டிலின் மேலே ஒரு திரைச்சீலை கட்டிலின், மகளிர் முலைபோலும் குடங்களை அடியில் கொண்ட, நான்கு கால்களிலும், கம்புகளைக்கட்டி அவற்றின் முனையில், வலித்துக் கட்டப்பட்டிருந்தது, அத்திரைச்சீலை. அதில் வண்ணவண்ண மெழுகினால், மேஷம் முதலான இருபத்தேழு ராசிகளோடு சென்று அலையும் ஞாயிறுபோல் அல்லாமல், உரோகிணி என்ற ஒரே ராசியோடு மட்டுமே நிலை கொள்ளும் திங்களின் ஓவியம் அழகுறத்தீட்டப்பட்டிருந்தது.

அவ்வோவியத்தில் வைத்த கண்ணை வாங்காமல் பார்க்கப்பார்க்க, இந்த உரோகிணிபோல், வேந்தரை என்றும் பிரியாநிலை பெற்றிலமே என்ற மனக்கவலை முந்துறவே, அம்மனக்கவலையை, அவள் கண்கள் நீர் துளித்து வெளிப்படுத்தி விட்டன. பிரிவுத்துயரைப் பிறர்க்குப் புலப்படாவாறு காத்தலே கற்புடை மகளிர் கடமை. கண்ணீர்த்துளித்து, அக்கடமையில், தவறி விட்டோமே என்ற கவலையுறுத்தவே, தன் விரல் முனையால், அதைச் சுண்டி எறிந்து விட்டு மௌனியாகி விட்டாள். பிரிவுத்துயர் அவளை அத்துணை இன்னலுக்கு ஆளாக்கி விட்டது. அந்தோ! அரசமாதேவியார்!

"ஆரம் தாங்கிய அலர்முலை ஆகத்துப்
பின்அமை நெடுவீழ் தாழத், துணை துறந்து,
நன்னுதல் உலறிய சின்மெல் ஓதி
நெடுநீர் வார்குழை களைந்தெனக் குறுங்கண்
வாயுறை அழுத்திய வறிதுவீழ் காதின்,

பொலந்தொடி தின்ற மயிர்வார் முன்கை
வலம்புரி வளையொடு கடிகை நூல் யாத்து
வாளைப் பகுவாய் கடுப்ப வணங்குறுத்துச்
செவ்விரல் கொளீஇய செய்கேழ் விளக்கத்துப்
பூந்துகில் மரீஇய ஏந்து கோட்டு அல்குல்
அம்மாசு ஊர்ந்த அவிர் நூல் கலிங்கமொடு
புனையா ஓவியம் கடுப்பப் புனைவில்
தளிர் ஏர் மேனித், தாய சுணங்கின்
அம் பணைத் தடைஇய மென்தோள்; முகிழ் முலை
வம்பு விசித்து யாத்த வாங்குசாய் நுசுப்பின்
மெல்லியல் மகளிர் நல்லடி வருட,
நரைவிரா வுற்ற நறுமென் கூந்தல்
செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்
குறியவும் நெடியவும் உரைபல பயிற்றி
இன்னே வருகுவர் இன் துணையோர் என
உகத்தவை மொழியவும் ஒல்லாள் மிகக் கலுழ்ந்து
நுண்சேறு வழித்த நோனிலைத் திரள்கால்
ஊறா வறுமுலை கொளீஇய கால் திருத்திப்
புதுவது இயன்ற மெழுகுசெய் படமிசைத்
திண்ணிலை மருப்பின் ஆடுதலையாக
விண்ணூர்பு திரிதரும் வீங்கு செலல் மண்டிலத்து,
முரண்மிகு சிறப்பின் செல்வனோடு நிலைஇய
உரோகிணி நினைவனள் நோக்கி நெடிது உயிரா
மாயிதழ் ஏந்திய மலிந்து வீழ் அரிப்பனி
செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சிலதெறியாப்
புலம்பொடு வதியும் நலங்கிளர் அரிவைக்கு.

(136-166).

உரை :

துணை துறந்து=அரசன் பிரிந்து போயிருப்பதினால்.

ஆரம்தாங்கிய அலர்முனை ஆகத்து=முன்பு முத்தால் செய்த ஆரம் கிடந்த பருத்த முலையினைக் கொண்ட மார்பில்.

பின் அமை நெடுவீழ் தாழ=பின்னிய கயிற்றில் கோக்கப்பட்ட தாலி ஒன்றே தொங்க.

நல்நுதல்=நல்ல நெற்றியில்.

உலறிய சில்மெல் ஓதி=படந்த சிலவாகிய மெத்தென்ற மயிரினையும்.

நெடுநீர் வாழ் குழை களைந்தென=பெரிய ஒளி பொருத்திய மகரக் குழை களையப்பட்டதாக.

குறுங்கண் வாயுறை அழுத்திய காது=சிறியவாகிய கடுக்கண் அழுத்தப்பட்ட காதினையும்.

பொலம் தொடி தின்ற=முன்பு பொன்னால் செய்யப்பட்ட தொடி. கிடந்து தழும்பு செய்து விட்ட.

மயிர்வார் முன்கை=மயிரால் அழகு செய்யப்பட்ட முன்கையில்.

வலம்புரி வளையொடு கடிகை நூல்யாத்து=வலம்புரிச் சங்கை அறுத்துப் பண்ணிய வளையோடு மந்திரக் கயிற்றையும் கட்டி.

வாளைப் பகுவாய் கடுப்ப = வாளைமீனின் பிளந்த வாயைப்போல,

வணங்கு உறுத்து=முடக்கத்தை உண்டாக்கி,

செவ்விரல்=சிவந்த விரல்.

கோளீஇய கேழ் விளக்கத்து = அணிந்துகொண்ட மோதிரத்தையும்.

பூந்துகில் மரீஇய = முன்பு பூந்தொழில் செய்யப்பட்ட ஆடையினை அணிந்த.

ஏந்து கோட்டு அல்குல் = இடையில்.

அம்மாசு ஊர்ந்த அவிர்நூல் கலிங்கமொடு = அழகிய மாசு ஏறிய விளங்கும் நூல் ஆடையோடு.

புனையா ஓவியம் கடுப்ப = வண்ணங்களைக்கொண்டு எழுதப் படாத ஓவியம்போல (கிடப்ப)

புனைவில் = ஒப்பனை செய்யப்படாது.

தளிர் ஏர் மேனி = மாந்தளிரை ஒத்த மேனிநிறத்தையும்.

தாய சுணங்கின் = மேனி எங்கும் பரந்த தேமலையும்.

அம்பணை = அழகிய மூங்கில்போல்.

தடைஇய மென்தோள் = திரண்ட மெல்லிய தோளினையும்,

வம்பு விசித்து யாத்த = கச்சால் வலிந்து கட்டப்பெற்ற.

முகிழ் முலை = தாமரை முகைபோலும் முலையினையும்.

வாங்குசாய் நுசுப்பின் = வளைந்து தளரும் இடையினையும்.

மெல்லியல் மகளிர் = மெல்லிய இயல்பினையும் உடைய ஏவல் மகளிர்.

நல் அடி வருட = துயில் உண்டாக்க தேவியார் நல்லடிகளை வருட.

நரை விராவுற்ற நறுமென் கூந்தல் = நரை கலந்த மெல்லிய மயிரினை உடைய.

செம்முகச் செவிலியர் = சிவந்த முகத்தினை உடையராகிய செவிலித்தாய்மார்.

குறியவும் நெடியவும் = தேவியின் துயரைத் தணிப்பான் வேண்டி பொய்யும் மெய்யும் ஆகிய.

உரைபல பயிற்றி=உரைகள் பலவற்றைப் பலகால் சொல்லி

இன்னே வருகுவர் இன் துணையோர்=இனிய துணைவராம் கணவர் இன்றே வந்து சேர்வர்

என உகந்தவை மொழியவும்=என அவள் விரும்பும் உரைகளைச் சொல்லவும்.

ஒல்லாள்=அவற்றை ஏற்றுக் கொள்ளாளாய்.

மிகக் கலுழ்ந்து = மிகவும் கலங்கி.

ஊறாவறு முலை கொளீஇய=பால் ஊறா வெறும் முலை என அழைக்கப்படும் குடத்தைக் கடைந்துகொண்ட.

நுண் சேறு வழித்த = சாதிலிங்கம் பூசப்பட்ட.

நோன் நிலை திரள்கால் = வலிய நிலையினை உடைய கட்டில் மேல்கட்டின் திரண்ட கால்களை.

கால்திருத்தி = கட்டிற்கால்களுக்கு அணித்தாக நிற்கும்படி கட்டி.

புதுவது இயன்ற=புதிதாக எழுதப்பட்ட.

மெழுகு செய் படமிசை=வண்ண மெழுகால் தீட்டப்பட்ட திரைச்சீலையில்.

திண் நிலை மருப்பின்=வலிய கொம்பினையுடைய.

ஆடு தலையாக=மேஷ ராசி முதலாக எல்லா ராசிகளோடும்.

விண் ஊர்பு திரிதரும்=விண்ணில் திரியும்.

வீங்கு செலல் மண்டிலத்து=விரைந்த ஓட்டத்தினையுடைய ஞாயிறொரு.

முரண்மிகு சிறப்பின்=மாறுபடும் சிறப்பினை உடைய.

செல்வனொடு நிலைஇய=செல்வனாம் திங்களோடு என்றும் நிலை பெற்று நிற்கும்.

உரோகிணி நினைவனள் = உரோகிணியை நினைத்துக் கொண்டவாறே (அத்திரைச்சீலைப் பார்க்க)

நெடிது உயிரா=பெருமூச்செறிந்து.

மாஇதழ் ஏந்திய = நீலமலர்போலும் கண்கள் ஏந்தி நின்ற.

மலிந்து வீழ் அரிப்பனி=மிக்கு, வீழ்கின்ற நீர்த்துளிகளில்

செவ்விரல் கடைக்கண் சேர்த்தி=சிவந்த விரலினைக் கடைக் கண்ணிடத்தே சேர்த்து

சில தெறிய=சில (துளிகளைக்) தெறித்தவாறே.

புலம்பொடு வதியும் = பிரிவுக் துன்பத்தோடு வீழ்ந்து கிடக்கும்

நலம் கிளர் அரிவை = எல்லா நலங்களாலும் சிறப்புற்ற அரசமாதேவியார்.

திங்கள் உரோகிணியோடு கூடியநாள் நல்லநாள் என்பதும், கணவனும் மனைவியும் பிரியாமைக்கு எடுத்துக்காட்டு என்பதும், ''அங்கண் இருவிசும்பு விளங்கத் திங்கள் சகடம் (உரோகிணி) வேண்டிய துகள்தீர் கூட்டம்'' (அகம் : 136) ''வானூர் மதியம் சகடு அனைய'' (சிலம்பு—1: 50) என்ற வரிகளாலும் உறுதி செய்யப்படும்.

ஃ ஃ ஃ

## 14. பாசறையில் பேரரசன்

பாண்டிமாதேவியின் துயிர்க் கொடுமை கண்ட புலவர் அத்துயர், சேடியர் காலடி வருடுவதலோ, செவிலித்தாயரின் உறுதிமொழிகளாலோ தீராது. பாண்டியன், இப்போது மேற்கொண்டிருக்கும் போரில் வெற்றியை விரைவில் பெற்றுப் பாசறை வாழ்க்கையை முடித்துக்கொண்டு, வந்து சேர்ந்த வழியேதீரும். அதுவே என் விருப்பம். வேந்தன்பால் நான் வைக்க இருக்கும் வேண்டுகோளும் அதுவே ஆதல் வேண்டும் என உணர்ந்தார். உடனே அவன் உறையும் கூதிர்ப்பாசறை நோக்கி விரைந்தார்.

பாசறைக்குச் செல்லும்போதே, கூதிர்காலத்து மழை சிறு தூரலாகப் பெய்துகொண்டிருந்தது. சென்ற நேரமோ நள்ளிரவு. அதனால், பாண்டியன் பாசறைக்கு உள்ளாகவே இருப்பன்; பள்ளியறையில் உறக்கம் மேற்கொண்டிருப்பன் என எண்ணிப் பாசறைக்குச் சென்று பள்ளியறைக்குள் சென்று பார்த்தார். ஆனால் வேந்தன் அங்கு இல்லை. ஆங்கு உள்ளாரை வினவினார். அவர்கள், ''பகலில் நடந்தபோரில், போர், மண்ணாசைகொண்டு, பிறர்நாடு கொள்ள, பகைநாட்டின்மீது தொடுத்த போர் அன்று. பாண்டிநாட்டைக் கவர்ந்து கொள்ள, சேரன் செம்பியன் உள்ளிட்ட எழுவர்வந்து கூடல் மாநகரை வளைத்துப் போரிட, அவரை வென்று துரத்திச் சென்று, அப்பகை நாட்டகத்ததாகிய தலையாலங்கானத்தே நடந்த, தன்நாடு காக்க மேற்கொண்டதல்லபோர். அப்போரில் வேந்தன் வெற்றி பெற்று விட்டான், எனினும், அவ்வெற்றிக்குத்

துணைநின்று போரிட்டுப் புண்பெற்றுக் கிடக்கும் நாற் படைகளின் நலம்காணப் பாசறைத் தளத்திற்குச் சென்றுள்ளான் '' என்றனர். உடனே புலவரும், தூரலையும் பொருட்படுத்தாது ஆங்குப்புறப்பட்டு விட்டார்.

ஆங்கு அவர் கண்டகாட்சி, பாண்டியப் பேரரசன், படைகள்பால் வைத்துள்ள பற்றின் பெருமையினைப் பறை சாற்றுவதாய் இருந்தது. காலம் இரவின் நடுயாமம். மேலும் கூதிர் காலத்துக் கார்மேகம் மூடிக்கொண்டிருந்தது: அதனால் எங்கும் இருள் பரவிக் கிடந்தது. அதனால் படைவீரன் ஒருவன், கையில் பாண்டில் எனும் பெரிய விளக்கை ஏந்தியவாறே சென்றுகொண்டிருந்தான். தீ கொழுந்துவிட்டு எறிந்து கொண்டிருந்தாலும், வாடைக் காற்றால் அலைப்புண்டு அதன் தலை தெற்குப்பக்கமே சாய்ந்து கிடந்தது, என்றாலும் ஒளி தரத் தவறவில்லை. அது ஒளிகாட்ட, படைத்தலைவன் முன்னே செல்கின்றான்.

அவன் கையில், நெடிது உயர்ந்த வலிய காம்பில் செருகப் பெற்ற வேற்படை, அதன் முனையில், வேப்பமாலை கட்டப்பட்டிருந்தது. அவன் வழிகாட்டிசெல்கின்றான். மற்றொரு வீரன், அவன் கையில் நூலால் ஆனகுடை. முத்துச்சரங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. அவன், அரசனுக்கு அணித்தாகவே சென்றுகொண்டு, கூதிர் காலத்துக் குளிர்ந்த தூரல், வேந்தன்மீது வீழா வண்ணம் விழிப்போடு பிடித்துச் செல்கின்றான்.

இடது தோள்மீது இட்டு நாலமிட்ட மேலாடை, கூதிர்க் காற்றால் அலைப்புண்டு நழுவி விழ, அதைத்தன் இடது கையால் அணைத்துக் கொண்டும், வலது தோளில் வீரவாள்

தொங்க, அதைக் கைப்பற்றி இருப்பான் ஒரு வீரன் தோள் மீது. தன் வலதுகையை ஊன்றிக்கொண்டும் வேந்தன் குடைநிழற்கீழ்ச் சென்று கொண்டிருந்தான்.

அவர்களைத் தொடர்ந்து சென்றார் புலவரும். மழை பெய்து கரிய சேறுபட்ட வழி வழியின் இரு மருங்கிலும் வரிசை வரிசையாகப் போர்க்குதிரைகள். கடிவாளம் இடப்பட்டிருந்தன. கடிவாளக்கயிற்றில் மணிகள் கட்டப் பெற்று அழகு செய்யப் பெற்றிருந்தது. போருக்குச் செல்லும்போது முதுகில் போடப்பட்ட சேணம் இன்னமும் அகற்றப்படவில்லை. அந்நிலையிலும், கட்டவிழ்த்து விட்டால், காற்றென விரையத்துடித்துக் கொண்டிருந்தன. அப்போது அவற்றின்மீது விழும் மழைத்தூறல்களைத் தம் உடல்சிலிர்ப்பால் அகற்றிக் கொண்டிருந்தன.

அவ்வழியே செல்லும் வேந்தன், ஆங்காங்குள்ள பாடிகளில் புண்பட்டு வீழ்ந்து கிடக்கும் வீரர்கள் ஒவ்வொருவரையும் அணுகி, அன்போடு தடவிக்கொடுத்து, போரில்பெற்ற புண்ணின் அளவும் தன்மையும், அதன் இப்போதைய நிலை, அதற்குச் செய்த மருத்துவம் ஆகிய நலன்களை விசாரித்துக் கொண்டே இருந்தான். அவ்வீரர்கள் பெயரளவில் மட்டுமே வீரர்கள் அல்லர்: போர்க்களத்தில் பகைப் படையைச் சேர்ந்த யானைகளை அதிலும் ஒளிவீசும் முகபடாம் அணிந்த பட்டத்து யானைபோலும் யாவைகளை-அவற்றின் தொங்கும் நீண்ட கைகள் வெட்டுண்டு நிலத்தில் புரளுமாறு வீழ்த்தி வெற்றி கொண்ட வீரர்கள்: அம்மட்டோ! அத்தகுபோரில் பகை வீரர்களின் வாள்பட்டு விழுப்புண் பெற்ற விழுமிய வீரர்கள்.

அரசன், அவன் கடமையை ஆற்றுகின்றான் என்பதால் புலவர்க்கு ஒருபால் மகிழ்ச்சிதான். என்றாலும் தேவியாரின் பிரிவுத்துயர் அவருக்குத் துன்பத்தைத் தந்துகொண்டிருக்கவே, வேந்தன்முன் துணிந்து சென்று, தேவியாரின் துயர்நிலையைக் கூறி "வேந்தே! நின் பாசறை வாழ்க்கை இப்போது முடிவதாகுக" என்ற வேண்டுகோளை வைத்தார்.

"அரிவைக்கு
இன்னா அரும்படர் தீர விறல்தந்து
இன்னே முடிக!தில்; அம்ம! மின்நவில்
ஓடையொடு பொலிந்த வினைநவில் யானை
நீள்திரள் தடக்கை நிலமிசைப் புரளக்
கயிறுகளம் படுத்த பெருஞ்செய் ஆடவர்
ஒளிறுவாள் விழுப்புண் காணிய புறம்போந்து
வடந்தைத் தண்வளி எறிதொறும் நுடங்கித்
தெற்கேர்பு இறைஞ்சிய தலைய நற்பல்
பாண்டில் விளக்கில் பருவுச் சுடர்அழல
வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகமொடு
முன்னோன் முறைமுறை காட்டப், பின்னர்
மணி புறத்திட்ட மாத்தாள் பிடியொடு
பருமங் களையாப் பாய்பரிக் கலிமா
இருஞ்சேற்றுத் தெருவின் எறிதுளி விதிர்ப்பப்
புடைவீழ் அந்துகில் இடவயின் தழீஇ
வாள்தோள் கோத்த வன்கட் காளை
சுவல்மிசை அமைத்த கையன் முகனமர்ந்து
நூல்கால் யாத்த மாலை வெண்குடை
தவ்வென்று அசைஇத் தாதுளி மறைப்ப
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரி தரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே".

(166—188)

உரை:

அரிவைக்கு=அரசமாதேவியார்க்கு.

இன்னா அரும்படர்தீர=இன்னாதாகிய பிரிவாம் பெருந் துயர் தீர்தல் பொருட்டு.

மின் அவிர் ஓடையொடு பொலிந்த = ஒளி விளங்கும் பட்டத்தோடே பொலிவுபெற்ற

வினை நவில் யானை=போர்த்தொழில் பயின்ற யானையின்

நீள் திரள் தடக்கை=நீண்ட பெருத்த பெருமைமிகு துதிக்கை

நிலமிசைப் புரள = அற்று நிலத்தில் வீழ்ந்து புரளும்படி

களிறு களம் படுத்த=களிற்றைச் போர்க்களத்தில் கொன்ற.

பெருஞ்செய் ஆடவர்=பெரிய வெற்றிச் செயலைச் செய்து முடித்த வீரர்களுடை.

ஒளிறுவாள் விழுப்புண் காணிய=அப்போரில் பகைவரின் ஒளி விளங்கும் வாளால்பெற்ற விழுப்புண்ணைக் காணும்பொருட்டு.

புறம் போந்து=பாசறையைவிட்டு வெளியே வந்து

வடந்தை தண் வளி=வடக்கிலிருந்து வந்து வீசும் குளிர்ந்த வாடைக்காற்று

எறிதொறும் = வீசுந்தோறும்.

நுடங்கி=அசைந்து

தெற்கு ஏர்பு=தெற்குநோக்கு எழுந்து.

இறைஞ்சிய தலைய=சாய்ந்த தலையினை உடையவாகிய.

நல் பல் பாண்டில் விளக்கின் = நல்ல பலவாகிய பாண்டில் என்னும் விளக்கின்.

பருவுச் சுடர் அழல=பெரிய தீக்கொழுந்து எரிய.

வேம்பு தலையாத்த=வேப்ப மாலையைத் தலையிலே சூடிய.

நோன் காழ் எஃகமொடு=வலிய காம்பினை உடைய வேலொடு.

முன்னோன் முறை முறை காட்ட=முன்னே செல்லும் படைத் தலைவன் வரிசையாகக் காட்டிவர.

பின்னர் மணி புறத்துவிட்ட = பின்னாக மணிகளைத் தன்னிடத்தே இட்ட.

மாதாள் = பெரிய கால்களை உடைய.

பிடியொடு = கடிவாளத் தோடு.

பருமங்களையா = சேணம் களையப்படாது.

பாய் பரிக்கலிமா=பாய்ந்து செல்லும் செலவினை உடைய போர்ச் செருக்கு மிக்க குதிரைகள்.

இரு சேறு தெருவின்—கரிய சேறுபடிந்த தெருவில்.

எறிதுளி விதிர்ப்ப—தம்மேல் விழும் மழைத்துவலை உதறிவிட.

புடைவீழ் அம்துகில்—இடதுதோளில் இருந்து நழுவிவிழும் மேலாடையை,

இடவயின் தழீஇ—இடது கையால் அணைத்துக்கொண்டு,

வாள் தோள் கோத்த வன்கண்காளை—வாளைத் தோளிலே தாங்கிக் கொண்டிருக்கும் தறுகணாளனாகிய வீரன். ஒருவனின்

சுவல் மிசை அமைத்த கையன்—தோள் மீது போட்ட கையை உடையனாய்,

முகன் அமர்ந்து = புண்பட்டு கிடக்கும் வீரர்கள் நலம் கேட்டு முகமன் கூறுவதில் மனம் விரும்பி.

நூல்கால் யாத்த = நூலால் சட்டத்தில் கட்டின,

மாலை வெண்குடை = முத்துச் சரங்கள் தொங்கும் வெண் கொற்றக்குடை.

தவ்வென்று அசைஇ = தவ்எனும் ஓசை எழ அசைந்து.

தாதுளி மறைப்ப=பரந்து விழுகின்ற மழைத்துளிகளை மறைக்க.

நள் என்யாமத்தும்=நள் எனும் ஓசை எழும் நடு யாமத்தும்.

பள்ளி கொள்ளான்=பள்ளி கொள்ளாமல்

சிலரொடு திரிதரும் = படைத்தலைவர் சிலரோடு புண்பட்ட வீரர்களின் நலம் விசாரித்துக் கொண்டே சுற்றிச் சுற்றிவரும்.

பலரொடு முரணிய = சேரன், சோழன் உள்ளிட்ட எழுவரோடு மாறுபட்டு போர் செய்கின்ற,

பாசறைத்தொழில் = பாசறை வாழ்க்கை

இன்னே முடிக=இப்போதே முடிவதாக

தில்=அதுவே என் விருப்பம் (எ-று)

நெடுநல் வாடையின் பாட்டுடைத் தலைவனாகிய தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் போரில் புண்பட்ட வீரர்களுக்கு முகமன் கூறி அவர் நலம் கேட்டதோடு அமையாது அவர்களுக்கும் அப்போரின் வெற்றிபாடும் பாணர் போலும் இரவலர்களுக்கும் வாரி வழங்கிய பின்னரே தலைநகர் திரும்பும் வழக்கம் உடையவன் என்பதை, அவனையே பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட மதுரைக் காஞ்சியின் பின்வரும் வரிகளும் உறுதி செய்யும்.

"வில்லைக் கவைஇக் கணை தாங்கு மார்பின்
மாதாங்கு எறுழ்த் தோள் மறவர்த் தம்மின்;
கல் இடித்து இயற்றிய இட்டுவாய்க் கிடங்கின்
நல் எயில் உழந்த செல்வர்த்தம்மின்;
கொல் ஏற்றுப் பைந்தோல் சீவாது போர்த்த
மாக்கண் முரசம் விலகறங்க
எரி நிமிர்ந்தன்ன தானை நாப்பண்

பெருநல் யானை போர்க்களத்து ஒழிய
விழுமிய வீழ்ந்த குருசிலர்த்தம்மின்;
புரையோர்க்குத் தொடுத்த பொலம் பூந் தும்பை
நீர்யார் என்னாது முறை கருதுபு சூட்டிக்
காழ் மண்டு எஃகமொடு கணையிலைக் கலங்கிப்
பிரபிணை அரிந்த நிறம் சிதை கவயத்து
வானத் தன்ன வளநகர் பொற்ப
நோன் குறட்டன்ன ஊன்சாய் மார்பின்
உயர்ந்த உதவி ஊக்கலர்த் தம்மின்;
நிவந்த யானைக் கணநிரை கவர்ந்த
புலர்ந்த சாந்தின் விரவுப் பூந்தெரியல்
பெருஞ்செய் ஆடவர்த்தம்மின்: பிறரும்
யாவரும் வருக! ஏனோரும் தம்மென,
வரையா வாயிற் செறாஅது இருந்து
பாணர் வருக! பாட்டியர் வருக!
யாணர்ப் புலவரொடு வயிரியர் வருக' என
இருங்கிளை புரக்கும் இரவலர்க்கு எல்லாம்
கொடுஞ்சி நெடுந்தேர் களிற்றொடும் வீசி''

-மதுரைக் காஞ்சி (728-752).

—்—

# 15. தொகுப்புரை.

உலகம் எல்லாம் குளிரால் நடுங்கும் படியாகப் பருவம் தவறாமல் பெய்யும் மேகம், வலமாக எழுந்து கார்காலத்து முதல் மழையைப் பெய்ததாக, அம்மழையால் பெருகிய பெரு வெள்ளத்தை வெறுத்த, கொடிய கோலினை உடைய இடையர், ஏறுகளையுடைய ஆடுகளையும், ஆனிரை களையும், எருமைகளையும், வெள்ளக் கொடுமையில்லாத மேட்டுநிலங்களில் மேயவிட்டு, தாம் வாழ்ந்த நிலத்தைக் கைவிட்டு வந்துவிட்ட தனிமையினாலே வருந்தி, நீண்ட இதழ்களையுடைய காந்தள் மலர்களால் தொடுக்கப்பட்ட தலைமாலை, மழைநீர் அலைத்தலால் கலக்கம் எய்த, தம் உடல் கொண்ட கடுங்குளிர் வருத்துவதால், பலருடன்கூடி இருந்து கையிடத்தே கொண்ட நெருப்பினை உடையராய்ப், பற்கள் பறைகொட்டி நடுங்க, விலங்குகள், இரைதேடுவதை மறந்து நடுங்க, குரங்குகள் குளிரால் நடுங்கிக் குன்றிப்போக, பறவைகள் மரங்களில் தங்குவதில்லாமல் காற்றுமிகுதியால் மண்ணில் வீழ, தாய்ப்பசுக்கள் கடியவாய் உதைத்துப் பால் உண்ணவரும் கன்றுகளை ஏற்றுக்கொள்வதைக் கைவிட, மலையையும் குளிரக் செய்வதுபோன்ற கூதிர்ப்பருவத்தின் நடு யாமத்தில், மெல்லிய கொடியினையுடைய முசுட்டையில் மலர்ந்த புள்ளிகளைப் புறத்தேகொண்ட வெள்ளியபூக்கள் பொன்போன்ற நிறத்தினையுடைய பீர்க்கம் பூக்களோடு புதர்கள்தோறும் மலர,

பசிய கால்களைய உடைய கொக்கின், மென்மையான சிறகுகளையுடைய கூட்டம், கரிய வண்டல் படிந்து, ஈரம் பட்ட வெள்ளியமணற்பரப்பில், சிவந் வரிகள் பொருந்திய

நாரைக் கூட்டங்களோடு எழுந்து, எவ்விடங்களிலும் கவர்ந்து கொள்வதற்கு வாய்ப்பாகக், கயல்மீன்கள் சுழல் இட்டு ஓடும் தெளிந்த நீர்ஓட்டத்தை எதிர்த்து ஏறுமாறு, மிக்க நீரைப் பொழிந்துவிட்டமையால், பெய்யும் தன்மை வறண்டு, எழுந்த பொங்கும் வெண்மேகங்கள், அகன்ற பெரிய வானத்தே. சிறுசிறு துவலைகளாகத் தூவும் தொழிலைக் கல்லா நிற்க.

அழகிய பரந்து அகன்ற வயல்களில், மிக்க மழைநீரால் செழித்து வளர்ந்த வளமான இலைகளையுடைய நெல்லில் இருந்து, வெளிப்படும் கதிர்கள் பாரம்மிகுதியால் குலை தலைவணங்க, பருத்த அடியினை உடைய பாக்கு மரத்தின், நீலமணியை ஒத்த நிறம்காட்டும் கழுத்தில், பருத்த மடலிலிருந்து பாளையாக விரிந்து, திரட்சியைக்கொண்ட பெரியதாறுகளில், நுண்ணிய நீர்திரளும் படியாகப் பருத்து, பக்கங்கள் திரண்டு தெளிந்த நீரையுடைய பச்சிளங்காய்கள் இனிமை கொள்ளும்படி முற்ற.

அடர்ச்சியைத் தன்னிடத்தே கொண்ட மலைக்கு வடுகளிடத்தவாய, பல்வேறு மணமும், நிறமும் கலந்த மலர்களைக்கொண்ட, இடம் அகன்ற பெரிய மலர்சோலைகளில், குளிர்ச்சியையும், தளர்ச்சியையும் உடைய கொம்புகள் இடத்தளவாய, பன்நிறம் காட்டும் நீர்த்துளிகள், இடைவிடாமல் வீழ்ந்து கொண்டிருக்க.

மாடமாளிகைகள் உயர்ந்த, பல்வேறு வளங்களையும் கொண்ட பழைய ஊரின்கண், ஆறுகிடந்தாற் போன்ற, அகன்ற நெடிய தெருக்களில், தாமரை, குவளை, கழுநீர் முதலிய மலர்களோடு, தழை கலந்து தொடுத்த தலைமாலையையும், பருத்த, அழகிய, வலிய முறுக்கேறிய தோளினையும், நிரம்பிய மெய் வலிமையினையும் உடைய

கீழ்மக்கள், வண்டுகள் மொய்க்கும் கள்ளை உண்டு, களிப்பு மிகுந்து, தம்மேல்விழும் சிறுசிறு மழைநீர்த் துளிகளைப் பொருட்படுத்தாமல், முன்னும் பின்னும் தொங்கவிட்ட, மேலாடை உடையராய், பகல் கடந்துபோன அந்திப் போதிலும், தம் மனம்போன போக்கில் திரிதலைச் செய்ய,

வெள்ளிய சங்கு வளைகள் இறுக அணியப்பெற்ற முன் கையினையும், மூங்கில்போலும் தோளினையும், மென்மைத் தன்மை வாய்ந்த சாயலினையும், முத்தை ஒத்த முறுவலிக்கும் பற்களையும், அழகிய மகரக் குழையின் அழகிற்குப் பொருந்தின, மிகச்சிறந்த அழகினையும், அருள் உணர்வாம் குளிர்ச்சினையும் உடைய கண்களையும், மடப்பத்தையும் கொண்ட மகளிர், மலர்த்தட்டிலே இட்டுவைத்த, மலரும் பருவத்து பேரரும்பாகிய, மெல்லிய காம்பினையுடையவாகிய பிச்சியின் அழகிய இதழ்கள் மலரும் பருவம்பெற்று மலர்ந்து மணம்வீச, மலைப்பொழுது வந்துவிட்டது என அறிந்து, இரும்பால் செய்த விளக்கில், நெய்தோய்ந்த திரியைக் கொளுத்தி, நெல்லையும் மலரையும் தூவி, இல்லுறை தெய்வங்களைக் கைகூப்பி வணங்கி, வளங்கொழிக்கும் வணிக வீதியெல்லாம், மாலைக்காலத்தை விழாவாகக் கொண்டாட

மனையில் வாழும் புறாவின், சிவந்த கால்களையுடைய சேவல், தான் இன்பம் நுகருதற்குரிய பெடைகளோடு, ஊர் மன்றம் சென்று இரைதேடி உண்ணாமல் இரவுபகல் தெரியாமல் மயங்குகையினாலே, செயல் இழந்து, தாங்கும் பலகைகளில் கடுத்த கால்கள் ஆறும்படி மாறிமாறி இருக்கச், சிறிய குற்றேவல் செய்வார், கருங்கொள்ளின் நிறத்தை ஒத்த நிறம் வாய்ந்த நறுமணப் பொருள்களை அரைத்து அரைத்து நறுமணம் நாறும் அம்மியில், கஸ்தூரிமுதலிய

மணப்பொருள்களாய் ஆன சாந்து அரைக்க, வடநாட்டார் கொண்டுவந்து கொடுத்த வெண்ணிறம் வாய்ந்த சந்தனக்கல், தென் திசையிலிருந்து வந்த தான சந்தனக் கட்டையோடு பயன்படாமல் கிடக்க, மகளிர், தம் கூந்தலில், மாலையிட்டு முடியாது. பலவாக பின்னி விடப்பட்ட அக்கூந்தலில் சில மலரே இட்டு முடிப்பான் வேண்டி, குளிர்ந்த நறுமணம் வாய்ந்த சந்தனவிறகில் நெருப்பை உண்டாக்கி, கரிய வயிரம்வாய்ந்த அகிற் கட்டையோடு வெள்ளிய கண்ட சருக்கரையையும் கூட்டிப் புகை எழுப்ப.

தொழில் வல்ல தட்டான், அழகு பெறப்பண்ணிய சிவந்த நிறத்தை உடைய ஆலவட்டம், அதாவது விசிறி, உறையிடப்பட்டு, வளைந்த முளைக் கோலில், சிலந்திப் பூச்சிகளின் வெள்ளிய நூல்களால் சூழப் பட்டதாய்த் தொங்க விடப்பட்டிருக்க, வானளாவ உயர்ந்த மேல் மாடத்தில், வேனிற் பருவத்தில் பள்ளி கொள்வார்க்குத் தென்றல் காற்றைத்தரும், பலகணிகளில் நின்று உலவாது, இடைவெளி இடம் பெறாது இணைக்கப்பெற்ற பெருந்தும் வாயினைக் கொண்ட கதவுகள், தாழிடப்பட்டுக் கிடக்க கல் என்னும் ஓசையினை எழுப்பும் சிறுதூரல்விடாது தூவிக் கொண்டிருப்பதால், இளையரும், முதியரும் ஆகிய எல்லோரும், குறுகிய வாயினையுடைய குடத்தில் உள்ள நீரைக்குடியாமல், வாய் அகன்ற இத்தளத்தில் இட்டிருக்கும், சிவந்த நெருப்பு தரும் வெம்மையை விரும்பி ஏற்றுக்கொள்ள.

ஆடல் தொழிலை உடைய மகளிர், கொட்டும் பனிதரும் குளிரால், தன் நிலைகுலைந்துபோன இனிய இசையை இயல்பாக எழுப்பும் நரம்பைத், தாம்பாடும் வாய்ப்பாட்டினை, யாழும் தன்னிடத்தே கொள்ளும்படி நரம்பைக் கூட்டுவதற்குப்

பருத்து வருகின்ற தம் முலையின் வெப்பத்தை தடவிக் கரிய தண்டினை உடைய சிறிய யாழைப், பண் நிற்க வேண்டிய முறையில் நிறுத்த, கணவரைப் பிரிந்த மகளிர் வருந்தா நிற்கக், கூதிர் பருவமாய் நிலைபெற்றது அக்காலம்.

நால்வேறு திசைகளிலும் விரிந்த கதிர்களைப் பரப்பிய, அகன்ற இடத்தை உடைய ஞாயிறு மண்டிலம், அணித்து அணித்தாக, இரண்டு இடங்களில் நாட்டிய இரண்டு கோல்கள் இடத்தும், சாயா நிழலால் தாரைபோக ஓடுகின்ற நிலையைக் குறித்துக் கொள்ளும் தன்மை தப்பாதபடி, மேற்றிசைக்கண் சேரற்கு எழுந்து, ஒரு பக்கத்தைச் சாரப் போகாத சித்திரைத் திங்களின் நடுவில்பற்றி நின்ற யாதொரு நாளில், பதினைந்தாம் நாழிகையில், சிற்பநூல் அறிந்த தச்சர், நூலைக்கூரிதாக நேரேபிடித்துத், திசைகளைக் குறித்துக்கொண்டு, அத்திசைகளில் நிற்கும் தெய்வங்களை வணங்கி, பெரும்புகழ் வாய்த்த பேரரசர்க்கு ஏற்புடைய மனைகளையும், வாயில்களையும், மண்டபங்களையும் வகைப்படுத்தி, இவ்விடங்களையெல்லாம் ஒருசேரவளைத்துக் கொண்டு உயர்ந்த நிலையினையுடைய மதிலகத்தே.

ஆணிகளும் பட்டங்களுமாகிய பெரிய இரும்பாலே கட்டிச்சாதிலிங்கம் வழித்து, தாழ்ப்பாளோடு சேரப்பண்ணின இரண்டாய் மாட்சிமைப்பட்ட கதவுகளைச்சேர்த்து இணைதல் மாட்சிமைப்பட்டு, நடுவே திருமகளும், இருபக்கத்தும் இரண்டு செங்கழுநீர் மலர்களும், இரண்டுபிடி யானைகளுமாகத் தன்னிடத்தே பண்ணி, உத்தரம் என்னும் நாளின் பெயர் பெற்ற சிறந்த மரத்தில் செருகப்பெற்ற கைத்தொழில் வல்ல தச்சன் கடவுகையினாலே, இணைப்பு எனும் குறை தீர்ந்து (அதவாது இணைப்பே தெரியாமல் பொருந்தி,) பல

மரங்களும் தம்மில் கிட்டுதல் அமைந்த, வெண்சிறுகடுகு அப்பிவைத்த, நெய்ய அணிந்த, நெடிது உயர்ந்த நிலையினை உடைய, வெற்றிகொண்டு ஏந்திய கொடிகளோடே யானைகள் சென்று புகும்படி உயர்ந்த, மலையைக் குடைந்து திறந்தால் போன்ற, உயர்ந்த கோபுரங்களையும், திருமகள் நிலையாகத் தங்கிவிட்ட, குற்றம் இல்லாத்தலையாய சிறப்பினையும், புதுமணல் பரப்பிய, அழகிய முற்றத்தினையும், நீண்ட மயிரினை உடைய கவரிமான்களில் தூயநிறம் வாய்ந்த ஆண்கவரி மான்கள், குறுகிய கால்களை உடைய அன்னப் பறவைகளோடு தாவித்திரியும் வாசல் முன் இடத்தையும் உடைய.

பந்தியில் நிற்றலை வெறுத்த, பற்பல தலையாட்டங் களை உடைய குதிரைகள் புல்லாகிய உணவைக்குதப்பும், தனிமையைப்புலப்படுத்தும் குரலோடு, அரண்மனை வாழ்வார் நிலவொளியின் பயன்கொள்ளும், நெடிய வெள்ளிய முற்றத்தில் உள்ள, மகரமீன் வடிவில் உள்ள பருத்த வாயினைக் கொண்ட கூடல்வாய் நிறைய, கலங்கி விழுகின்ற அருவியின் ஓசைகலந்து, அதற்கு அயல் இடத்தில், தழைத்த நெடிய தோகை அசைய மெல்லிய இயல்பினை உடைய, அழகால் செருக்குற்ற மயில்கள் ஆரவாரிக்கும், கொம்பு என்னும் இசைக்கருவி எழுப்பும் இசையோ என மயங்குதற்கு ஏற்ற இனிய இசை, பெரிய அடர்ந்த மலையின் ஆரவாரம் போல் ஆரவாரிக்கும் அரசன் பெருங்கோயில்.

யவன நாட்டவர் செய்த, தொழிலால் மாட்சிமைப்பட்ட பாவை, தன் கையில் ஏந்தியிருக்கும் அழகிய அகல் நிறையும்படி நெய் வார்க்கப்பட்டுப், பெரியதிரிகளைப்

பந்தமாகக் கொளுத்திவைத்த, செந்நிறம் வாய்ந்த தலையினையுடைய, மேல்நோக்கி எழுந்து எரியும் விளக்கை, நெய் வற்றுந்தோறும், நெய்வார்த்துத் துண்டிப், பலவாய் வேறுபட்ட இடங்கள் தோறும், பரந்த இருள் நீங்கும்படி, பெருமை பொருந்திய தலைமையினையுடைய பாண்டியன் அல்லது, ஆடவர் எவரும் அணுக முடியாத, அரிய காவலையுடைய, கட்டுக்கள் மலைகளைக் கண்டாற் போலும் உயர்ச்சியை உடையவை. மலைகளைச் சேர்ந்து வானவில் கிடந்தாற்போலும் பலவண்ணக் கொடிகளை உடையவை பட இடங்கள் தோறும், வெள்ளியை ஒத்து விளங்கும் வெண் சாந்தை வாரி இறைத்து நீலமணியைக் கண்டாற்போன்ற கருமையினையும் பருமையினையும் உடைய, வடிவழகினையும், பல பூக்களையும் உடைய, வல்லி என்ற ஒரு கொடியை ஓவியமாகச் செதுக்கப்பெற்ற, கருப்பக்கிரகம் எனப்பெயர் பெற்ற, காட்சிக்கு இனிய நல்ல இல்லில்.

நாற்பது ஆண்டு கடந்த, முரசோ என மயங்குதற்கேற்ற வலிய கால்களையும், போரில் வெற்றி மேல் வெற்றி பெறும். உயர்ந்த அழகினையும், புள்ளிகள் நிறைந்த மத்தகத்தினையும் உடைய, போரிட்டு இறந்த யனையின் தானே இற்று வீழ்ந்த தந்தத்தைக் கனமும் செம்மையும் ஒன்றாக இருக்கும் வண்ணம், இருபக்கத்தையும் செதுக்கி, தொழில் வல்ல தச்சன் கூரிய சிற்றுளியாலே பண்ணிய பெரிய இலைத் தொழிலை இடையிலே இட்டு, சூல் முற்றிய, மெல்லநடைபோடும் மகளிரின், பால்கட்டி வீங்கிய முலையை ஒப்ப, பக்கம் உருண்டிருந்த குடத்திற்கும், மேல் தட்டுக்கும் இடைப்பட்ட பெட்டி வடிவாகிய வலிய கால்களைப் பொருத்தி பெரிய அளவினதாகப் பணிய பெரிய புகழ்வாய்ந்த கட்டிலில்,

மூட்டுவாய் மாட்சிமைப்பட்ட, மெல்லிய நுல் அழகு பெறும்படி, தொடுத்தல் மாட்சிமைப்பட்டு, முத்துச்சரங்களைச் சாலேசுமாக நாலவிட்டு, ஆணிகளில் மாட்டி, புலியினது வரியைத்தன்னிடத்தே கொண்ட, பொலிவு பெற்ற திறத்தை உடைய நடுப்பகுதியான தகடு இடம் மறையும்படி கொண்டு, குற்றம் அற்று, உறையுள் புகுத்திய பல்வேறு மயிர்களைக் கொண்ட விரிப்பைப் பரப்பி, அவ்விரிப்பின் மீது வலிய காட்டு விலங்காகிய சிங்கத்தை வேட்டை ஆடுவது போலும் ஓவியத்தைத் தீட்டி, பரந்து அகன்ற இடத்தை உடைய காட்டில் மலர்ந்த, முல்லை முதலாம் பல்வேறு மலர்களை ஒன்றிற் கொன்று மாறுபடும வகையில் தூவி மென்மை உடையதாக விரித்த படுக்கை, மேலும் மென்மை பெறத், தம் பேடுகளைப் புணர்ந்த அன்னச் சேவல்களின் அழகிய தூவியைப் பரப்பி, இரண்டாகப் போடப்பட்ட தலையணைகள் மேன்மை உறும்படி, பாயணைமீது போட்டு, அவற்றின் மீது, கஞ்சி ஊட்டப்பெற்ற. அழுக்கேறினால் அடித்து அழுக்கைப் போக்கிக் கொள்ள வல்லதான நூல் ஆடையின், தூயமடிக்கப் பெற்ற போர்வை விரிக்கப் பெற்ற, பல்வேறு மலர்களும் தூவப்பெற்ற படுக்கை.

அரசன் பிரிந்துபோயிருப்பதால், முன்பு முத்தாரம்கிடந்த மார்பில், பின்னிய கயிற்றில் கோக்கப்பட்ட தாலி ஒன்றே தொங்க, நல்லநெற்றியில் படர்ந்த சிலவாகிய மென்மையான மயிர்கிடந்து அலைய, பெரிய ஒளி பொருந்திய மகரக்குழை களையப்பட்ட காதில், சிறியவாகிய கடுக்கன் அழுத்தப் பட்டிருக்க, முன்பு பொன்னால் செய்யப்பட்ட தோடிகிடந்து தழும்பு செய்துவிட்ட, மயிரால் அழகு செய்யப்பட்ட முன் கையில், வலம்புரிச்சங்கை அறுத்துப் பண்ணிய வளையலோடு மந்திரக் கயிற்றையும்கட்டி, வாளைமீனின் பிளந்த வாயைப் போல, முடக்கத்தை உண்டாக்கிச், சிவந்த விரல் அணிந்து கொண்ட மோதிரத்தையும், முன்பு பூத்தொழில் செய்யப்பட்ட ஆடை அணிந்த இடையில், அழகிய ஆனால் மாசுஏறிய நூல் ஆடையோடு வண்ணங்களைக்கொண்டு எழுதப்படாத ஓவியம்போல கிடப்ப;

ஒப்பனை செய்யப்படாத மாந்தளிரை ஒத்த மேனி நிறத்தினையும், மேனி எங்கும் பரந்த தேமலையும், அழகிய மூங்கில்போல் திரண்ட மெல்லிய தோளினையும், கச்சால் வலிந்து கட்டப்பெற்ற, தாமரை முகைபோலும், முலையினை யும், வளைந்து தளரும் இடையினையும், மெல்லிய இயல்பினையும் உடைய ஏவல் மகளிர் துயில் உண்டாக்க, பாண்டிமாதேவியின் நல்ல அடிகளை வருட, நரை கலந்த மெல்லிய மயிரினை உடைய, சிவந்த முகத்தினை உடையராகிய செவிலித்தாய்மார், தேவியின் துத்யரை தணிப்பான் வேண்டி பொய்யும், மெய்யும் ஆகிய உரைகள் பலவற்றைப் பலகால் சொல்லி, ''இன்னே வருகுவர் இன் துணையோர்' என அவள் விரும்பும் உரைகளைச் சொல்லவும் அவற்றை' ஏற்றுக்கொள்ளாளாய், மிகவும் கலங்கி,

பால்ஊறா வெறும்முலை என அழைக்கப்படும் குடத்தைக் கடைந்துகொண்ட, சாதிலிங்கம் பூசப்பட்ட, வலிய நிலையினை உடைய கட்டில் மேல்கட்டின் திரண்ட கால்களை, கட்டில் கால்களுக்கு அணித்தாக நிற்கும்படி கட்டி, புதிதாக எழுதப்பட்ட, வண்ண மெழுகால் தீட்டப்பட்ட திரைச்சீலையில், மேஷ (ஆடு) ராசி முதலாக எல்லா ராசி களோடும், விண்ணில் திரியும், விரைந்த ஓட்டத்தினை உடைய ஞாயிற்றின் ஒழுக்கத்தோடு மாறுபடும் சிறப்பினை உடைய செல்வானம் திங்களோடு என்றும் நிலைபெற்று நிற்கும் உரோகிணியை நினைத்துக் கொண்டவாறே, அத்திரைச்சீலையில் பார்க்க, பெருமூச்செறிந்து, நீலமலர் போலும் கண்கள் ஏந்தி நின்ற, மிக்கு வீழ்கின்ற சில நீர்த் துளிகளில் சிலவற்றைச் சிவந்த விரலில் சேர்த்து பிரிவுத் துன்பத்தோடு வீழ்ந்து கிடக்கும், எல்லா நலங்களாலும் சிறப்புற்ற அரசமாதேவியாரின் இன்னாதாகிய பிரிவாம் பெருந்துயர் தீர்தல் பொருட்டு.

ஒளி விளங்கும் பட்டத்தோடு பொலிவுபெற்ற, போர்த் தொழில் பயின்ற யானையின் நீண்டபருத்த பெருமை மிகு துதிக்கை அற்று நிலத்தில் வீழ்ந்து புரளும்படி, களிற்றைப் போர்க்களத்தில் கொன்ற பெரிய வெற்றிச் செயலைச் செய்து முடித்த வீரர்களுடைய அப்போரில், பகைவரின் ஒளி விளங்கும் வாளால் பெற்ற விழுப்புண்ணைக்காணும் பொருட்டு, பாசறையை விட்டு வெளியே வந்து, வடக்கி லிருந்து வீசும் குளிர்ந்த வாடைக் காற்று வீசுந்தோறும் அசைந்து, தெற்கு நோக்கி எழுந்து சாய்ந்த தலையினை உடைய, நல்ல பல பாண்டில் என்னும் விளக்கின் பெரிய தீக்கொழுந்து எரிந்து ஒளிகாட்ட, வேப்பமாலையைத் தலையிலே சூடிய, வலியகாம்பினை உடைய வேலோடு, முன்னே செல்லும் படைத்தலைவன் வரிசையாகக் காட்டிவரப், பின்னாக மணிகளைத்தன்னிடத்தே இட்ட, பெரிய கால்களை உடைய கடிவாளத்தோடு, சேணம் களையப்படாத, பாய்ந்து செல்லும், போர்ச்செருக்குமிக்க குதிரைகள், கரியசேறுபடிந்த தெருவில், தம்மேல் விழும் மழைத் தூரலை உதறிவிட,

இடது தோளில் இருந்து நழுவி விடும் மேலாடையை இடது கையால் அணைத்துக் கொண்டு, வாளைத் தோளிலே தாங்கிக்கொண்டிருக்கும் தறுகணாளனாகிய வீரன் ஒருவனின் தோள்மீது போட்ட கையை உடையனாய்ப், புண்பட்டுக் கிடக்கும் வீரர்கள் நலம் கேட்டு முகமன் கூறுவதில் மனம் விரும்பி, நூலால் பட்டத்தில் கட்டிய முத்துச்சரங்கள் தொங்கும் வெண்கொற்றக்குடை நவ் எனும் ஓசை எழ அசைந்து பரந்து விழுகின்ற மழைத்துளிகளை மறைக்க, நள் எனும் ஓசை எழும் நடுயாமத்தும் பள்ளிகொள்ளாமல், படைத்தலைவர் சிலரோடு, புண்பட்ட வீரர்களின் நலம் விசாரித்துக் கொண்டே சுற்றிச் சுற்றி வரும், சேரன், சோழன் உள்ளிட்ட எழுவரோடு மாறுபட்டுப்போர் செய்கின்ற பாசறை வாழ்க்கை இப்போதே முடிவதாக. அதுவே என் விருப்பம்.

## இணைப்பு: 1

# நெடுநல்வாடை

வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோற் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக்கோடல்
நீடிதழ்க் கண்ணி நீரலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க
மாமேயல் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழக் கறவை
கன்றுகோ ளொழியக் கடிய வீசிக்
குன்றுகுளிர்ப் பன்ன கூதிர்ப் பானாள்
புன்கொடி முசுண்டைப் பொறிப்புற வான்பூப்
பொன்போற் பீரமொடு புதற்புதல் மலரப்
பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி
இருங்களி பரந்த ஈர வெண்மணற்
செவ்வரி நாரையொ டெவ்வாயுங் கவரக்
கயலறல் எதிரக் கடும்புனற் சாஅய்ப்
பெயலுலந் தெழுந்த பொங்கல் வெண்மழை
அகலிரு விசும்பில் துவலை கற்ப
அங்கண் அகல்வயல் ஆர்பெயற் கலித்த
வண்தோட்டு நெல்லின் வருகதிர் வணங்க
முழுமுதற் கமுகின் மணியுறழ் எருத்திற்
கொழுமடல் அவிழ்ந்த குழூஉக்கொள் பெருங்குலை
நுண்ணீர் தெவிளவீங்கிப் புடைதிரண்டு

தெண்ணீர்ப் பசுங்காய் சேறுகொள முற்ற
நளிகொள் சிமைய விரவுமலர் வியன்காக்
குளிர்கொள் சினைய குரூஉத்துளி தூங்க
மாட மோங்கிய மல்லல் மூதூர்
ஆறுகிடந் தன்ன அகனெடுந் தெருவிற்
படலைக் கண்ணிப் பரேரெறுழ்த் திணிதோள்
முடலை யாக்கை முழுவலி மாக்கள்
வண்டுமூசு தேறல் மாந்தி மகிழ்சிறந்து
துவலைத் தண்துளி பேணார் பகலிறந்து
இருகோட் டறுவையர் வேண்டுவயின் திரிதர
வெள்ளி வள்ளி வீங்கிறைப் பணைத்தோள்
மெத்தென் சாயல் முத்துறழ் முறுவல்
பூங்குழைக் கமர்ந்த ஏந்தெழில் மழைக்கண்
மடவரல் மகளிர் பிடகைப் பெய்த
செவ்வி யரும்பின் பைங்காற் பித்திகத்து
அவ்வித ழவிழ்பதங் கமழப் பொழுதறிந்து
இரும்புசெய் விளக்கின் ஈர்ந்திரிக் கொளீஇ
நெல்லு மலருந் தூஉய்க் கைதொழுது
மல்லல் ஆவணம் மாலை யயர
மனையுறை புறவின் செங்காற் சேவல்
இன்புறு பெடையொடு மன்றுதேர்ந் துண்ணாது
இரவும் பகலும் மயங்கிக் கையற்று
மதலைப் பள்ளி மாறுவன இருப்பக்
கடியுடை வியனகர்ச் சிறுகுறுந் தொழுவர்
கொள்ளுறழ் நறுங்கல் பலகூட்டு மறுக
வடவர் தந்த வான்கேழ் வட்டம்
தென்புல மருங்கிற் சாந்தொடு துறப்பக்
கூந்தல் மகளிர் கோதை புனையார்
பல்லிருங் கூந்தல் சின்மலர் பெய்ம்மார்
தண்ணறுத் தகர முளரி நெருப்பமைத்து

இருங்காழ் அகிலொடு வெள்ளயிர் புகைப்பக்
கைவல் கம்மியன் கவின்பெறப் புனைந்த
செங்கேழ் வட்டஞ் சுருக்கிக் கொடுந்தறிச்
சிலம்பி வானூல் வலந்தன தூங்க
வானுற நிவந்த மேனிலை மருங்கின்
வேனிற் பள்ளித் தென்வளி தரூஉம்
நேர்வாய்க் கட்டளை திரியாது திண்ணிலைப்
போர்வாய்க் கதவம் தாழொடு துறப்பக்
கல்லென் துவலை தூவலின் யாவரும்
தொகுவாய்க் கன்னல் தண்ணீர் உண்ணார்
பகுவாய்த் தடவில் செந்நெருப் பார
ஆடல்மகளிர் பாடல் கொளப் புணர்மார்
தண்மையிற் றிரிந்த இன்குரல் தீந்தொடை
கொம்மை வருமுலை வெம்மையிற் றடைஇக்
கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை நிறுப்பக்
காதலர்ப் பிரிந்தோர் புலம்பப் பெயல்கனைந்து
கூதிர் நின் றன்றாற் போதே மாதிரம்
விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்
இருகோற் குறிநிலை வழுக்காது குடக்கேர்
பொருதிறஞ் சாரா அரைநாள் அமையத்து
நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வ நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து
ஒருங்குடன் வளைஇ ஓங்குநிலை வரைப்பிற்
பருவிருப்பு பிணித்துச் செவ்வரக் குரீஇத்
துணைமாண் கதவம் பொருத்தி இணைமாண்டு
நாளொடு பெயரிய கோளமை விழுமரத்துப்
போதவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத்துத்
தாளொடு குயின்ற போரமை புணர்ப்பிற்
கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்ந்து

ஐயவி யப்பிய நெய்யணி நெடுநிலை
வென்றெழு கொடியொடு வேழஞ் சென்றுபுக்க
குன்றுகுயின் றன்ன ஓங்குநிலை வாயில்
திருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பின்
தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றத்து
நெடுமயி ரெகினத் தூநிற ஏற்றை
குறுங்கால் அன்னமோ டுகளு முன்கடைப்
பணைநிலை முனைஇய பல்லுளைப் புரவி
புல்லுணர்த் தெவிட்டும் புலம்புவிடு குரலொடு
நிலவுப்பயன் கொள்ளும் நெடுவெண் முற்றத்து
கிம்புரிப் பகுவாய் அம்பண நிறையக்
கவிழ்ந்துவீழ் அருவிப் பாடுவிறந் தயல
ஒலிநெடும் பீலி ஒல்க மெல்லியல்
கலிமயில் அகவும் வயிர்மருள் இன்னிசை
நளிமலைச் சிலம்பிற் சிலம்புங் கோயில்
யவனர் இயற்றிய வினைமாண் பாவை
கையேந் தையகல் நிறையநெய் சொரிந்து
பருஉத்திரி கொளீஇய குருஉத்தலை நிமிரெரி
அறுவறு காலைதோ றமைவரப் பண்ணிப்
பல்வேறு பள்ளிதொறும் பாயிருள் நீங்கப்
பீடுகெழு சிறப்பிற் பெருந்தகை யல்லது
ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பின்
வரைகண் டன்ன தோன்றல; வரைசேர்பு
வில்கிடந் தன்ன கொடிய பல்வயின்
வெள்ளி யன்ன விளங்குஞ் சுதையுரீஇ
மண்கண் டன்ன மாத்திரள் திண்காழ்ச்
செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்
உருவப் பல்பூ ஒருகொடி வளைஇக்
கருவொடு பெயரிய காண்பி னல்லில்
தசநான் கெய்திய பணைமருள் நோன்றாள்

இகன்மீக் கூறும் ஏந்தெழில் வரிநுதல்
பொருதொழி நாக மொழியெயி றருகெறிந்து
சீருஞ் செம்மையும் ஒப்ப வல்லோன்
கூருளிக் குயின்ற ஈரிலை யிடையிடுபு
தூங்கியல் மகளிர் வீங்குமுலை கடுப்பப்
புடைதிரண் டிருந்த குடத்த விடைதிரண்டு
உள்ளி நோன்முதல் பொருத்தி அடியமைத்துப்
பேரள வெய்திய பெரும்பெயர்ப் பாண்டில்
மடைமாண் நுண்ணிழை பொலியத் தொடைமாண்டு
முத்துடைச் சாலேகம் நாற்றிக் குத்துறுத்துப்
புலிப்பொறிக் கொண்ட பூங்கேழ்த் தட்டத்துத்
தகடுகண் புதையக் கொளீஇத் துகள்தீர்ந்து
ஊட்டுறு பன்மயிர் விரைஇ வயமான்
வேட்டம் பொறித்து வியன்கட் கானத்து
முல்லைப் பல்போ துறழப் பூநிரைத்து
மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்படத்
துணைபுணர் அன்னத் தூநிறத் தூவி
இணையணை மேம்படப் பாயணை யிட்டுக்
காடிகொண்ட கழுவுறு கலிங்கத்துத்
தோடமை தூமடி விரித்த சேக்கை
ஆரந் தாங்கிய அலர்முலை யாகத்துப்
பின்னமை நெடுவீழ் தாழத் துணைதுறந்து
நன்னுதல் உலறிய சின்மெல் லோதி
நெடுநீர் வார்குழை களைந்தெனக் குறுங்கண்
வாயுறை யழுத்திய வறிதுவீழ் காதிற்
பொலந்தொடி தின்ற மயிர்வார் முன்கை
வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து
வாளைப் பகுவாய் கடுப்ப வணக்குறுத்துச்
செவ்விரற் கொளீஇய செங்கேழ் விளக்கத்துப்
பூந்துகில் மரீஇய ஏந்துகோட் டல்குல்

அம்மா சூர்ந்த அவிர்நூற் கலிங்கமொடு
புனையா ஓவியங் கடுப்பப் புனைவில்
தளிரேர் மேனித் தாய சுணங்கின்
அம்பணைத் தடைஇய மென்றோள் முகிழ்முலை
வம்புவிசித் தியாத்த வாங்குசாய் நுசுப்பின்
மெல்லியல் மகளிர் நல்லடி வருட
நரைவிரா வுற்ற நறுமென் கூந்தல்
செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்
குறியவும் நெடியவும் உரைபல பயிற்றி
இன்னே வருகுவர் இன்துணை யோரென
உகத்தவை மொழியவும் ஒல்லாள் மிகக்கலுழ்ந்து
நுண்சேறு வழித்த நோனிலைத் திரள்கால்
ஊறா வறுமுலை கொளீஇய காறிருத்திப்
புதுவ தியன்ற மெழுகுசெய் படமிசைத்
திண்ணிலை மருப்பின் ஆடுதலை யாக
விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலல் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பிற் செல்வனொடு நிலைஇய
உரோகிணி நினைவனள் நோக்கி நெடிதுயரா
மாயிதழ் ஏந்திய மலிந்துவீழ் அரிப்பனி
செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சிலதெறியாப்
புலம்பொடு வதியு நலங்கிளர் அரிவைக்கு
இன்னா அரும்படர் தீர விறற்றந்து
இன்னே முடிகதில் அம்ம மின்னவிர்
ஓடையொடு பொலிந்த வினைநவில் யானை
நீள்திரள் தடக்கை நிலமிசைப் புரளக்
களிறுகளம் படுத்த பெருஞ்செய் யாடவர்
ஒளிறுவாள் விழுப்புண் காணிய புறம்போந்து
வடந்தைத் தண்வளி எறிதொறும் நுடங்கித்
தெற்கேர் பிறைஞ்சிய தலைய நற்பல
பாண்டில் விளக்கிற் பருஉச்சுட ரழல

வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகமொடு
முன்னோன் முறைமுறை காட்டப் பின்னர்
மணிபுறத் திட்ட மாத்தாட் பிடியொடு
பருமங் களையாப் பாய்பரிக் கலிமா
இருஞ்சேற்றுத் தெருவின் எறிதுளி விதிர்ப்பப்
புடைவீழ் அந்துகில் இடவயின் தழீஇ
வாள்தோள் கோத்த வன்கட் காளை
சுவல்மிசை யமைத்த கையன் முகனமர்ந்து
நூல்கால் யாத்த மாலை வெண்குடை
தவ்வென் றசைஇத் தாதுளி மறைப்ப
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே.

## இணைப்பு: 2

# *என் கடன் பணி செய்து கிடப்பதே! என் தமிழ்ப்பணி

புலவர் கா. கோவிந்தன்

1932: செய்யாறு உயர்நிலைப் பள்ளியில் 8-வது வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறேன். தமிழாசிரியர், உயர் திருவாளர், மகாவித்வான் வீரபத்திரப் பிள்ளை அவர்கள். எங்கள் ஊரில் பானுகவியார் என்ற பெரும்புலவர், துறவியார் இருந்தார். வடலூர் வள்ளலார் இயற்றிய அருட்பா குறித்து எழுந்த "அருட்பா மருட்பா" வாதத்தில், அருட்பாவாத நெறியாளரோடு நின்று வாதிட்ட வன்மை யாளர். எங்களூரில் கோயில் கொண்டிருக்கும் அருள்மிகு வேதபுரீஸ்வரர், திருஞான சம்பந்தர் அவர்களால், ஆண்பனை பெண்பனையாகப் பாடப்பெற்ற பெருமைக்குரிய பெருமான். அவர் துணைவியார் பாலகுஜாம்பிகையார். அந்த அம்மையார் மீது "இளமுலை நாயகி பிள்ளைத் தமிழ்" என்றபொருள் செறிந்த நூலைப்பாடியவர் பானு கவியார். அத்தகு பெரும் புலமை வாய்ந்த பானுகவியாரை வாதத்தில் வென்றவர் திரு. வீரபத்திரப் பிள்ளை அவர்கள்.

அவர் வேலூரில், இன்று வெங்கடேசுவரா மேல் நிலைப்பள்ளி என அழைக்கப்பெறும் அன்றைய ஸ்ரீமகந்த தேவஸ்தான உயர்நிலைப் பள்ளிக்குச் சென்றுவிட்டார். அவர் இடத்திற்குக் காவேரிப்பாக்கம் உயர்நிலைப் பள்ளியில்

* புலவர் அவர்கள் கடைசியாக எழுதிய கட்டுரை.

பணிபுரிந்திருந்த திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் வந்து சேர்ந்தார். தென் ஆர்க்காடு மாவட்டம். மயிலத்துக்கு மேற்கில் பத்து கி. மீ. தொலைவில் உள்ள ஔவையார் குப்பம் என்ற ஊரில், அவ்வூர்க் கணக்கு எழுதி வந்த திரு. சுந்தரம் பிள்ளை அவர்களின் மகனாகப் பிறந்தமையால் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை என அழைக்கப்பட்டவர்.

மகாவித்துவான் வீரபத்திரப் பிள்ளை அவர்கள் எங்கே, இவர் எங்கே எனச் சிலநாள் இவரை மதிக்காமலே இருந்த மாணவர்களில் நானும் ஒருவன். ஆனால் ஔவை அவர்களின் பாடம் நடத்தும் முறை புதுமையானது. அன்று நடத்த வேண்டிய பாடத்திற்கான குறிப்புகளை முன்பாகவே தேர்வு கொண்டல்லது பாடம் எடுக்கமாட்டார்; பாக்களை இசையோடு பாடுவார்; சொல்பிரித்து பொருள் விளங்கப்பாடுவார்; புதிய பாடம் எடுத்துக் கொள்வதற்கு முன்னர் பழைய பாடத்தை மாணவர் எந்த அளவு புரிந்து கொண்டுள்ளனர் என்பதை அறிந்து கொள்ள சில பல கேள்விகளைக் கேட்பார். அம்முறையில் ஒரு நாள் அரிச்சந்திர புராணத்தில் வரும் ''அவமேபுறம் அறைந்தமை'' என்ற தொடரில் வரும் ''அறைந்தமை'' என்ற சொல்லுக்குச் சொல்லிலக்கணம் கூறுமாறு கேட்டார். அதுவரை இலக்கணம் என்றால், இலக்கணத்திற்குப் பாடமாக வைத்திருக்கும் நூலில் ஒரு பக்கம் இரண்டு பக்கங்களை ஒப்பிப்பதோடு சரி; அதனால் சொல்லிலக்கணம் என்பது என்ன எனப் புரியாமல் விழித்தோம். அவர் ''இடவழுவமைதி தனித்தன்மைப் பன்மை'' என்பதுதான் இதன் சொல்லிலக்கணம் என்றார்.

எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ''இடமாவது, வழுவாவது, அமைதியாவது தனித்தன்மைப் பன்மையாவது''

என விழித்தோம். அதன் பிறகு, இவரிடம் நல்ல தமிழ் அறிவு இருக்கிறது என்பதை உணர்ந்து மதிக்கத் தொடங்கினோம்.

வகுப்பில் ஒருநாள் "என்னிடம் தமிழ் கற்க விரும்பும் மாணவர்கள் எழுந்து நிற்கலாம்" என்றார். எல்லோரும் எழுந்து நிற்கவும், உடனே அவர் என்னிடம் படிப்பதானால், மாதம் ஐந்து ரூபாய் சம்பளம் கொடுக்கவேண்டும்; அதற்கு ஒப்புக்கொள்பவர் மட்டுமே நிற்கலாம் என்றார். நான், மா. கந்தசாமி, வ. வேதபுரி, பி. குப்புராவ் ஆகிய நால்வர் மட்டுமே நின்றாலும், மாலையில் வீட்டிற்குச் சென்றோம் பணத்தோடு; தமிழ் கற்க எந்த அளவு ஆர்வம் இருக்கிறது என்பதைக் கண்டுகொள்ளவே, ஐந்து ரூபாய் சம்பளம் என்றேன். சம்பளம் எதுவும் வேண்டாம் தமிழ் கற்றுத் தருகின்றேன் என்றார்.

வகுப்பு தொடங்கிற்று. திருவையாறு திரு. உலகநாதம் பிள்ளை அவர்கள் இயற்றிய "கன்றும் கனி உதவும்" என்ற உரைநடை நூலைக்கொடுத்து, அதை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கப் "பணித்தார்". பாரி மகளிர் வரலாறு கூறும் சிறந்த உரைநடை நூல்இது. அதுமுடிந்ததும், "கார் நாற்பது", "களவழி நாற்பது" என்ற எளியபொருள் விளக்கம் பெறவல்ல, அதே நிலையில் ஆழமாகவும் பொருள் நிறைந்த நூல்களைக் கற்றுத் தந்துவிட்டுப் பின்னர் ஒருநாள் தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையம், ஒருநாள் திருக்குறள் பரிமேலழகர் உரை எனச் சொல்லித்தந்தார்.

பாடம் தொடங்குமுன் :

திருவிளங்கு பழமொழியும் சீர்விளங்கு
புலவர் பலர் சிறப்பத் தோன்றி
சருவிளங்கு பாக்கள் பல உரைகள்
பல ஆக்குதால் களவாம் வாய்மை

மருவிளங்கு தமிழ்மொழியின் மருங்கு
எழுந்தது என விளங்கும்
திருவிளங்கு வள்ளுவர் திருக்குறள் கண்டவர்
அடியாய்ச் சிரமேற்கொள்வார்.

என்ற பாடலை எல்லோருமாகப் பாடுவோம்.

1934-இல் பள்ளி இறுதி வகுப்பை முடித்ததும் அவர் தந்த பயிற்சியின் துணையால் பத்துப்பாட்டு, எட்டுத் தொகை நூல்களை நானேபடிக்கத் தொடங்கினேன்.

1935-இல் "காவிரி" என்ற தலைப்பில் கட்டுரை எழுதி, தஞ்சாவூர் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடாகிய "தமிழ்ப் பொழிலு" க்கு அனுப்பினேன். அது வெளிவந்த பிறகே ஆசிரியர்க்குத்தெரியும். இதுவே என் எழுத்துப் பணியின் தொடக்கம்.

ஊரில் "வாகீச பக்தஜனசங்கம்" என்ற பெயரில்ஒரு தமிழ்ச்சங்கம் இருந்தது. அது மேலே கூறிய திருக்கோயில் திருவிழா நடைபெற்ற தைத்திங்களில் பத்துநாட்கள் உபயச் சொற்பொழிவு நடத்தி வந்தது. ஔவை அவர்கள் பங்கு கொண்டதும், அது புதுநடை போடத் தொடங்கி விட்டது. தமிழ்நாட்டில் உள்ள திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் உள்ளிட்ட பலசமயப் புலவர்கள் வந்து சொற்பொழிவு ஆற்றுவார்கள். அவர்கள் பேசியன எல்லாம் கேட்ட எனக்கும் நாமும் ஏன் பேசக்கூடாது" என்ற உணர்வு எழவே, ஆசிரியர் அறிவுரையோடு "சைவ இளைஞர்கள் முன்னிருக்கும் கடமைகள்" என்ற தலைப்பில் பேசினேன். அதுவே என் முதற் பேச்சு.

எங்கள் ஊரில் "பானு கவி மாணவர் தமிழ்ச் சங்கம்" என்ற பிறிதோர் அமைப்பும் இருந்தது. கம்ப இராமாயணத்தை ஆழ்ந்து படிக்காமலே பட்டிமன்றம், வழக்காடு மன்ற மேடைகளில் நின்றுகொண்டு வெறும் சொல் சாலம் காட்டுவார்போல் அல்லாமல் ஆழமாகப் படித்து "வாலி வழக்கு" என்பனபோலும் அரிய நூல்களைப்படைத்த அமரர் திரு. புரிசை முருகேச முதலியார் போன்றவர்கள் பானு கவியாரின் மாணவர்கள். அவர்கள் உருவாக்கியது அச் சங்கம். அதிலும் நான் பங்கு கொண்டவன்தான்; ஆண்டு தோறும் திருவத்திபுரத்திற்கு வந்து செல்லும் ஞானியார் அவர்கள் அயர்ந்து உறங்கத்தொடங்கும்போது, அவர் உறங்கும்வரை அவர் கால்களைப் பிடித்துவிடும் பழக்கமுடைய என்னை, ஒருமுறை அவர் தலைமையில் "மணிவாசகர் அளித்த திருவாசகம்" என்ற தலைப்பில் பேசுமாறு பணித்து விட்டார்கள். சங்க இலக்கியங்களை ஓரளவு கற்றவனே அல்லது, சமய இலக்கியம் படித்தவன் அல்லன். ஆனாலும் திருக்கோவையாரில் ஒரு சில பாக்களைப் பள்ளியில் படித்தவன். என் தந்தையார், மார்கழிமாத விடியற்போதில் படிக்கும் திருவாசகப் பாக்களைப் கேட்டுக் கேட்டுச் சில பாடல்களை நினைவில் வைத்திருப்பவன். அதனால் தன் மகள் அவள் விரும்பும் இளைஞனோடு அவன் சென்றுவிட்ட போது, அவர்களைத் தேடிச்சென்ற தாய், எதிரே வந்த ஓர் இள ஆணையும், ஓர் இள மகளையும் அணுகி, உங்களைப் போன்ற இருவர் இவ்வழியில் செல்வதைக் கண்டீர்களா எனக்கேட்க, அதற்கு அந்த இளைஞன், ஒன்று இருவரையும் பார்த்தேன் அல்லது இல்லை என்று கூறியிருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக 'என்னைப்போன்ற இளைஞரைப் பார்த்தேன்" எனக்கூறிவிட்டுத் தன்பக்கத்தில் நிற்கும் தன் காதலியைப் பார்த்து "இந்த அம்மா, வேறுயாரோ ஒருவரைப்பற்றிக் கேட்கிறார்களே! அவர்களைப்பற்றி உனக்குத் தெரியுமா?" எனக் கேட்டதாக வரும்.

"ஆளி அன்னானைக் கண்டேன் அயலே தூண்டா விளக்கனையாய்? என் மாயோ அன்னை சொல்லியதே" என்ற பாட்டைப் பாடிவிட்டு எதிரில் இருவர் வர, ஆணை மட்டும் பார்த்துப் பெண்களைப் பார்க்காத அக்கால இளைஞரின் நாகரீகம் எங்கே? அழகிய இளமகளிரை எங்கெல்லாம் காணலாம் என அலைபாயும் உள்ளத்தோடு, மகளிர் கல்லூரி வாயில்களிலும்: திரையரங்குத் திடல்களிலும் காத்துக் கிடக்கும் இன்றைய இளைஞரின் நாகரீகம் எங்கே எனக் கேட்டு முடித்தேன்.

அடுத்து 'தந்தது உன் தன்னை; கொண்டது என் தன்னை'' என்ற—திருவாசகத் தொடரை எடுத்துக்கொண்டு. தருதல் என்றால், கொடுப்பவன் தாழ்ந்து, வாங்கிடுவான் உயர்ந்து நிற்கும்போது ஆள வேண்டியசொல், இங்கு 'தந்த உன் தன்னை' எனக் கூறியதன் மூலம், சிவனைத் தாழ்ந்தவனாகவும், தன்னை உயர்ந்தவனாகவும் மதித்துள்ளரே மணிவாசகர், இது ஏன் என்ற கேள்வியைக் கேட்டுவிட்டுப் பேச்சை முடித்துக் கொண்டேன்.

தலைமையுரையில், ஞானியார் அவர்கள் ''கோவிந்தன் பேசிய நேரம் சிறிய நேரம் என்றாலும், என் சிந்தனைக்கு மட்டுமல்லாமல் தலைவர் சிந்தனைக்கும் அரியவேலை கொடுத்துவிட்டார்'' எனக்கூறிப் பாராட்டினர்.

மற்றுமொரு நிகழ்ச்சி: நான் வித்துவான் பட்டம் பெறாதநேரம். ஆசிரியர்பால் பின்னர் தமிழ் கற்கவந்த கோமான் மா. வீ. ராகவன் அவர்கள், அந்த ஆண்டு வித்துவான் தேர்வு எழுதியிருந்தார். அந்நிலையில், திருவத்திபுரத்திற்கு வருகைதந்த, எங்கள் ஆசிரியரின் ஆசிரியர் கரந்தைக் கவியரசு ஆர். வெங்கடாசலம்பிள்ளை அவர்கள், ராகவன் தேர்வில் நன்றாக எழுதியுள்ளார்

எனக்கூறினார். அதுகேட்ட ஔவை அவர்கள் என்னைக் சுட்டிக்காட்டி ''இவன் அவனை விடத் தெளிவாகப் படித்தவன்'' என்று கூறிச்சென்றுவிட்டார்.

கவியரசு அவர்கள் என்னை அருகில் அழைத்து அணைத்துக் கொண்டு, இலக்கியத்திலும், இலக்கணத்திலு மாகச் சில கேள்விகளைக் கேட்டார். கூடுமானவரை நல்ல விடையே கூறினேன், என் அறிவு எனக்குத் தானே தெரியும். மேலும் அவர் கேட்டால் விழிக்கவேணடி நேரும். ஆசிரியர் நற்சான்றிற்கு மாசு நேரக்கூடும் என்பதால் கவியரசை விட்டு ஒடி விடத் திட்டமிட்டு அவரிடம் ஓர் ஐயம் எழுப்பினேன். ''தொல்காப்பியர் எழுவாய் வேற்றுமைக்கு இலக்கணம் கூறும்போது எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே'' என்றார். அதாவது சொல் எவ்விதத்திரிபும் இல்லாமல்இருப்பது அவ்வாறு கூறிய அவரே 'நீயிர்' என்ற எழுவாய்ச் சொல்லுக்கு இலக்கணம் கூறும் போது ''நம்முன் திரிபெயர்'' என்று கூறியுள்ளார். இதுமுன்கூறிய இலக்கணத்திற்கு முரண் ஆகாதா? நும்மின் திரி பெயராகிய நீயிர் என்பது பிறவேற்றுமைகளை ஏற்கும் போது மீண்டும் நும் எனத்திரிந்து, ''நும்மைநும்மால்'' என ஆவானேன் என்ற இரு ஐயங்களை எழுப்பினேன். அவர் சிந்திக்கத் தொடங்கி விட்டார். விட்டால் போதும் என ஓடிவிட்டேன்.

பள்ளியில் மற்றொரு தமிழாசிரியர் திரு பாலசுந்தர நாயகர் அவர்கள் வித்துவான் தேர்வில் வெற்றி பெற்றார். அதற்கு ஒரு பாராட்டு விழாநடத்த தலைமை ஆசிரியரின் அனுமதி கேட்டோம்; அவர் மறுத்துவிட்டார். பானுகவி மாணவர் கழகமும் விழா நடத்தமுன் வரவில்லை. அதனால், ஔவைத் தமிழ் மாணவர் கழகம் என்ற புதிய கழகத்தைத் தொடங்கி அவருக்கு மிகப்பெரிய பாராட்டு விழாவினை நடத்தினோம்.

ஓராண்டு கழிந்தது: 1936இல் முதலாண்டுவிழா நடத்த முடிவுசெய்தோம். விழாத் தலைமைக்கு மறைமலை அடிகளாரை அழைக்க முடிவு செய்தோம். ஆசிரியர் ஔவை அவர்கள் அவருக்குக் கடிதம் எழுத, அடிகளார் ஒரு நாளைக்கு 100 வெண்பொற் காசுகள் (அதாவது ரூபாய்) தரவேண்டும் என்றும் உணவு இவ்வகையில் இருக்கவேண்டும் என்றும் பதில் எழுதி விட்டார்.

எங்களிடம் அவ்வளவு தொகை இல்லை; ஆனாலும் மறைமலையாரை அழைக்கும் ஆசையும் குறையவில்லை. ஒருநாள் ஆசிரியர் அவர்களிடமும் சொல்லாமல் பல்லாவரம் சென்று, அரைக்கிலோ கற்கண்டு, 2 சீப்பு வாழைப்பழம், வெற்றிலை பாக்கு, மலர்மாலை இவற்றை வாங்கிக்கொண்டு அடிகளார் மாளிகைசென்று ஒரு தட்டுவாங்கி, அதில் இவற்றை வைத்து எடுத்துக்கொண்டு அவரிடம் சென்று அவர் கையில் கொடுத்துவிட்டுக் காலில் வீழ்ந்து வணங்கினேன். (நான் வணங்கிய முதல்வர் அவர்தான்)

வாழ்த்தி எழுந்திருக்கப் பணித்துவிட்டு: யார்? வந்தது ஏன் என வினவினார்; அழைக்க வந்தேன் என்றேன். ஔவைக்குக் கடிதம் எழுதிவிட்டேனே என்றார். கையில் இருப்பது 200 வெள்ளிக்காசுகள் தாம் என்றாலும் தாங்கள் வந்து விழாத்தலைமை தாங்கவேண்டும் என வேண்டிக் கொண்டேன். ஒப்புக்கொண்டார்.

1936 மே 24, 25, 26 ஆகிய நாட்களில், திருவத்திபுரம் எங்கள் தெருவில், கோயிலை அடுத்ததெருவில், அவருக்காகப் பெரிய பந்தல் போட்டு விழா நடத்தினோம்.

வித்துவான் பட்டம் பெற்ற பின்னர், பி. ஒ. எல். பட்டம் பெறவேண்டும் என்ற ஆசை எழுந்தது, கல்லூரி சென்று படிக்காமல் வீட்டிலிருந்தே தேர்வு எழுதுவதானால் 3 ஆண்டு ஆசிரியராகப் பணிபுரிந்திருக்கவேண்டும்; தேர்வுக்குப் பதிவுசெய்யும் போது ஆசிரியராக இருக்க வேண்டும் என்பது பல்கலைக்கழக விதி. அதனாலும் இரண்டாம் உலகப்போர் காரணத்தால் அறிஞர் அண்ணா உள்ளிட்ட கழகத்தவர் அனைவரும் போரில் அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா அணிக்கு ஆதரவாக பிரசாரம்செய்ய முனைந்து விட்டனர் அதனாலும் பள்ளியில் என் பழைய தமிழாசிரியர் சென்ற அதே பள்ளியில் ஆசிரியராக 1942-இல் சேர்ந்தேன். 1944 வரை பணிபுரிந்தேன். அங்கும் தமிழ்ப்பணி தொடர்ந்தது.

பி.ஒ எல். தேர்வில் முதல்பகுதி. பி.ஏ. வகுப்பிற்குரிய ஆங்கில இலக்கியம் இரண்டாம்பகுதி. தமிழ் வித்துவான் தேர்வு, மூன்றாம் பகுதி. திராவிட மொழி ஒப்பிலக்கணமும், தென்னிந்திய வரலாறும் (ஆங்கிலத்தில்) இரண்டாம் பகுதியை முன்னரே படித்து விட்டேன். முதல் பகுதியையும் முடித்து விட்டேன். மூன்றாம் பகுதியில் தென்னிந்திய வரலாற்றுக்குரிய நூல்களாகிய திரு. நீலகண்ட சாஸ்திரியாரின் சோழர் வரலாறு, பாண்டியர் வரலாறு, திரு. கோபாலன் அவர்களின் பல்லவ வரலாறு, திரு. பி. டி. சீனிவாச அய்யங்கார் அவர்களின் தமிழர் வரலாறு ஆகிய ஆங்கில நூல்களை வாங்கிக்கொண்டேன். கால்டுவெல் ஒப்பிலக்கணத்தை இலண்டனில் உள்ள தம் நண்பர்மூலம் வாங்கித்தந்தார் ஆசிரியர்.

அவற்றைப் படிக்கும்போது கால்டுவெல் ஒப்பிலக்கணத்தையும், பி. டி. எஸ். அவர்களின் தமிழர் வரலாற்றையும் தமிழில் மொழிபெயர்த்தால் பி. ஓ. எல். படிக்கும் மாணவர்களுக்குப் பயன்படும் என எண்ணினேன்.

வேலூரில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது, தென் இந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தலைவர், தாமரைச் செல்வர், அமரர் சுப்பையாபிள்ளை அவர்கள் சென்னையில், பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் தலைமையில் 22—2—42இல் நடைபெறும் நற்றிணை மாநாட்டில் பாலை என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றுமாறும், ஆற்றும் சொற்பொழிவை அப்படியே எழுதித் தருமாறும் வேண்டினார். நானும் அது செய்தேன்.

அம்மாநாட்டினைத் தொடர்ந்து திரு. சுப்பையா அவர்களின் நட்பு தொடர்ந்தது. இலக்கியம் தொடர்பான நூல்களை எழுதித் தருமாறு அன்புக் கட்டளை இட்டார். "திருமாவளவன்" என்ற முதல் நூல் 1951இல் வெளிவந்தது. [என் முதல் மகனின் பெயரும் திருமாவளவன் என்பது குறிப்பிடல் நலம்.] அதைத் தொடர்ந்து சங்ககாலப் புலவர் என்ற வரிசையில் 16 நூல்களையும் அரசர் என்ற வரிசையில் ஆறு நூல்களையும் வெளியிட்டார். புலவர் வரிசையில் முதல் நூல் 1952லும், அரசர் வரிசையில் கடைசி நூல் 1955லும் வெளிவந்தன.

தமிழ் எழுத்தாளர் உலகிற்கு அறிமுகமாகாத என் நூல்கள் இருபத்தைந்தை மூன்றாண்டு கால அளவில் வெளியிட்டு, எனக்குப் பெருமை சேர்த்த திருவாளர் பிள்ளை அவர்களுக்கு நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

எழுத்துப் பணி தொடர, மலர் நிலையம், வள்ளுவர் பண்ணை, அருணா பதிப்பகம் என்ற வெளியீட்டாளர் மூலம் பல நூல்கள் வெளிவந்தன. அரசியல் பணிகளுக்கிடையே கால்டுவெல் அவர்களின் ஒப்பிலக்கண மொழி பெயர்ப்பு 1959-ல் வள்ளுவர் பண்ணை மூலம் வெளிவந்தது.

1990 ஏப்ரல் 15 ஆம் நாளன்று, என் ஐம்பதாவது நூலாக திரு. பி. டி. சீனிவாச அய்யங்கார் அவர்களின் தமிழர் வரலாறு மொழிபெயர்க்கப் பெற்று, திரு. பிள்ளை அர்களின் மருகர் திரு. இரா. முத்துக்குமாரசுவாமி அவர்கள் முயற்சியால் கழக வெளியீடாக வெளியிடப் பெற்றது அவருக்கு நன்றி.

இப்போது (1921) அவர் பணிக்க திருவாளர் வி.ஆர் இராமச்சந்திர தீக்ஷிதர் அவர்கள் Origin and Spreap of Tamils, ['தமிழரின் தோற்றமும் பரவலும்'] என்ற நூல் மொழி பெயர்க்கப்பட்டு அச்சடிக்கப்பட்டுள்ளது. திருவாளர் பி. டி. சீனிவாச அய்யங்கார் அவர்களின்(Pre Aryan Tamil Culture) [ஆரியர்க்கு முந்திய தமிழர் பண்பாடு] ஆகிய நூலை மொழிபெயர்த்து முடித்துவிட்டு, அவரின் மற்றொரு நூலாகிய Stone Age in India (இந்தியாவில் கற்காலம்) என்றநூலை மொழி பெயர்க்க எடுத்துக்கொண்டுள்ளேன். என் எழுத்துப்பணி தொடரும். குறள்பற்றி சங்க இலக்கியங்கள் பற்றி பலதலைப்புகளில் நூல்எழுதக் குறிப்பு எடுத்து வைத்துள்ளேன். ''கல்விகரையில; கற்பவர் நாள் சில'' காலம் இடம் தந்தால் என் எழுத்துப்பணி ஓரளவேனும் முற்றுப்பெறும்.

—oo—

## இணைப்பு: 3

## தமிழக அரசு வழங்குந் தமிழ்த் தென்றல் திரு. வி. க. விருது 26—8—1990

புலவர். கா. கோவிந்தன் அவர்கள் வடஆர்க்காடு திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் செய்யாற்றில் 1915 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15ஆம் நாள் திரு. காங்க முதலியார்அவர்களுக்கும், திருமதி சுந்தரம் அம்மையாருக்கும் பிறந்தவர்.

உரைவேந்தர் ஔவை துரைசாமியவர்களிடம் தமிழ்க் கல்விபயின்ற புலவர் அவர்கள் தம் ஆசானைப்போலவே சங்க இலக்கியப் பெரும்புலமையும்,சான்றாண்மையும் நிரம்பியவர். உலகப் புகழ்பெற்ற அறிஞர் கால்டுவெல் அவர்களின் ஒப்பரிய இலக்கண நூலாகிய திராவிடமொழிகள் ஒப்பிலக்கணத்தை மொழியாக்கம் செய்தபெருமையும், பி. தி. சீனுவாச அய்யங்காரின் தமிழர்வரலாறு எனும் பெருநூலை இரண்டு தொகுதிகளாக மொழியாக்கம் செய்ததுடன் வரலாற்றுக் கருத்துக்களில் வழுவிய இடங்களிலெல்லாம் தமிழ்வளம் மிளிரச் செப்பம்செய்து வெளியிட்ட பெருமையும் புலவர் அவர்களையே சாரும்.

சட்டமன்றத்தின் பேரவைத் துணைத் தலைவராகவும், பின்னர் தலைவராகவும் பொறுப்பேற்று சிறப்புறச் செயல் ஆற்றினார்.

''புலவர் கோவிந்தன், அவர்கள் தரணியில் மற்ற நாடுகள் எல்லாம் ஆட்சிமுறை அமைத்துக்கொள்ளாத காலத்திலேயே, உலகமே பார்த்து வியக்கத்தக்க விதத்தில், அரசியல் நடத்திவந்த தமிழகத்தின் அருமை பெருமைகளை, இலக்கிய வாயிலாகவும், வரலாறுகள் வாயிலாகவும் நன்றாக அறிந்தவர். இச்சட்டமன்றத்தின் துணைத் தலைவராகப் புலவர் அமர்வது நமக்கெல்லாம் நல்வாய்ப்பினை அளிப்பதாக அமைந்திருக்கிறது'' என்று முன்னாள் தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் பாராட்டினார்கள்.

''தமிழ்நாட்டுச் சட்டமன்ற வரலாற்றில் பேரவைத் தலைவராக, அருந்தமிழ்ப் புலவர் இடம் பெறுவது இதுதான் முதன்முறையாகும். இலக்கியப் பெருமை வாய்ந்த மன்னர்களால் புகழப்பட்ட புலமை தமிழ்நாட்டின் அரியணையில் ஏற்றப்பட்டுப் புகழப்படுகிறது'' என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாராட்டினார்.

''திருமாளவன்'', ''சங்ககாலப் புலவர் வரிசை'', ''சங்க கால அரசர் வரிசை'', ''கால்டுவெல் ஒப்பிலக்கணத் தமிழாக்கம்'', ''நற்றிணை விருந்து'', ''குறுந்தொகைக் கோவை'', ''இலக்கிய வளர்ச்சி'', ''குறிஞ்சிக் குமரி'', ''நெய்தற்கன்னி'', ''முல்லைக்கொடி'', ''மருதநில மங்கை'' ''பாலைச்செல்வி'', ''தமிழர்வாழ்வு'', போன்ற 50க்கும் மேற்பட்ட அரிய பல நூல்களைப் படைத்துள்ளார்கள்.

புலவர். கா. கோவிந்தன் அவர்களின் பெருந்தமிழ்ப் பணியைப் போற்றிப் பாராட்டும் வகையில் தமிழகஅரசு 1990-ஆம் ஆண்டிற்குரிய திரு. வி. க. விருதை வழங்கி மகிழ்கிறது''.

நன்றி: தமிழகஅரசு.

## இணைப்பு: 4

## மதுரை காமராசர் பல்கலைக் கழக 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' பட்டம் 7—10—1991.

புலவர். கோவிந்தனார்

"திராவிட இயக்க வரலாற்றிலும், அத்துடன் இரண்டறக் கலந்துவிட்ட தமிழகத்தின் ஐம்பது அறுபது ஆண்டுக்கால வரலாற்றிலும் ஒருசிறப்பான இடத்தைப் பெற்றுள்ள புலவர் கோவிந்தனார் அவர்களுக்கு நம் பல்கலைக்கழகம் இன்று 'தமிழ்ப்பேரவைச் செம்மல்' என்னும் உயரிய பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்திப் பொற்பதக்கம் அளித்துப் பாராட்டுகிறது.

புலவர் கோவிந்தன் அவர்கள் சைவமும் தமிழும் தழைத்தோங்கிய குடும்பத்தில் 1915 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 ஆம் நாள், காங்கமுதலியாருக்கும் சுந்தரம் அம்மையாருக்கும் ஆறாவது மகனாகப்பிறந்தவர். செய்யாறு உயர்நிலைப் பள்ளியில், உரைவேந்தர்; சித்தாந்த கலாநிதி ஔவை சு. துரைசாமிப்பிள்ளையவர்களிடம் தமிழ்பயின்ற பெருமை இவருக்கு உண்டு. இவருக்கு இளமையிலேயே அறிஞர் அண்ணாவுடன் நெருங்கிய தொடர்பு உண்டு.

1934 ஆம் ஆண்டு, பள்ளிப் படிப்பை முடித்தபின், கொஞ்சம் கொஞ்சமாகப் பெரியார் ஈ. வெ. ரா அவர்களின் சுயமரியாதைக் கொள்கைகளினால் புலவர். கோவிந்தனார் ஈர்க்கப்பட்டார். 1937 ஆம் ஆண்டு நிகழ்ந்த இந்தி

எதிர்ப்பு இயக்கத்தில் தம்மையும் இணைத்துக் கொண்ட புலவர் அவர்கள், அன்றிலிருந்து முழுநேர அரசியலில் அடியெடுத்து வைத்தார்.

1936 ஆம் ஆண்டில் 20 வது வயதில் புலவர் அவர்கள் தம்முடைய மாமன் மகள் கண்ணம்மாவை மணந்தார். 1941 ஆம் ஆண்டில் அவர், வேலூர் நகரில் திருமலை திருப்பதி தேவஸ்தானம் நடத்திய வேங்கடேசுவர் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியர் பணியில் சேர்ந்தார். அக்காலத்தில் புலவர் அவர்கள் பலஊர்களுக்குச் சென்று இலக்கியச் சொற்பொழிவுகள் ஆற்றி வந்தார்.

வித்துவான், பி. ஓ. எல்., எம். ஏ., என்பன புலவர் அவர்கள் பெற்றுள்ள கல்விப் பட்டங்கள் ஆகும்.

அறிஞர் அண்ணா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, செய்யாறு நகரிலிருந்து வெளிவந்த 'போராட்டம்' வார இதழில் 'புலவர்', புலவர் கோ, என்ற புனைப்பெயரில் இலக்கியக் கட்டுரைகளையும், 'கேஜி', 'நளன்' என்ற புனைப் பெயர்களில் அரசியல் கட்டுரைகளையும் புலவர் அவர்கள் எழுதியுள்ளார்.

1962 ஆம் ஆண்டு நிகழ்ந்த பொதுத்தேர்தலில் புலவர் அவர்கள் செய்யாறு தொதிகுயில் வேட்பாளராகப் போட்டியிட்டுவெற்றி பெற்றார். சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய நாட்களில் (1962-67) சட்டமன்றத்திலேயே மிகுந்த கேள்விளை எழுப்பியவர் என்ற சிறப்பைப் பெற்றவர் நம் புலவர் அவர்கள்.

1967 இல் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் அமைந்த தி. மு. கழக ஆட்சியில் சட்டப் பேரவையின் துணைத்தலைவராகப் புலவர் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார். பின், புலவர் அவர்கள் 1969, பிப்ரவரி 22ஆம் நாள் ஒருமனதாகச் சட்டப் பேரவைத் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். இவர் துணைத் தலைவராகவும், தலை வராகவும் பணியாற்றிய கால கட்டத்தில்தான் பல முக்கியமான சட்டங்கள் நிறைவேற்றப் பட்டன என்பது இங்கே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

அரசியல்பணி புலவர் அவர்களின் புறப்பணி என்றால், தமிழ்ப் பணி அவரது அகப்பணி ஆகும். 'சங்ககாலப்புலவர் வரிசை', 'சங்ககால அரசர்வரிசை,' 'பண்டைத்தமிழர் போர் நெறி' கால்டுவெல் ஒப்பிலக்கணத் தமிழாக்கம், முதலான நூல்கள் அவரது இலக்கியப் பணிக்குக் கட்டியம் கூறுவனவாகும். இலக்கியம், இலக்கணம், வரலாறு என்னும் முத்துறைகளிலும் மிகுந்த நூல்களைப் படைத்தவர் புலவர் கோவிந்தன் அவர்கள்.

தமிழால் வளர்ந்து, தமிழை வளர்த்து, தமிழ்த் தொண்டால் உயர்வு பெற்ற புலவர் கோவிந்தனார் அவர்களுக்குத் 'தமிழ்ப் பேரவைச் செம்மல் (1986) என்ற பட்டத்தினை வழங்கி, மதுரை காமராசர் பல்கலைக்கழகம் பெருமைப்படுகிறது.

நன்றி:

மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் தமிழ்ச் செம்மல்கள் பேரவை.

ஃ ஃ ஃ

# மனையுறை புறாக்கள்

| பக்க எண் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| V | 7 | நற்றினை | நற்றிணை |
| பொருளடக்கம் | 12 | நட்டு | நாட்டு |
| 12 | 23 | பண்ணு | மண்ணு |
| 16 | 27 | மேய்வதே | மேய்வதை |
| 17 | 1 | ஓய்ந்திராதுக | ஓய்ந்திராது |
| 17 | 18 | என்று | கன்று |
| 19 | 26 | வர் | வரி |
| 20 | 5 | தோலும் | தோறும் |
| 21 | 23 | நிறைத்தே | நிறைந்தோ |
| 22 | 17 | பெருள் | பொருள் |
| 22 | 20 | கழுகஞ் | கமுகஞ் |
| 23 | 17 | புண் | புன் |
| 23 | 19 | பூர்க்கம் | பீர்க்கம் |
| 24 | 23 | கழுகின் | கமுகின் |
| 27 | 27 | சுற்றூராய்த் | சிற்றூராய்த் |
| 28 | 10 | ஊடை | ஊடே |
| 30 | 27 | வேண்டுவயின் | வேண்டுவயின் |
| 31 | 10 | அதானால் | அதனால் |
| 35 | 16 | காலத்லை | காலத்தை |
| 38 | 11 | அதானால் | அதனால் |
| 44 | 29 | தன் | தண் |
| 45 | 13 | அக்கால | அக்கல |
| 45 | 18 | இத்தளம் | இந்தளம் |
| 45 | 19 | இறும்பு | இரும்பு |
| 47 | 14 | இத்தள | இந்தள |

| பக்க எண் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 47 | 27 | ெருருப்பு | நெருப்பு |
| 63 | 6 | காலல் | காவல் |
| 88 | 19 | மெல்டிய | மெல்லிய |
| 88 | 25 | சிவந் | சிவந்த |
| 89 | 5 | எழுந்த | எழுந்து |
| 89 | 13 | பாஷை | பாளை |
| 89 | 21 | இடத்தள | இடத்தன |
| 90 | 15 | மலைப் | மாலைப் |
| 91 | 1 | பொருள்களாய் | பொருள்களால் |
| 91 | 17 | பெருந்தும் | பொருந்தும் |
| 95 | 11 | ஒன்றிற் | ஒன்றற் |
| 95 | 25 | தோடி | தொடி |
| 96 | 9 | துத்யரை | துயரை |
| 96 | 22 | செல்வானம் | செவ்வானம் |
| 97 | 19 | விடும் | விழும் |

# எழிலகம் வெளியீடுகள்

## இலக்கியம்

**புலவர் கா. கோவிந்தனார் படைப்புகள்**

| | | |
|---|---|---|
| 1. | புண் உமிழ் குருதி | 10-00 |
| 2. | அடு நெய் ஆவுதி | 10-00 |
| 3. | கமழ் குரல் துழாய் | 10 00 |
| 4. | சுடர் வீ வேங்கை | 10-00 |
| 5. | வடு அடும் நுண் அயிற் | 10-00 |
| 6. | காவிரி | 20-00 |
| 7. | சிலம்பொலி | 12-00 |
| 8. | வள்ளுவர் சொல்லாட்சி மாட்சி | |
| 9. | மனையுறை புறாக்கள் | |

## வரலாறு

**ஆசிரியர் டாக்டர் கோ. திருமாவளவன்**

| | | |
|---|---|---|
| 1. | சம்புவரையர் | 10-00 |
| 2. | புலவர் வாழ்வும் பணியும் | 10-00 |
| 3. | History of the Cholas | |


# எழிலகம்

46, செல்வ விநாயகர் கோவில் தெரு,

திருவத்திபுரம்-604 407

MK Colour Process, Madras-14. Phone : 841478